
# ஆரம்பக்கல்வி

## ELEMENTARY EDUCATION

2 - NOV 1963





அக்டோபர் — 1963



மகாத்மா காந்தி அடிகள்

ஆரம்பக்கல்வி ஆபீஸ்
94-95, புது தெரு
மண்ணடி, சென்னை-1

சென்னை புதிய மந்திரி சபை






ஆரம்பாசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை நிர்வாகிகள்
முன்னேற்றத்திற்கு உழைக்கும் இதழ்.

ஆசிரியர் பி. வீரராகவன்

ஆண்டு சந்தா ரூ. 3] [தனி இதழ் 25 ந. பை.

மலர் 25 } அக்டோபர் 1963 { இதழ் 10

# எண்ணிக்கை உயர்ந்தது!
## ஆனால்
# தரம் தாழ்ந்தது!

தற்போது நடைமுறையில் உள்ள இந்திய அரசியல் திட்டமானது, அந்தத் திட்டம் நடைமுறைக்கு வந்து பத்து ஆண்டுகளுக்குள், இந்த நாட்டில் உள்ள பள்ளிக்கூடம் செல்லும் வயதுடைய எல்லாப் பிள்ளைகளுக்கும் ஆரம்பக் கல்வி அளிக்கப்பட்டாக வேண்டும் என்று தெரிவித்திருக்கிறது.

இந்தத் திட்டம் நடைமுறைக்கு வந்த ஆண்டு, 1950.

தற்போது நடைபெறும் ஆண்டு, 1963.

ஆகவே, அரசியல் திட்டம் நடைமுறைக்கு வந்து ஆண்டுகள் பதின்மூன்று உருண்டு ஓடிவிட்டன.

என்ற போதிலும், எல்லாப் பிள்ளைகளுக்கும் ஆரம்பக் கல்வி அளித்தல் என்னும் திட்டம் இன்னமும் முழு வெற்றியை அடைய வில்லை. பள்ளிக்கூடம் செல்லும் வயதுடைய—ஆனால் பள்ளிகளிற் சேர்க்கப்படாமல் இருக்கிற பிள்ளைகள் இன்னமும் ஏராளமாக இருக்கிறார்கள்.

ஆனால் அரசியல் திட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள நோக்கம் முழுமையாக நடைமுறைக்கு வரவில்லையே தவிர அந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு உரிய ஏற்பாடுகளை, இந்தியாவில் உள்ள பல்வேறு மாநில அரசாங்கங்கள் படிப்படியாகச் செய்து வருகின்றன என்பதை யாரும் மறக்க முடியாது.

தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில், இங்கே உள்ள ஆரம்பப் பள்ளிக்கூடங்களின் எண்ணிக்கை, ஆண்டுக்கு ஆண்டு, உயர்ந்து கொண்டே வருகிறது என்பதை அனைவரும் அறிவர்.

தமிழ்நாடு முழுவதிலும், 1947–ல் இருந்த ஆரம்பப் பள்ளிக் கூடங்களின் எண்ணிக்கை 11,000 தான். ஆனால் தற்போதோ அந்த எண்ணிக்கை 28 000 ஆக உயர்ந்திருக்கிறது. அதுபோலவே, தமிழ்நாடு முழுவதிலும் 1947ல் ஆரம்பக் கல்வியைப் பெற்று வந்த மாணவ மாணவிகளின் எண்ணிக்கை 22 இலட்சம்தான். ஆனால் தற்போதோ அந்த எண்ணிக்கை 48 இலட்சமாக உயர்ந்திருக்கிறது.

இந்தப் புள்ளிவிவரங்களைக் காணும்போது தமிழக மக்களின் உள்ளங்களெல்லாம் இன்ப வெள்ளத்தில் நீந்தி மகிழ்வது இயற்கை.

விண்ணிலே அசைந்தாடும் வெண்ணிலவைக் கண்டதும், மண்ணிலே கூத்தாடும் முல்லையும் மல்லிகையும் அல்லியும் மலர்ந்து மணம் வீசத்தான் செய்யும். மழை முகம் கண்டதும் பயிர்முகம் புன்னகை பூக்கத்தான் செய்யும். தாய் முகத்தைப் பார்த்ததும் சேய்முகத்தில் மகிழ்ச்சி தாண்டவ மாடத்தான் செய்யும். இவற்றைப் போலவேதான், புதிது புதிதாக ஆரம்பப் பள்ளிக்கூடங்கள் தொடங் கப்படுகின்றன என்கிற நற்செய்தியை அறிந்ததும் நல்லறிவாளர் களின் இதயங்கள் இன்பப் பூந்தோட்டங்களாக மாறுவதும் இயற்கை. ஏனென்றால், ஒவ்வோர் ஆரம்பப் பள்ளிக்கூடமும், நூற்றுக்கணக்கான இளம் பிள்ளைகளின் உள்ளங்களில் அறிவு ஒளியைப் பாய்ச்சும் ஒவ்வொரு கலங்கரை விளக்கம் ஆகும். அது மட்டும் அல்ல. ஒவ்வோர் ஆரம்பப் பள்ளிக்கூடமும் எதிர்காலக் குடிமக்களை உருவாக்கும் இக்காலத்தின் ஒவ்வோர் உலைக்கூடமும் ஆகும். புதியதோர் ஆரம்பப் பள்ளிக்கூடம். தொடங்கப்படுகிறது என்றால், புதியதோர் அறிவாலயம் உருவாக்கப்படுகிறது என்று பொருள்.

எனவேதான் ஆரம்பப் பள்ளிக்கூடங்களின் எண்ணிக்கை உயர உயர, நாட்டின் நலன் நாடும் நல்லறிஞர்களின் மகிழ்ச்சியும் பெருகிக்கொண்டே போகிறது. ஆனால் ஒன்று. பள்ளிக்கூடங் களின் எண்ணிக்கை பெருகுவதைக் கண்டு பெருமகிழ்ச்சி அடைகிற பேரறிவாளர்கள், அந்தப் பள்ளிக்கூடங்களின் வாயிலாகப் புகட்டப் படுகிற கல்வியின் தரம் நாளுக்கு நாள் மறைந்து வருவது கண்டு மட்டற்ற துயரம் அடைகிறார்கள்.

கல்லூரிகள், உயர்நிலைப் பள்ளிகள் ஆகியவற்றின் வாயிலாக அளிக்கப்படுகிற கல்வியின் தரம் தாழ்ந்து வருவதைப் போலவே தான் ஆரம்பப் பள்ளிகள் வாயிலாக அளிக்கப்படுகிற கல்வியின் தரமும் நாளுக்குநாள் தேய்ந்து வருகிறது என்று, பல துறையினரும் பல நிலையினரும், அடிக்கடி வேதனைக்குரல் எழுப்பிவருகிறார்கள்.

நாட்டை ஆள்கின்ற பொறுப்பை ஏற்றுள்ள அமைச்சர்கள் முதல் வீட்டை ஆள்கின்ற பொறுப்பில் உள்ள குடும்பத் தலைவர்கள் வரை, ஆயிரமாயிரம் மக்களின் பேராதரவையும் பெருமதிப்பையும் பெற்றுள்ள அரசியல் தலைவர்கள் முதல் பொறுப்பும் சிறப்பும் மிகுந்த பதவிகளில் வீற்றுள்ள அரசாங்க அதிகாரிகள்வரை, பல்லா யிரக்கணக்கான பிரதிகள் விற்கின்ற பத்திரிகைகளின் ஆசிரியர்கள் முதல் சட்ட நிபுணர்கள்—மருத்துவ வல்லுநர்கள்—பொறியியல் புலவர்கள்—வழக்குத்துறை அறிஞர்கள் வரை, ஏறத்தாழ எல் லோருமே, இந்தக் குற்றச்சாட்டை வீசத்தான் செய்கிறார்கள்.

எங்கும் தரக் குறைவு என்பதே பேச்சு என்று கூறினால் அது மிகையாகாது.

பள்ளிக்கூடங்களின் எண்ணிக்கை உயர்ந்து கொண்டேவரு கிறது என்னும் செய்தியைக் கேள்விப்படும்போது இதயம் முழு வதும் நிறைகிற இன்பமும் எழுச்சியும், அங்கே அளிக்கப்படுகிற கல்வியின் தரம் தாழ்ந்து கொண்டேவருகிறது என்னும் செய்தியைக் கேள்விப்பட்டதும், துன்பமும் வீழ்ச்சியுமாக மாறிவிடுகின்றன.

தரம் தாழ்ந்து வருவது ஏன்? என்ன காரணம் இந்த வேதனை மிக்க நிலைமைக்கு ?

"கல்வித் துறையில் அரசியல் கண்ணோட்டத்தின் ஆதிக்கம் மிகுந்திருப்பதுதான் கல்வியின் தரம் தாழ்ந்து வருவதற்குரிய தலை யாய காரணம்" என்று, சென்னைப் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தரும், கல்வித் துறையில் நெடுங்காலமாக ஈடுபட்டிருப்பவரும், தென்னகத்தின் தலைசிறந்த அறிஞர் பெருமக்களில் ஒருவரும், அனைத்துலகப் புகழ் படைத்தவருமாகிய டாக்டர் ஏ. இலட்சுமண

சாமி முதலியார் அவர்கள், 23—10—1963 அன்று மதுரைமா நகரில் சொற்பொழி வாற்றும்போது தெரிவித்திருக்கிறார்.

டாக்டர் அவர்கள் தெரிவித்துள்ள இந்தக் கருத்து முற்றிலும் உண்மை என்பதை, உண்மை நிலைமையை உணர்ந்த யாரும் மறுத்தல் இயலாது.

சென்ற பத்து அல்லது பதினைந்து ஆண்டுகளாகத்தான் கல்வியின் தரம் பெரிதும் தாழ்ந்து வந்திருக்கிறது. இந்தப் பத்து அல்லது பதினைந்து ஆண்டுகளில்தான் கல்வித்துறையில் அரசியல் கண்ணோட்டத்தின் ஆதிக்கமும் மிகுந்திருக்கிறது. உண்மை நிலைமையை அச்சம் தயை தாட்சண்யம் இன்றி எடுத்துக் கூறுவதானால், இந்தியா விடுதலை பெற்ற 1947—ஆம் ஆண்டுக்குப் பிறகுதான், கல்வித்துறையில், வேதனையையும் வெட்கத்தையும், ஒருங்கே அளிக்கவல்ல இந்தப் போக்கு உருவாகி யிருக்கிறது.

இந்தப் பதினைந்து ஆண்டுகளில் தமிழ்நாட்டு அரசாங்கத்தார் எத்தனையோ முறை கல்வித்துறையில் என்னென்னவோ மாறுதல்களைச் செய்திருக்கிறார்கள். அந்த மாறுதல்களையெல்லாம் செய்வதற்கு முன்னால், அரசாங்கத்தார், முறைப்படி நடப்பதாக இருந்தால், கல்வித் துறையில் பழுத்த அனுபவமும் நேர்முக ஈடுபாடும் படைத்த நல்லறிவாளர்களின் ஆய்வுரைகளைக் கேட்டறிந்து, அவர்களுடையஒப்புதலைப் பெற்ற பிறகே,அந்தமாறுதல்களைச்செய்திருக்க வேண்டும். ஆரம்பக்கல்வித்துறையில் ஏதாவது மாறுதல்களைச் செய்வதாக இருந்தால், அரசாங்கத்தார், ஆரம்ப ஆசிரியர்கள் — ஆரம்பப் பள்ளி நிர்வாகிகள் — ஆகிய இரண்டு சாராரின் பிரதிநிதிகளை அழைத்து, அவர்களுடைய கருத்துக்களை உசாவி அறிந்து, அவற்றிற்கு ஏற்ற வண்ணமே மாறுதல்களைச் செய்திருக்க வேண்டும். அது போலவே, உயர்நிலைப் பள்ளிக் கல்வித் துறையில் ஏதாவது மாறுதல்கள் தேவை என்று ஆட்சியாளர்கள் கருதினால், உயர்நிலைப் பள்ளிகளின் ஆசிரியர்கள் — நிர்வாகிகள் ஆகியோரின் பிரதிநிதிகளைக் கொண்ட ஆய்வுக்குழுவிடம், அந்த மாறுதல்களைப் பற்றி அலசி ஆராய்ந்து அறிவுரை வழங்கும்படி கேட்டிருக்க வேண்டும்.

கல்வித் துறையில் மாறுதல்களை அல்லது சீர்திருத்தங்களைச் செய்வதற்கு உரிய முறை இதுதான். ஆனால் ஆட்சியாளர்கள் உண்மையில் இந்த முறையைப் பின்பற்றினார்களா என்றால், இல்லை.

சில சமயங்களில் தங்கள் மனம் போன போக்கில் கல்வித் துறையில் மாறுதல்களைச் செய்திருக்கிறார்கள். வேறு சில சமயங்களில் சட்ட மன்றத்தின் சில உறுப்பினர்களைக் கொண்ட குழுக்களை அமைத்து அக் குழுவினரின் ஆலோசனைப்படிச் செயலாற்றியிருக்கிறார்கள். மற்றும் சில சமயங்களில், குறிப்பிட்ட கல்வித்

துறைக்குத் துளியும் தொடர்பில்லாத—ஆனால் தங்கள் பாசத்திற்கும் நேசத்திற்கும் உரிய யாரோ சிலர் அடங்கிய குழுக்களிடம் அறிவுரை கேட்டுப் பெற்றுச் சீர்திருத்தங்களை நுழைத்திருக்கிறார்கள்.

அரசாங்கத்தார் கையாண்டுள்ள இந்த மூன்று முறைகளும், முற்றிலும் தவறானவை என்பதுமட்டுமல்ல நம்மால் கவனிக்கப்பட வேண்டிய உண்மை, கல்வியின் தரம் தாழ்ந்தும் தேய்ந்தும் வருவதற்கு உரிய தலையான காரணங்கள் இந்த மூன்று முறைகளும்தான் என்பதை இந்த நேரத்தில் அழுத்தந் திருத்தமாக எடுத்துக்காட்ட வேண்டியது நம்முடைய கடமையாகும்.

கல்வித் துறையில் நேர்முக அனுபவமும் நீண்ட கால ஈடுபாடும் உடையவர்களைக் கலந்து ஆலோசிக்காமல், அரசாங்கத்தார், தங்கள் விருப்பம்போல் மாறுதல்களை ஏற்படுத்துவது மாபெருந்தவறு மட்டுமல்ல, மகத்தான குற்றமுங்கூட என்பதை யாரும் மறுக்கமுடியாது. அமைச்சர் பெருமக்கள், அறிவிலும் ஆற்றலிலும் சிறந்தவர்களாக இருக்கலாம்; நீண்டபல ஆண்டுகளாகப் பொதுத் தொண்டு புரிந்து வரும் பெருமையும் புகழும் படைத்தவர்களாக இருக்கலாம்; ஆயிரமாயிரம் மக்களின் இதயங்களைக் கவர்ந்துவிட்ட மாபெருந் தலைவர்களாகவும் வழிகாட்டிகளாகவும் இருக்கலாம். ஆனால் அவர்கள் கல்வித் துறையில் வல்லுநர்கள் அல்லர். ஆகவே, கல்வித் துறையில் அவர்கள் எந்த மாறுதலையும் அவர்களாகச் செய்வது முறை ஆகாது.

அதுபோலவேதான், சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழுக்களிடம்மட்டும் ஆலோசனை கேட்டுவிட்டுக் கல்வித்துறை மாறுதல்களைச் செய்வதும் அறநெறி ஆகாது. ஏனென்றால் சட்டமன்ற உறுப்பினர்கள், பொது மக்களின் பெருவாரியான வாக்குகளைப் பெற்றவர்களே தவிர, கல்வித்துறை வல்லுநர்கள் அல்லர். கல்வித்துறையில் எதைச் செய்வது முறை, எதைச் செய்வது முறையல்ல என்பது பற்றிய தீர்ப்பை அளிப்பதற்குரிய திறமையும் தகுதியும் படைத்தவர்கள், அந்தத் துறையின் ஆசிரியப் பெருமக்களும், நிர்வாக நன்மக்களுமே தவிர, சட்டமன்ற உறுப்பினர்கள் அல்லர்.

சட்டமன்ற உறுப்பினர்களாகவும் இல்லாமல், கல்வித்துறை வல்லுநர்களாகவும் இல்லாமல், வேறு ஏதேதோ துறைகளில் வல்லவர்களாகவோ நல்லவர்களாகவோ உள்ள யாரோ சிலரைக் கொண்ட குழுக்களிடம் ஆலோசனை கேட்டு மாறுதல்களைச் செய்வதும் தவறுதான் என்பதை நிலைநாட்டுவதற்கு வாதம் எதுவும் தேவையில்லை. கைப் புண்ணுக்குக் கண்ணாடியா தேவை ?

சில சமயங்களில், ஆட்சியாளர்கள், ஆரம்பக் கல்வித் துறையில் மாறுதல்களைச் செய்வதுபற்றி உயர்நிலைப்பள்ளித் துறையைச் சேர்ந்தவர்களிடம் ஆலோசனை கேட்டிருக்கிறார்கள். அது போலவே, உயர்நிலைப்பள்ளிக் கல்வியில் மாறுதல்கள் எப்படிச் செய்யப்படவேண்டும் என்பதுபற்றிக் கல்லூரிகளோடு தொடர்பு கொண்டவர்களைக் கேட்டிருக்கிறார்கள். இந்த முறையும் தவறானது தான். ஆரம்பக் கல்வித் துறையில் மாறுதல்களைச் செய்வதாக இருந்தால், அந்தத் துறையில் உள்ளவர்களின் ஆய்வுரையைக் கேட்பதுதான் முறையே தவிர, உயர்நிலைப்பள்ளிகளோடு தொடர்புடையவர்களைக் கேட்டறிவது எவ்வாறு முறையாகும்?

"இதனை இதனால் இவன் முடிக்கும் என்று ஆய்ந்து அதனை அவன்கண் விடல்" என்று வள்ளுவப் பெருந்தகையாளர் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் தெரிவித்த தெளிவுரையை ஆட்சியாளர்கள் நன்கு உணர்ந்து, அப்படி உணர்ந்ததற்கு ஏற்றவண்ணம் நடந்திருந்தால், இந்தக் குழப்பங்கள் யாவும் உருவாகியிருக்க மாட்டா. கல்வியின் தரமும் குறைந்திருக்காது.

ஆட்சியாளர்கள் எப்படியோ தவறு செய்துவிட்டார்கள், ஒருமுறை இருமுறை அல்ல. பலமுறை தவறு செய்துவிட்டார்கள். அந்தத் தவறுகளின் விளைவாகக் கல்வியின் தரமும் குறைந்து விட்டது.

போனது போகட்டும். இனியாவது கல்வியின் தரம் உயர வேண்டுமானால், ஆட்சியாளர்கள், கல்வித்துறையின் குறிப்பிட்ட பகுதியினரைக் கேட்டு ஒப்புதலைப் பெற்ற பின்னரே அந்தத் துறையில் மாறுதல்களைச் செய்யவேண்டும் என்கிற நல்ல முடிவுக்கு வரவேண்டும். எந்தச் சமயத்திலும், எந்தச் சூழ்நிலையிலும் அந்த முடிவின்படியே நடப்பது என்கிற உறுதியைக் கொள்ளவேண்டும்.

சென்ற சில ஆண்டுகளில் ஆரம்பக் கல்வியின் தரம் குறைந்து போயிருப்பதற்கான மற்றொரு தலையாய காரணம், அரசாங்கத்தார், தனியார் நிர்வாகத்தில் உள்ள ஆரம்பப் பள்ளிகளுக்குப் போதுமான ஊக்கமும் உற்சாகமும் அளிக்காமல் இருப்பதே ஆகும். அரசாங்கத்தார் — நகராட்சி மன்றத்தார் — ஊராட்சி மன்றத்தார்—ஆகியோரால் நடத்தப்படும் ஆரம்பப் பள்ளிகளில் அளிக்கப்படுகிற கல்வியின் தரத்தைவிடத் தனியார் நிர்வாகத்தால் நடத்தப்படும் பள்ளிகளில் அளிக்கப்படுகிற கல்வியின் தரம் பல மடங்கு உயர்ந்ததாக இருக்கிறது என்பது, அனைவரும் ஒப்புக் கொள்ளும் உண்மை; யாரும் எந்தக் காரணத்தை முன்னிட்டும் எளிதில் மறுக்கமுடியாத உண்மை. இந்த நிலைமையில், ஆரம்பக் கல்வியின் தரம் குறையாமல் இருக்கவேண்டுமானால், அரசாங்கத்

தார் செய்திருக்கவேண்டிய செயல், ஏற்கெனவே உள்ள தனியார் ஆரம்பப் பள்ளிகள் ஓங்கி உயர்ந்து செழித்து வளர்வதற்குத் தேவையான ஊக்கத்தையும் ஆக்கத்தையும் அளிப்பதும், புதிய புதிய தனியார் ஆரம்பப் பள்ளிகள் ஆங்காங்கே தோன்றுவதற்குத் தேவையான சூழ்நிலையை உருவாக்குவதுமே ஆகும். ஆனல் நடைமுறையில் ஆட்சியாளர்கள், இந்தச் சிறந்த வழியைக் கையாள்வதற்கு மாருக, தனியார் துறையில் புதிய ஆரம்பப் பள்ளிகள் தொடங்கப்படுவதைத் தடுத்து நிறுத்துகின்ற கொள்கையையும், ஏற்கெனவே உள்ள தனியார் ஆரம்பப் பள்ளிகளின் நிர்வாகிகளுடைய ஆர்வத்தையும் ஊக்கத்தையும் சிதைத்துச் சீர்குலைக்கவல்ல நடைமுறையையுமே, சென்ற சில ஆண்டுகளாகக் கையாண்டு வருகிருர்கள். அரசாங்கத்தாரின் இத்தகைய விபரீதப் போக்கு—விசித்திர நோக்கு ஆகியவற்றின் விளைவாக, தனியார் துறையில் உள்ள எண்ணற்ற ஆரம்பப் பள்ளிக்கூடங்கள், மாபெரும் பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவித்துக்கொண்டிருப்பது, நாடறிந்த உண்மை. தனியார் ஆரம்பப் பள்ளிகளுக்கு அரசாங்கத்தார் தந்துவருகிற நிர்வாக உதவித்தொகை, பள்ளிகளை நடத்துவதற்கு ஆகிற செலவில் கால்பங்குகூட இல்லை. மாணவர்களிடமிருந்து கட்டணங்களை வாங்கக்கூடாது என்று உள்ள இன்றைய நிலையில், அரசாங்கத்தார் அளிக்கிற உதவித்தொகை இவ்வளவு குறைவாக இருக்குமானல், தனியார் நிர்வாகிகள், அவர்களுடைய பள்ளிக்கூடங்களைச் சீரும் சிறப்பும் மிகுந்த முறையில் எவ்வாறு நடத்திச் செல்லமுடியும்? இத்தகைய நிலையில் அளிக்கப்படுகிற கல்வியின் தரம் எப்படி உயரியதாக இருக்க இயலும்?

அளவுக்கு மீறிய எண்ணிக்கை உள்ள மாணவர்களை ஒவ்வோர் ஆசிரியரும் கவனிக்க வேண்டியிருப்பது, தரம் குறைவதற்கான மற்ருெரு பெருங் காரணமாகும். அண்மையில் தமிழக அரசாங்கத்தார் வெளியிட்டுள்ள ஆசிரியர்—மாணவர் விகித உத்தரவுகூட 45 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்கிற முறையில்தான் அமைந்துள்ளது. கல்வியின் தரம் சிறப்பாக அமையவேண்டுமானல் 30 மாணவர்களுக்குமேல் ஓர் ஆசிரியரால் கவனிக்கப் படுகிற நிலை இருத்தல் ஆகாது.

இந்த உண்மைகளையெல்லாம் ஆட்சியாளர்கள் அன்புகூர்ந்து சிந்தித்துப் பார்த்து, தகுந்த முடிவுகளையெடுத்து, உயர்ந்த நடைமுறைகளைக் கையாள முன்வந்தால்தான் கல்வியின் தரம் உயரும். ஆவன செய்வார்களா ஆட்சியாளர்கள்? கேட்கிறது ஆரம்பக்கல்வி உலகம் ஆவலோடு!

# திருமதி அனிபெஸண்ட்

டாக்டர் அனி பெஸண்ட் அயர்லாந்தில் பிறந்தார். 1873-ல் நம்நாட்டுக்கு வந்தார். இந்திய மண்ணில் அடியெடுத்து வைத்தது முதல் அவர் இந்தியராகவே மாறிவிட்டார். அதன் ஆன்மிக மறுமலர்ச்சிக்கும், தேசிய விடுதலைக்கும், பண்பாட்டின் வளர்ச்சிக்குமாகத் தம்மைப் பணித்துக் கொண்டார். ஹோம் ரூல் லீக் மூலமாகவும் பிறகு காங்கிரஸ் அக்கிராசனராகவும் இருந்து தேசமக்களைத் தட்டியெழுப்பி, காந்திஜியின் வெற்றிக்கு வழி வகுத்துக் கொடுத்த பெருமை டாக்டர் பெஸண்டைச் சாரும். அக்டோபர், 1உ அவரது 116 வது பிறந்த நாளாகும். அதை முன்னிட்டு இக்கட்டுரை வெளியிடப்படுகிறது.

அனி பெஸண்ட் 1847 அக்டோபர் 1உ லண்டனில் ஒரு ஐரிஷ் குடும்பத்தில் பிறந்தார். ஒரு கிறிஸ்தவ திருச்சபையினரை 20 வது வயதில் மணம் புரிந்து கொண்டார். ஆனால் அந்த மதத்தின் சம்பிரதாயங்களைப்பற்றி ஏற்பட்ட சமுசயத்தின் காரணமாக அதை விட்டு விலகி ஆன்மிக ஆராய்ச்சியை மேற்கொண்டார். விவாக பந்தம் நீங்கியது. இரண்டு குழந்தைகளின் பராமரிப்பும் அவரிடமிருந்து விலகியது. சிறிது காலம் சோஷியலிசமும் சிந்தனை சுதந்திரமும் அவரை ஆட்கொண்டன. அவை சாந்தியளிக்கவில்லை. அதை நாடி 1893 நவம்பரில் இந்தியா வந்து அவர் இந்தியராகவே மாறிவிட்டார். 1875ல் இங்கிலாந்தில் இருக்கையிலேயே 'இந்தியா, இங்கிலாந்து ஆப்கானிஸ்தானம்'' என்ற தலைப்புள்ள ஒரு பிரசுரத்தை அவர் வெளியிட்டார். அதிலேயே இந்தியாவுக்கு நியாயம் வழங்குவதன் அவசியத்தை அவர் வலியுறுத்தியிருந்தார்.

## தேசீய மறுமலர்ச்சி

இந்தியாவுக்கு அவர் வந்தபோது வயது 46. தம் நாட்டின் பொது வாழ்வில் பிரகாசித்து அடைந்த புகழுடன் உலகில் தலைசிறந்த பேச்சாளர் என்ற கியாதியுடன் நம் நாட்டுக்கு வந்தார். இந்தியா தனது ஆன்மிகச் சிறப்பை அலட்சியம் செய்ததுதான் அதன் சிறுமைக்குக் காரணம் என்பதை அவர் கண்டறிந்தார். தேச ஆசாரத்தில் தாக்க வேண்டிய, நீக்க வேண்டிய பல அம்சங்கள் அவருக்குத் தெளிவாகப் புலப்பட்டன. படித்த வகுப்பினர் பாரதப் பண்பாட்டை மறந்து மேற்கு உலக மயக்கத்

தில் ஆழ்ந்திருந்த நிலைமையை மாற்ற முற்பட்டார். இந்தியாவின் தொன்மையான தருமமே சாலச் சிறந்தது என்று எண்ணற்ற மேடைகள் மீதிருந்து முழக்கினார். காசியில் அதற்காக ஒரு காலேஜை நிறுவி நடத்தினார். தாம் தோற்றுவித்த பிரம்மஞான சங்கத்தின் கல்வி, கலைத் துறைகளில் இந்நாட்டின் மறுமலர்ச்சிக்கான கல்வி, கேள்விகளை போதிக்க வழி செய்தார். அயல் நாடுகளின் சிறந்த அனுபவங்களை மட்டுமே எடுத்துக்கொண்டு சுயமரியாதையுடன், தன்னம்பிக்கையுடன், சுதேசிஉணர்ச்சியுடன் உழைக்குமாறு இளந் தலைமுறையினரைப் பணித்து அந்த முயற்யில் பெருவெற்றியும் கண்டார். சென்னையில் அடையாற்றில் பிரம்மஞான சங்கத்தை வேரூன்றச்செய்து, எல்லாச் சமயங்களின் மேன்மைகளும் சிறக்கச் செய்வதற்கு அவர் உழைத்தார்.

## காவல் கைதி

1914-ம் ஆண்டில், முதல் உலக யுத்தம் வந்துற்றபோது இந்தியாவின் விடுதலைப்பிரச்னையை அவர் எழுப்பினார். யுத்தப் பணிகளுக்காக இந்திய மக்களின் உதவியை நாடுமுன் அடிமை நிலையிலிருந்து அவர்களை விடுவிப்பது பிரிட்டிஷ் பொறுப்பு என்றார். "நியூ இந்தியா" என்ற தமது தினசரி மூலமாகவும், பிறகு "ஹோம் ரூல் லீக்" என்ற விடுதலை ஸ்தாபனத்தின் மூலமாகவும், தேசிய உணர்வை வளர்த்து மக்களை ஒன்றுபடுத்தினார். தேசத்தின் முன்னணித் தலைவராகி விட்ட அவரை சுதந்திரராக விட்டு வைப்பது அபாயம் என்று கருதி அரசாங்கம் விசாரணையின்றிக காவல் கைதியாக்கியது. அதை ஆட்சேபித்துக் கிளம்பிய சண்டமாருதக் கிளர்ச்சியின் விளைவாக அவர் விடுதலையானார். 1917ல் கூடிய காங்கிரஸ் மகாசபை அவரைத் தலைவராக வரித்துக் கொண்டது. சென்னையிலுள்ள கோகலே மண்டபம் புத்தி பூர்வமான பொது விவகார சர்ச்சைகள் நடைபெறுவதற்காகத் தேச மக்களுக்கு அத் தருணத்தில் டாக்டர் பெஸண்ட் அளித்த பரிசு.

சுதந்திர இயக்கம் சூடு பிடித்தது. சுதேசியம், தேசியக்கல்வி, தீண்டாமை ஒழிப்பு ஆகியவற்றையும், ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமையையும் இடையறாது வலியுறுத்தி, பின்னர் தலைமைப் பொறுப்பேற்ற காந்திஜியின் வெற்றிக்குப் பக்குவமான சூழ்நிலையை டாக்டர் பெஸண்ட் அமைத்துக்கொடுத்தார் என்று தான் சரித்திராசிரியர்கள் கருதுகின்றனர்.

காந்திஜி சட்ட மறுப்பையும் ஒத்துழையாமையையும் தமது சாதனங்களாக்கிக் கொண்டது டாக்டர் பெஸண்டுக்கு உவப்பாக இல்லை. எனவே அவர் தனியாக உழைக்கலானார். இந்தியாவின் விடுதலைக்கான ஒரு மசோதாவைத் தயாரித்து அதைப் பிரிட்டிஷ்

தொழிற் கட்சி ஏற்றுப் பார்லிமெண்டில் பிரேரிக்கச் செய்தார். இந்த முயற்சி பலிக்காமற் போனது அவருக்கு ஏமாற்றத்தை அளித்தது. ஆனால் தமது வாழ்நாளின் கடைசிப் பகுதியிலும், பிரம்மஞான சபைத் தலைமைப் பொறுப்புகளிடையே இந்தியாவின் விடுதலையைக் கோரி அவ்வப்பொழுது பேசி வந்தார். 1928ல் கல்கத்தா காங்கிரசுக்குச் சென்றார். 1931ல் மோதிலால்நேருவின் மரணத்தையொட்டி நடந்த இரங்கற் கூட்டத்தில் கலந்துகொண்டு தேச பக்தத் தியாகிகளை வாழ்த்தினார். பிறகு உடல்நலம் குன்றி 1933ல் அடையாற்றில் காலமானார். பிரம்மஞான சங்கத்தின் தலைவியாக இருந்து அவர் ஆற்றிய பணி பிரமாதமானது.

நமது பொது வாழ்வில் டாக்டர் பெஸண்ட் எவ்வளவு ஆழமாக, பரவலாக ஈடுபாடு கொண்டிருந்தார் என்பதைநினைத்தாலே வியப்பு ஏற்படும். இந்திய தேசிய காங்கிரஸின் தலைவர், காசி ஹிந்து ஸர்வகலாசாலையின் மூல பீடமாகிய மத்திய ஹிந்து காலேஜை நிறுவியவர், ஹோம் ரூல் லீக் ஸ்தாபகர், இந்திய மாதர் சங்கத்தின் முதல் தலைவர், தேசியக் கல்விக்கு உழைத்தவர், கல்விக்கான அறநிலையங்களை நிறுவியவர், சாரண இயக்கத்தை இந்தியாவில் தொடங்கியவர், அஞ்சா நெஞ்சம் படைத்த வழிகாட்டி, சிறந்த பத்திரிகாசிரியர், ஆன்மிக மறுமலர்ச்சியாளர் முதலியன அவற்றில் சில.

## வரலாற்று ஆசிரியர்

டாக்டர் பெஸண்ட் பதினெட்டு சஞ்சிகைகளுக்கு ஆசிரியராக இருந்தார். அவர் 350 புத்தகங்களுக்கு மேல் இயற்றியுள்ளார். இந்தியாவின் விடுதலைப் போராட்டத்தின் வரலாற்றை முதன் முதலாகத் தொகுத்து எழுதியவர் அவர்தாம். பகவத்கீதை வீடுதோறும் மீண்டும் ஒலிக்கச் செய்த பெருமை அவருக்கு உண்டு. சிறந்த சுவடிகளையெல்லாம் சேகரித்து இந்தியாவின் ஆன்மிகச் செல்வங்கள் பலவற்றைப் புத்தகங்களாகப் பதிப்பிக்க அவர் வழி செய்தது மறக்க இயலாத சேவை.

தமது உடல், பொருள், ஆவி அனைத்தையும் டாக்டர் பெஸண்ட் இந்தியாவுக்காக அர்ப்பணம் செய்தவர். தமது தலைமுறையையும், முந்திய தலைமுறையையும் பெரிய அளவில் ஈர்த்து சுதந்திரத்தில் ஆர்வமூட்டினார் பெஸண்ட் என்று நேருஜி அவரைப்பற்றி 1956-ல் கூறியதுண்டு. தமது பண்பாடும் சமயமும் மகத்தானவை என்ற நிச்சயபுத்தியை மீண்டும் இந்தியர்களுக்கு அவர்தாம் ஏற்படுத்தினார் என்பது ராஜாஜி வழங்கியுள்ள புகழுரை.

டாக்டர் பெஸண்ட் இந்தியா வந்தபின் நமது பெண்களைப்

போலப் புடவை கட்டிக்கொண்டு வாழ்ந்தார். தெய்வ அனுக்கிரஹமும் அறவுணர்வும் மிகுந்த இந்தியாவில் தாம் பிறக்கவில்லையே என்று வருந்தினார். "தெய்வ ஆட்சியும் அவரது நல்ல றமும் சிறக்கும் நாட்டில் தான் மதியின் மாட்சியைக் காணலாம். தருமம், அங்கு தான் செழிக்கும்" என்று சொல்லி அவர் நமது பெரு நூல்களைக் கசடறக் கற்றறிந்து ஆத்மானுபவம் நிறைந்த வேதாந்தியாக விளங்கினார். 'அவனன்றி, ஓர் அணுவும் அசையாது' என்ற பேருண்மையில் அவர் நீங்காத நம்பிக்கையுள்ளவர். இந்தியா வந்தவுடன் அவர் காசியில் தேவாலயத் திருப்பணியை மேற்கொண்டது குறிப்பிடத் தக்கது. அவரது புலமையைக் கண்டு வியந்து காசி பண்டிதர்கள் "ஸர்வ-சுக்ல ஸரஸ்வதி" என்று அவரைப் பெருமையுடன் வரவேற்றுப் புகழ்ந்தனர்.

"நமது உடைமைகள் ஸர்வேச்வரனது மாட்சியைக் காண மறுத்த போதிலும்; நம்முள் இருந்து நம்மை நடத்துகின்றான். அவனே இதயத்தில் குடிகொண்டு சேவை புரிவதற்கான ஆர்வத்தை அளிக்கிறான். அவனே தியாகம், அவனே உழைப்பு, அவனே எல்லாம். அவனது சக்திதான் நம்மை இயக்குகிறது. நமது சரீரம் தெய்வம் உறைகின்ற திருக்கோயில்," என்ற ரீதியில் தியாகத்தின் அருமை பெருமைகளை அவர் 1924-ம் ஆண்டில் விளக்கியதுண்டு.

விவேகானந்தர் போட்ட அஸ்திவாரத்தைப் பலப்படுத்தி, நம் நாட்டைப் பற்றிய சாசுவதமான உண்மைகளை மக்கள் மீண்டும் கண்டறியச் செய்து, ராஜீய விடுதலைக்கும் ஆன்மிக மறுமலர்ச்சிக்குமாக ஒரு சேர உழைத்த டாக்டர் பெஸண்டுக்குபாரத சமுதாயம் என்றென்றும் கடமைப் பட்டுள்ளது.

—தினமணி

---

(64-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆட்சி புரிந்தன. இவர் தம் திறமையால் தன் முதல் அமைச்சர்களைக் கொண்டு சுமுகமான நிலைமையைத் தோற்றுவித்தார். பல்வேறு முதல் அமைச்சர்கள் இவர் தலைமையில் பணியாற்றும் பேறு பெற்றனர். காந்தியடிகளோடு கைகுலுக்கும் பேறு பெற்ற ஜார்ஜ் மன்னர், தமது பதவி ஏற்று இருபத்தைந்து ஆண்டுகள் கழித்து, வெள்ளி விழாக் கொண்டாடும் பெருமை அடைந்தார். பக்கிங்காம் அரண்மனைக்கு வெளியில் பல்லாயிரக் கணக்கான மக்கள் கூடி "மன்னர் நீடூழி வாழ்க!" என்று கூறிக் கொண்டு இருந்தனர். இரவு பன்னிரண்டு மணிவரையில் அவர்கள் எதிரே தோன்றிக் கை வீசினார் தம் அருமை மனைவியுடன். மக்களிடத்தே தொடர்பு கொண்ட இம்மன்னர் மறைந்தபோது, கண்ணீர் வடிக்காதவர் இலர்!

—"தமிழ்நாடு"

# இயக்குநர் அவர்கள் குழந்தைகளுடன் நடத்திய உரையாடல்

இயக்குநர்: குழந்தைகளே! நீங்கள் அனைவரும் படிப்பவர்கள் தானே? நான் சில கேள்விகள் கேட்கிறேன். பதில் சொல்லுகிறீர்களா?

குழந்தைகள்: ஆகட்டும்; சொல்லுகிறோம்.

இயக்: நாம் ஒரு நாள் சாப்பிட்டு ஒரு நாள் பட்டினி கிடந்தால் நமது உடம்பு நன்றாயிருக்குமா?

குழந்: இருக்காது.

இயக்: தினமும் சாப்பிட்டால்

குழந்: நன்றாக இருப்போம்.

இயக்: அதேமாதிரி தினமும் பள்ளிக்குப் போனால் படிப்பு வருமா? ஒரு நாள் விட்டு ஒரு நாள் போனால் படிப்பு வருமா?

குழந்: தினமும் சென்றால்தான் படிப்பு வரும்.

இயக்: அப்படியானால் தினமும் பள்ளிக்குப் போவீர்களா?

குழந்தை: ஆகட்டும். தினமும் பள்ளிக்குப் போகிறோம்.

இயக்: சாப்பிடுகிற சாப்பாட்டை வேளாவேளைக்குச்சாப்பிடுவது நல்லதா? அல்லது பகல் ஒரு மணிக்குச் சாப்பிட வேண்டியதை இரவு 7 மணிக்குச் சாப்பிடுவது நல்லதா?

குழந்: வேளா வேளைக்குச் சாப்பிடுவது தான் நல்லது.

இயக்: அதுபோலவே நேரா நேரத்துக்குப்பள்ளிக்குப்போனால் படிப்பு வருமா? நேரம் தவறிப் போனால் படிப்பு வருமா?

குழந்: நேரா நேரத்திற்குப் போனால்தான் படிப்பு வரும்.

இயக்: சரி. தினமும் பள்ளிக்குப் போக வேண்டும். ஒரே நேரத்திற்குப் பள்ளிக்குப் போக வேண்டும். ஆசிரியர் வந்து அழைக்கட்டும் என்று காத்திருக்க மாட்டீர்கள் அல்லவா?

குழந்தை: ஆம். நேரா நேரத்திற்குப் போவோம்.

இயக்: ஊரிலே திருவிழா நடக்கும்போது பக்கத்து வீட்டு நண்பனையும் உடன் அழைத்துச் செலவீர்கள். இல்லையா?

குழந்: ஆம். நண்பர்களையும் அழைத்துச் செல்வோம்.

இயக்: அதே மாதிரி பள்ளிக்குப் போகும் போதும் கூட்டிக் கொண்டு தானே செல்ல வேண்டும். விட்டுவிட்டுச் செல்வீர்களா?

குழந்: கூட்டிக்கொண்டு தான் செல்வோம்.

இயக்: நல்லது. தினமும் பள்ளிக்குப் போவீர்கள். நேரத்தில் பள்ளிக்குச் செல்வீர்கள். படிக்கும் நண்பர்களையும் அழைத்துச் செல்வீர்கள் அல்லவா? பள்ளியில் படிக்கும் போது எதை நினைந்துக் கொண்டிருப்பீர்கள். படிப்பையா அல்லது எனது பேச்சையா?

குழந்: படிப்பை நினைப்போம்.

இயக்: ஆம்! பள்ளியில் படிப்பை மட்டும் தான் நினைக்க வேண்டும். விளையாடும் இடத்தில் எதை நினைக்க வேண்டும்? விளையாட்டை மட்டும் தானே? விளையாடும் போது வேறு எதையாவது நினைத்தால் என்ன ஆகும்? பந்து தவறி விடும். தோற்றுப் போவோம் அல்லவா?

குழந்: ஆம்.

இயக்: அதேபோல வகுப்பு நேரத்தில் மற்ற விஷயங்களை நினைத்தால் படிப்பில் தோற்று விடுவோம். எப்பொழுது எந்த வேலை செய்கிறோமோ அப்பொழுது அந்த வேலையில் கவனம் செலுத்தினால்தான் வெற்றி காண முடியும்.

குழந்: பால் குடிக்காதவர்கள் யாராவது உண்டா?

குழந்: இல்லை.

இயக்: சோறு சாப்பிடாதவர்கள் யாராவது உண்டா? ஒரு வேளையாவது சாப்பிடாதவர்கள் உண்டா? பள்ளிக் கூடத்திலாவது சாப்பிடாதவர்கள் உண்டா?

குழந்: எல்லோரும் சாப்பிடுகிறோம்.

இயக்: நல்லது பால் குடிக்கிறோம். சாப்பாடு சாப்பிடுகிறோம். முறுக்கு தின்னாத குழந்தைகள் உண்டா? வீட்டில் கிடைக்கா விட்டாலும் வெளியிலாவது வாங்கித் தின்கிறோம் அல்லவா?

குழந்: ஆம். முறுக்குத் தின்றிருக்கிறோம்.

இயக்: நல்லது. நாம் பால் குடிக்கிறோம். சோறு உண்கிறோம். முறுக்குத் தின்கிறோம். இவற்றில் எது சுலபம்.

குழந்: பால்

இயக்: எது சிரமம்?

குழந்: முறுக்கு

இயக்: ஆம் முறுக்கைச் சிறிது கஷ்டப்பட்டு மென்று தின்ன வேண்டும். இரண்டு மூன்று தரம் மெல்ல வேண்டும். கல் போல இருந்தாலும் தூக்கி எறிய மாட்டோம். இவை போலவே படிக்கும் பாடங்களில் சில பால் போல இருக்கும். ஒரு தரம் படித்தவுடனே வந்துவிடும், அத்துடன் நின்று விடலாமா? கூடாது. 10 வயது வரை பால் மட்டும் குடித்து வாழ முடியுமா? முடியாதல்லவா? சோறும் சாப்பிட

வேண்டும். சோறு வேண்டாமென்றால் அம்மா விடமாட்டார்கள் அல்லவா? சோறு சாப்பிடாவிட்டால் உடம்பு இளைத்துவிடும் அல்லவா? உடம்பு வளரச் சோறு வேண்டும். அதே மாதிரி சோறு போன்ற சிறிது கடினமான பாடங்களையும், முறுக்குப் போன்ற இன்னும் சிறிது கடினமான பாடங்களையும் படித்தால் தான் நாம் முன்னேற முடியும். எனவே எல்லாப் பாடங்களையும் படிப்பீர்கள் அல்லவா?

குழந்: ஆம். எல்லாப் பாடங்களையும் நன்கு படிப்போம்.

இயக்: எப்பொழுது படிப்பீர்கள்?

குழந்: காலையில் படிப்போம். இரவிலும் படிப்போம்.

இயக்: நல்லது. காலையில் படிக்கிறீர்கள். பள்ளியில் பகலில் படிக்கிறீர்கள். இரவிலும் இந்தப்பள்ளியில் படிக்கிறீர்கள்.

தினமும் படிக்கிறீர்கள் நேரத்தோடு படிக்கிறீர்கள். எல்லாப் பாடங்களையும் படிக்கிறீர்கள். அனைவரும் படிக்கிறீர்கள் அல்லவா?

குழந்: ஆம். எல்லோரும் படிப்போம்; ஒன்றாகப் படிப்போம். நன்றாகப் படிப்போம்.

இயக்: மிக்க மகிழ்ச்சி. இந்த முழக்கம் தப்பு இல்லாதது, அநீதி இல்லாதது. அக்கிரமம் இல்லாதது. சரி. படித்த பிறகு என்ன செய்வீர்கள்? படித்துவிட்டுச் சும்மா இருப்பீர்களா? சொத்து உள்ளவர்களும் சும்மா இருக்கலாமா? பணமில்லாதவர்கள் உழைக்க வேண்டுமல்லவா? பணமுள்ளவர்கள் தேசத் தொண்டோ சமூகத் தொண்டோ செய்ய வேண்டுமல்லவா?

குழந்: ஆம். எல்லோரும் உழைப்போம், ஒன்றாக உழைப்போம்.

இயக்: நல்லது. எல்லோரும் நன்றாக ஒன்றாகப் படிப்பீர்கள். எல்லோரும் நன்றாக ஒன்றாக உழைப்பீர்கள், படித்த பின் ஏன் உழைக்க வேண்டும்?

குழந்: வாழ்வதற்காக.

இயக்: எப்படி வாழ்வது? நான் மட்டும் வாழ்ந்தால் போதுமா?

குழந்: எல்லோரும் வாழ்வோம்: நன்றாக வாழ்வோம், ஒன்றாக வாழ்வோம்.

இயக்: மிக்க மகிழ்ச்சி. நாம் அனைவரும் படிப்போம், நன்றாக உழைப்போம், ஒன்றாக வாழ்வோம். உழைக்காமல் வாழ மாட்டோம். படிக்காமல் வாழமாட்டோம். இந்த மூன்று மந்திரங்களை மூன்று முழக்கங்களை நாடெங்கும் பரப்புவோம். குழந்தைகளே வணக்கம்!

குழந்: வணக்கம்!

# விதுரர் நீதி

( C. M. பரமானந்தம் )

( விதுரர் திருதராஷ்டிரனுக்குச் சொன்னவை )

### சுகத்திற்குக் கேடு சூழ்வன 6 :

சுகமாய் இருக்க வேண்டும் என்று நினைக்கிறவன் கீழ்க்கண்டவைகளைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

(1) (அதிக) தூக்கம் (2) சோம்பல் (3) பயம் (4) குரோதம்-(பகைமைக் குணம்) (5) ஆலஸ்யம் (தாமதம்) (6) தீர்க்க சூத்திரனாயிருத்தல் (காரியத்தைத் தள்ளிவைத்துச் செய்தல்)

### ஓட்டைப் பாத்திரத்தில் ஜலம் வைத்தாற் போல விட்டுவிடத் தக்கவர் 6 பேர் :

(1) உபதேசம் பண்ணாத குரு (2) வேதாத்யயனம் பண்ணாத பிராம்மணன் (3) மக்களைப் பாதுகாக்காத அரசன் (4) ஊசி குத்துவது போல் பேசும் மனைவி (5) மாடுகள் இல்லாத இடத்தில் இருக்கும் இடையன் (மாடு மேய்ப்பவன்) (6) கிராமத்தில் வசிக்காத நாவிதன்.

### விடப்படாதவை 6 :

(1) சத்தியம் (2) தானம் (3) அநாலஸ்யம் – சுறுசுறுப்பு (4) அசூயைப் படாமை (5) பொறுமை (6) தைரியம்.

### ஒரு மணி நேரம் பார்க்காவிட்டால் கெட்டுவிடத் தகுந்தவை 6:

(1) பசு (2) வினையாளனின் பணி (3) பயிர் (4) மனைவி (5) வித்தை (6) வேலை, இவற்றை யெல்லாம் அடிக்கடி கவனிக்கவேண்டும்.

### உதவி செய்தவர்களை மறந்து விடுபவர்கள் 6 பேர் :

(1) கல்வியைக் கற்றுக் கொண்ட மாணவன் (குருவை மறப்பான்) (2) வயதுவந்த பிள்ளை (தாயை மறப்பான்) (3) வயதான கணவன் (மனைவியை மறப்பான்) (4) படகு ஏறி வந்தவன் (அக்கரை சேர்ந்ததுடன் படகோட்டியை மறப்பான்) (5) உதவி பெற்றவன் (காரியம் கைகூடினவுடன் உதவி செய்தவர்களை மறப்பான்) (6) நோயாளி (நோய் நீங்கியதும் மருத்துவனை மறப்பான்.)

### மேலான சுகத்தைக் கொடுப்பவை 6:

(1) ஆரோக்கியம் (2) கடன் இல்லாமை (3) ஜீவனத்துக்காக ஊரூராக அலையாமை (4) நல்லவர்களோடு சேர்ந்து இருத்தல் (5) தன்னுடைய புத்தியால் வாழ்தல் (6) கவலையின்மை.

துக்கத்தைத் தருவன 6:

(1) மற்றவர் சுகித்திருத்தலைப் பார்த்து சகிக்காதிருத்தல் (2) போதுமென்னும் திருப்தி கொள்ளாமை (அருவருப்பும், பொறாமையும் கொள்ளுதல்) (3) கோபப்படுபவன் (4) எப்போதும் சந்தேகம் கொள்வது (5) பிறர் பொருளில் வாழ்வது (6) பொய் பேசுவது, வேட்டையாடுதல், கள் குடித்தல், கொடூரமாகப் பேசுதல், தவறாகத் தண்டித்தல், சிறு காரியத்திற்காகவும் அதிக பணம் செலவழித்தல், ஆகிய இவை எத்தனை பலத்தையும் அழித்துவிடச் செய்யும்.

## ஒரு குடும்பம் அழியும்முன் நடப்பன :

(1) அறவோரை இழித்து ஏசுதல் (பேசுதல்) (2) அறவோர்களை எதிர்ப்பது (3) அறவோர்ப் பொருளை அபகரித்தல் (4) அறவோரை அடிப்பது—துன்பப்படுத்துவது (5) அறவோர் போற்றப்படுவதைப் பார்த்து சகிக்காமை (6) அறவோர்களைப் பார்த்துப் பொறாமை கொள்வது (7) அறவோர்களை அருகில் சேர்க்க விரும்பாமை. நன்றாக யோசித்து இவைகளை விட்டுவிட வேண்டும். (வேத வித்துக்கள்—அந்தணர்—அறவோர் என்பவராவர்.)

## அதிக ஆனந்தத்தைக் கொடுப்பன :

(1) பிரிந்திருந்த சிநேகிதனைக் காணல் (2) எதிர்பாராதவாறு அதிக பணம் கிடைத்தல் (3) சிறு பிள்ளையின் ஆலிங்கனம்—அணைப்பு (4) நல்ல சமயத்தில் பேசும் இனிமையான சொல் (5) குடும்பத்தில் தலைவனாயிருத்தல் (6) பெரிய சபையில் பூசிக்கப் பெறுதல்.

## மனிதனைப் பெருமைப் படுத்தும் குணங்கள் :

(1) நல்ல புத்தி (2) நல்ல குலம் (3) மனத்தை அடக்கும் சக்தி (4) சிறந்த கேள்வி யறிவு (5) பராக்கிரமம் (பலம்) (6) குறைந்த பேச்சு (7) சக்திக்கு ஏற்ற தானம் செய்தல் (8) செய்நன்றி மறவாமை.

மூடன், காமி, கோபி, பசியன், அவசரக்காரன், அதிக ஆசையுள்ளவன். இவர்களுக்கு தருமத்தின் நுட்பம் புரியாது.

எத்தனை கஷ்டம் வந்தாலும் தவறு செய்யாதவனை அறிஞர் விரும்புவர். நல்ல செல்வம் வந்திருக்கிறதென்று சந்தோஷம் அடையக் கூடாது. மற்றவர் கஷ்டத்தைப் பார்த்து சந்தோஷப் படக்கூடாது. தானம் செய்துவிட்டு அதற்காக வருத்தப் படக்கூடாது.

எல்லா உலகத்திற்கும் தலைவனாக வேண்டுமானால் தேசாசாரம், சமயம், மொழி, ஜாதி, தருமம், இன்றைக்கு நடக்க வேண்டிய காரியம், மேல் நடக்க வேண்டியன முதலியவைகளை அறிந்திருக்க வேண்டும்.

—பத்மஜோதி

# ஆசிரியர்களின் நிலைமையை உயர்த்துவோம்

**பி. என். கிர்பால்**

[ஆசிரியர்களின் பொருளாதார நிலையை மேம்படுத்துவதையும், அவர்களுடைய குடும்பத்துக்கு நல்வாழ்வு அளிப்பதையும் நோக்கமாகக்கொண்டு ஆசிரியர் நல்வாழ்வு தேசிய நிதியொன்று சென்ற ஆண்டு அமைக்கப்பட்டது. அந்நிதியைப் பெருக்குவதற்காக ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 5–ந் தேதி ஆசிரியர் தினமாகக் கொண்டாடப்படுகிறது.

இக்கட்டுரையில், இந்திய சர்க்கார் கல்வி ஆலோசகர் திரு. பி. என். கிர்பால், ஆசிரியர்களின் நல்வாழ்வுக்காக மத்திய சர்க்காரும், ராஜ்ய சர்க்கார்களும் என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கின்றனர் என்பதை விளக்குகிறார்.]

இந்தியா சுதந்திரமடைந்தது முதல், கல்வி வளர்ச்சித் திட்டத்தை சமூக பொருளாதார வளர்ச்சித் திட்டங்களின் இன்றியமையாத அம்சமாகக் கருதித் தீவிரமாக நிறைவேற்றி வருகிறோம். நமது முயற்சிகளின் வெற்றி, ஆசிரியர்களின் தரம், அவருடைய கல்வியறிவு, பயிற்சி, அவருடைய குண நலன்கள் ஆகியவற்றைப் பொறுத்து இருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. தமது புனித பாரம்பரைக்கு ஏற்ப, ஆசிரியர்கள் கடமையுணர்வுடன் பணியாற்றி மாணவர்களின் கல்வி அறிவை வளர்ப்பார்கள் என்று எதிர்பார்க்கிறோம். அந்த நேரத்தில் ஆசிரியர்களின் வறுமையைப் போக்குவது சமூகத்தின் தலையாய கடமை என்பதையும் உணர வேண்டும். அவர்கள் ஆசிரியர் தொழிலை விட்டபிறகும் கௌரவமாக வாழ வகைசெய்ய வேண்டும். சமுதாயத்தில் ஆசிரியருக்குரிய அந்தஸ்தைப் பெற்றுத்தர வேண்டும்.

ஆசிரியர்களின் நிலையை உயர்த்துவதற்காக மத்திய சர்க்காரும் ராஜ்ய சர்க்கார்களும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். கல்விக்காகக் கிடைக்கும் நிதி வசதிகளை அதிகரிக்கும் தேவை பெருகி வருவதையும் கவனித்தால், ஏற்கெனவே ஏற்பட்டுள்ள முன்னேற்றம் திருப்திகரமானது என்றே கூறவேண்டும். இன்னும் செய்யவேண்டியவை ஏராளமிருக்கின்றன என்பதும் உண்மைதான்.

## ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள்

ஆரம்பப்பள்ளிகளின் ஆசிரியர்கள் சென்ற காலத்தில் மிகவும் புறக்கணிக்கப்பட்டு வந்துள்

ளனர் என்பது உண்மையே. அவர்களுடைய படிப்பும் பயிற்சியும்போதுமானவை அல்ல. தமது வீட்டுக்கு வெகு தொலைவில் எவ்வித சௌகரியமுமில்லாத இடத்தில் பணியாற்றவேண்டியிருந்தது. அவருடைய தொழில் திறமையைப் பெருக்குவதற்கோ அறிவை வளர்ப்பதற்கோ வசதி செய்யப்படாமலிருந்தது. பதவியை விட்ட பிறகு அவர்களுடைய எதிர்காலமும் இருண்டதாகவே இருந்தது.

ஆகவே ஆரம்ப ஆசிரியர் வேலை கடினமாகவும் ஏமாற்றம் நிறைந்ததாகவும் இருந்ததில் வியப்பில்லை. மத்தியதர செகண்டரிப் பள்ளிகளில் நிலைமை ஓரளவு சௌகரியமாகவே இருந்தது. ஆனால், இங்கும் ஆசிரியர்கள் பல சிரமங்களுக்குட்பட்டனர் என்பதில் சந்தேகமில்லை. பெரும்பாலான செகண்டரிப் பள்ளிகளும் தனியார் ஸ்தாபனங்களால் நடத்தப்பட்டு வந்தன. அவர்கள் ஓய்வு காலத்துக்கு வேண்டிய வசதிகளின்றி இருந்தனர். வருமானத்தைப் பெருக்குவதற்காகத் தனியாக ட்யூஷன் சொல்லித்தர முற்பட்டதால் பொது ஜனங்களிடையே அவர்களுக்கு மதிப்புக் குறைந்தது.

ஆசிரியர்களின் சம்பளப் பிரச்னையை முதலில் எடுத்துக் கொள்ளுவோம். 19-வது நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களின் சம்பளம்

**" ஆரம்பக்கல்வி "**
**ஆபீஸ்,**
**94-95, புதுத்தெரு,**
**மண்ணடி, சென்னை-1.**

மாதாந்திரக் கணக்கு அனுப்பும் பாரங்கள்
*(ஆங்கிலம்) 100 ரூ. 2-50*
ரிக்கார்ட் ஷீட்டுகள்
*(ஆங்கிலம்) 100 ரூ. 2-00*
பிராவிடெண்ட் பண்டு கட்டும் பாரங்கள்
*(ஆங்கிலம்) 100 ரூ. 2-00*
பள்ளியில் பிள்ளைகளைச் சேர்க்கும் விண்ணப்பத் தாள்கள்
*(ஆங்கிலம்) 100 ரூ. 1-00*
வருடாந்திர பிராவிடண்ட் பண்டு சரிபார்த்தனுப்பும் பாரங்கள்
*(ஆங்கிலம்) 100 ரூ. 2-00*
Form of Certificate of Income

வருமான நற்சாட்சிப் பாரங்கள்
*(ஆங்கிலம்) 10 ரூ. 2-00.*

தபால் செலவு பிரத்யேகம்

**முக்கிய, அறிவிப்பு**

Book Post-ல் *பாரங்களை அனுப்ப தபால் செலவு :*

*25 பாரங்களுக்கு 14* nP.
*50 பாரங்களுக்கு 26* nP.
*75 பாரங்களுக்கு 41* nP.
*100 பாரங்களுக்கு 50* nP

வேண்டிய பாரங்களுக்கு தபால் செலவு சேர்த்து முன் பணத்துடன் ஆர்டர் அனுப்பவும்.

ரொக்கமாகவும் இனமாகவும் ஆண்டொன்றுக்கு ரூ. 60. 1882-ல் அது ரூ. 89 ஆக இருந்ததாய் ஹண்டர் கமிஷன் மதிப்பிட்டது. 19-வது நூற்றாண்டு இறுதியில் ரூ. 91 ஆக ஆயிற்று. 1931-32ல் ரூ. 174 ஆகவும் 1946-47ல் ரூ. 387 ஆகவும் உயர்ந்தன. சுதந்திரத்திற்குப் பிறகு சம்பளம் படிப்படியாக உயர்ந்து இப்போது ரூ. 900 ஆகியிருக்கிறது. ஆசிரியர்களின் சம்பளத்தை உயர்த்த மூன்று திட்டங்களிலும் நிதி ஒதுக்கப் பட்டிருப்பதால், ஆசிரியர்களின் சம்பளத்தை உயர்த்த ராஜ்ய சர்க்கார்களுக்குச் சாத்தியமாயிற்று. ஒரிஸ்ஸாவில் மெட்ரிக் பயிற்சிபெற்ற ஆசிரியர்களின் அடிப்படைச் சம்பளம் ரூ. 100-150; ஆந்திரா, மைசூர், மேற்கு வங்காளத்தில் ரூ. 80-150, மத்தியப் பிரதேசத்தில் ரூ. 90-170; தமிழ்நாட்டில் ரூ. 90-140; ராஜஸ்தானில் ரூ. 75-150; ஜம்மு-காஷ்மீரில் ரூ. 70-160.

## சம்பளம் விகிதம் உயர்வு

இதுபோலவே மத்திய செகண்டரி பள்ளி ஆசிரியர்களின் சம்பளமும் உயர்த்தப்பட்டிருக்கிறது. மத்தியதரப் பள்ளி ஆசிரியர்களின் வருடாந்திர சராசரி சம்பளம் 1921-22ல் ரூ. 393 ஆக இருந்தது. 1946-47ல் ரூ. 571 ஆகவும் 1960-61ல் ரூ. 1,100 ஆகவும் உயர்ந்திருக்கிறது. செகண்டரிப் பள்ளி ஆசிரியர்களின் சம்பளமும் 1960ல் சுமார் ரூ. 1,680 ஆக உயர்ந்திருக்கிறது. பட்டதாரி ஆசிரியர்களின் சம்பளமும் கணிசமாக உயர்ந்திருக்கிறது.

அவர்களின் சம்பள விகிதம் ஆந்திரப் பிரதேசத்தில் ரூ. 130-250, அஸ்ஸாமில் ரூ. 150-300; மத்தியப்பிரதேசத்தில் ரூ. 150-290; தமிழ் நாட்டில் ரூ. 140-250; மேற்கு வங்காளத்தில் ரூ. 160-295.

சில ராஜ்யங்களில் சம்பள விகிதம் இன்னும் குறைவாகவே இருந்து வருகிறது என்பது உண்மைதான். ஆசிரியர்களின் சம்பளத்தை உயர்த்தும் விஷயத்தில் ராஜ்யங்கள் மிகவும் அக்கறை காட்டி வருகின்றன. ஒரே மாதிரியான யோக்கியதாம்சம் உள்ளவர்களுக்கு அவர்கள் எந்தக் கல்வி நிலையத்தில் இருந்தாலும் ஒரே சம்பள விகிதமிருக்கும்படியாயும் பார்த்துக் கொள்ளப்படுகிறது. பல ராஜ்யங்களும் ஒரே மாதிரியான சம்பள விகிதத்தை அமுல்செய்து வருகின்றன. சர்க்கார் சார்பற்ற கல்வி நிலையங்களில் பணியாற்றுகிற ஆசிரியர்களின் வெகு நாளைய குறைகளைத் தீர்த்து வைக்க வேண்டும்.

## தமிழ் நாடு தந்த திட்டம்

ஆசிரியர்கள் தொழிலுக்குத் திறமைவாய்ந்தவர்கள் வரவேண்டுமென்றால் அவர்களுக்கு நல்ல சம்பளம் தரவேண்டும். அவர்கள் வேலை செய்ய முடியாமலாகிற கடைசி காலத்தில் சமூகம் அவர்களைக் கவனித்துக்கொள்ளு

மென்ற நம்பிக்கையும் ஏற்பட வேண்டும். சுதந்திரத்துக்கு முன்னால் அரசாங்க ஆசிரியர்களுக்கு மட்டுந்தான் பென்ஷன் அனுகூலம் கிடைத்து வந்தது. பிற ஆசிரியர்களுக்கு கூட்டு பிராவிடெண்ட் நிதி அனுகூலம் தான் இருந்து வந்தது. வயதான காலத்தில் அந்தத் தொகை அவர்களுடைய செலவுக்குப் போதுமானதாக இல்லை. தமிழ் நாடு அரசாங்கம் இந்நிலையை நன்கு ஆராய்ந்து மூன்று அனுகூலத் திட்டமொன்றைத் தொடங்கியது. அதன்படி ஆசிரியர்கள் ஓய்வு பெறும்போது பென்ஷனும், பிராவிடெண்ட் நிதியும் இன்ஷ்யூரன்சும் கிடைக்கும். ஆந்திரப் பிரதேசம், கேரளம், மைசூர் ஆகிய ராஜ்யங்களும் இத்திட்டத்தைப் பின்பற்றி வருகின்றன. நான்காவது ஆண்டு இறுதிக்குள்ளாக இத்திட்டம் எல்லா ராஜ்யங்களிலும் பரவி விடுமென்று நம்புகிறேன்.

## குழந்தைகளுக்குச் சலுகை

ஆசிரியர்களின் குழந்தைகளின் படிப்புச் செலவில் தாராளமான சலுகைகள் அளிக்கப்பட்டு வருகின்றன. தமிழ் நாட்டிலும், மேற்கு வங்காளத்திலும் ஆரம்ப செகண்டரிப் பள்ளி ஆசிரியர்களின் குழந்தைகளுக்கு ஹையர் செகண்டரிக் கட்டம் வரையில் இலவசமாகப் படிப்பு வசதி வழங்கப்படுகிறது. ஆந்திரப் பிரதேசம், அஸ்ஸாம், பீகார், கேரளா, பஞ்சாப், உத்திரப் பிரதேசம் ஆகிய ராஜ்யங்களின் ஆசிரியர்களின் குழந்தைகளுக்கு விசேஷ சலுகைகள் வழங்கப்படுகின்றன. பல்கலைக் கழகக் கட்டத்தில் பிரைமரி, செகண்டரி பள்ளி ஆசிரியர்களின் பிள்ளைகளில் திறமைவாய்ந்தவர்களுக்காக ஒவ்வொரு ஆண்டும் இந்திய சர்க்கார் 500 விசேஷ உபகாரச் சம்பளங்களை வழங்குகின்றனர்.

## ஆசிரியர்களுக்கு விருதுகள்

இந்தியாவின் பல பகுதிகளையும் சேர்ந்த சுமார் 85 ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்கு ராஷ்டிரபதி தகுதி அத்தாட்சிப் பத்திரமும் ரூ. 500ம் வழங்குகிறார். ஆண்டுதோறும் வழங்கப்படும் விருதுகள் அவர்களின் சேவையைப் பாராட்டிக் கௌரவிப்பதற்காக வழங்கப்படுவதாகும். பல ஆசிரியர்கள் அங்குக் கூடுவதால் அவர்களுடைய கருத்து பரிமாறுவதற்கும் வாய்ப்பிருக்கிறது. ராஜ்ய சர்க்கார்களும் இம்மாதிரி பரிசுகளை ராஜ்ய கூட்டங்களில் வழங்கி வருகின்றன.

## நல்வாழ்வு நிதி

ஆசிரியர்களின் நலனை வளர்ப்பதற்காகச் சென்ற ஆண்டுமேலும் ஒரு திட்டம் தொடங்கப்பட்டிருக்கிறது. ஏழ்மை நிலையிலுள்ள ஆசிரியர்களுக்கும் அவர்களுடைய குடும்பத்துக்கும் நிதி உதவி செய்து தருவதற்காக ஆசிரியர் நல்வாழ்வு தேசிய நிதியொன்று தொடங்கப்பட்டிருக்

(22-ம் பக்கம் பார்க்க)

# கல்வித்துறைச் செய்திகள்

## எல்லாக் குழந்தைகளுக்கும் இலவச செகண்டரி கல்வி

— —

### தமிழ்நாடு அரசாங்கம் விரைவில் முடிவு செய்யும்.

——

### அமைச்சர் பக்தவத்சலம் அறிவிப்பு

கோவை, செப். 3—பெற்றோர்களின் வருமானம் எவ்வளவாக இருந்தபோதிலும் எல்லாக் குழந்தைகளுக்கும் இலவச செகண்டரி கல்வி திட்டத்தை விஸ்தரிப்பது பற்றி சர்க்கார் தீவிரமாகப் பரிசீலனை செய்து வருவதாக கல்வி மந்திரி திரு. எம். பக்தவத்சலம் இன்று கூறினார். இத்திட்டத்தால் ஏற்படக்கூடிய பணச் செலவு பற்றிக் கணக்குப் போட்டுப் பார்க்கப்படுவதாக மந்திரி கூறினார்.

உயர்நிலைப்பள்ளி விஞ்ஞான சோதனைச் சாலையைத் திறந்து வைத்து மந்திரி இங்கு பேசுகையில் இது பற்றி சீக்கிரம் முடிவு எடுக்கப்படும் என்றார்.

## தலைமையாசிரியர் பற்றிக் கல்வித் துறை உத்தரவு ரத்து

— —

### உயர்நீதிமன்றம் தீர்ப்பு

— —

பிராந்திய மொழியில் போதனை பயிற்சி பெற்று ஆரம்பப் பள்ளிகளில் தலைமையாசிரியராக இருப்பவர்கள் அந்த ஆங்கிலபோதனை தோன்றிய பின்னரும் தலைமையாசிரியர் பதவியில் நீடிக்கலாம் என்று கூறி சென்னை உயர்நீதி மன்றம் தமிழ்நாடு கல்வி இலாகா உத்தரவு ஒன்றை ஆகஸ்டு 19 அன்று ரத்துசெய்து தீர்ப்பளித்தது.

திரு. வாசுதேவன் பிள்ளை முதலான நான்கு பேர் பிராந்திய மொழியில் ஆசிரியர் பயிற்சி (ஈ. எஸ். எல். சி.) பெற்ற கன்னியாகுமரி மாவட்ட ஆரம்பப் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள். ஆரம்பத்தில் அந்த நான்கு வகுப்புக்கள் வரை போதிக்க அவர்கள் தகுதிபெற்றிருந்தனர். அப்போது கன்னியாகுமரி மாவட்டம் திருவாங்கூர் - கொச்சியைச் சேர்ந்திருந்தது. 1947-ல் பிரைமரி கல்வி சட்டத்தின்படி அப்பள்ளிகளில் 5—ம் வகுப்புக்களைத் துவங்கியதுடன் இந்தத் தலைமை ஆசிரியர்களையே தற்காலிகமாக அவ்வகுப்பு மாணவர்களுக்குப் போதிக்கும்படியும் திருவாங்கூர்-கொச்சி சர்க்கார் தற்காலிகமாக அனுமதி தந்தனர்.

1956 ராஜ்ய புனரமைப்புச் சட்டத்தின்படி கன்னியாகுமரி, தமிழ்நாட்டுடன் இணையலாயிற்று. தமிழகக் கல்விச் சட்டங்களின் ஆதிக்கம் அங்குள்ள

பள்ளிகளுக்கு விஸ்தரிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து 5-ம் வகுப்புக்கு ஆங்கில போதனை துவங்கியது.

பிராந்திய மொழியில் மட்டுமே போதனைப் பயிற்சி பெற்ற இந்தத் தலைமை ஆசிரியர்களை வேறு பள்ளிகளுக்கு உதவி ஆசிரியர்களாகக் கல்வி இலாகா மாற்றி உத்தரவிட்டது. இதை அவர்கள் ஆட்சேபித்து ரிட் தாக்கல் செய்தனர்.

ராஜ்ய புனரமைப்புச் சட்டம் அளித்த வேலை உத்தரவாதத்தை இந்த உத்தரவு பாதிக்கிறது என்றும் தங்களுக்குக் கிடைத்த விசேஷ அலவன்ஸையும் இவ்வுத்தரவு நிறுத்துகிறது என்றும் சட்ட விரோதமான இவ்வுத்தரவை ரத்து செய்ய வேண்டும் என்றும் அவர்கள் கோரினர்.

பாட திட்டங்கள் மாற்றப்பட்டிருப்பதையொட்டி இந்த நடவடிக்கைகள் அவசியமாயின என்று இலாகா தரப்பில் வாதிக்கப்பட்டது. இதை நீதிபதி திரு. கே. சீனிவாசன் ஏற்கவில்லை.

இந்த ஒரு காரணத்திற்காக இவ்வித நடவடிக்கைகள் மேற்கொண்டு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள சலுகைகளைப் புறக்கணிக்கக்கூடாது என்றும், 5-ம் வகுப்பு பள்ளிகளில் இத்தகையவர்கள் தலைமை ஆசிரியர்களாக இருக்கத் தகுதி உடையவர்கள் என்று திருவாங்கூர்—கொச்சி சர்க்கார் விதித்திருக்கும் சட்டம் தமிழ்நாட்டுச் சர்க்காராலும் கடைபிடிக்கத்தக்கது என்றும் அவர் குறிப்பிட்டு மேற்கண்டவாறு உத்தரவிட்டார்.

---

(20-ம் பக்கத் தொடர்ச்சி)

கிறது. முதல் ஆண்டில் வசூலான ரூ. 35 லட்சமும் தேசிய பாதுகாப்புப் பத்திரங்களில் முதலீடு செய்யப்பட்டிருக்கிறது. மொத்தம் ரூ. 5 கோடி வசூல் செய்து அதிலிருந்து கிடைக்கிற வட்டித் தொகையை நிதியின் லட்சியங்களுக்காகச் செலவிடுவதே நோக்கமாகும்.

நமது கடமையுணர்ச்சியின் சின்னமாக இத்தினத்தின்போது ஒவ்வொருவரும் இந் நிதிக்குத் தாராளமாக வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

## கல்வியின் தரம் குறைந்து விட்டதாகக் கூறுவது தவறு

### திரு. சுந்தரவடிவேலு விளக்கம்

கல்வியின் தரம் குறைந்துவிட்டதாகச் சிலர் கூறிவருகின்றனர். ஆனால் கல்வியின் தரம் குறைந்து விடவில்லை என கல்வித்துறை நெறியாளர் திரு. என். டி. சுந்தரவடிவேலு அண்மையில் பேசுகையில் மிகத் தெளிவாகத் தெரிவித்தார்.

ஆங்கில அறிவை அடிப்படையாக வைத்துக் கொண்டு கல்வியின் தரத்தை மதிப்பிடுவது

தவறு. ஆங்கிலம் தவிர்த்த பல மொழிகள் கற்பதில் இன்று அதிக கவனம் செலுத்தப்படு கிறது என அவர் கூறினார்.

வேலூரில் நடைபெற்ற செகண்டரி பள்ளித் தலைமை ஆசிரியர்கள் மாநாட்டில் கல்வி நெறியாளர் திரு. என். டி. சுந்தரவடிவேலு பேசுகையில் கல்வித் துறையில் ஏற்பட்டுள்ள மகத்தான அபிவிருத்தியை விளக்கிப் பேசினார். அவர் கூறியதாவது :

அடிமை இந்தியாவில் கல்வி வாய்ப்பு ஒரு சிலருக்கே அதிகமாகக் கிடைத்தது. ஆனால் சுதந்திரம் பெற்ற பின் கல்வி வாய்ப்பு பரவலாக அனைவருக்கும் சுலபத்தில் கிடைக்கும்படி விஸ்தரிக்கப் பட்டது.

தமிழ்நாட்டில் ஒரு நூற்றாண்டில் ஏற்படாத அபிவிருத்தி கடந்த 10 வருடங்களில் கல்வித் துறையில் ஏற்பட்டிருக்கிறது.

கல்விமுறை முழுவதும் குறிப்பாக பரீட்சை முறைகளையும் நம் நாட்டிற்கு உகந்த முறையில் மாற்றியமைக்க வேண்டும். விஷயங்களைப் புரிந்து கொள்ளும் விதத்தில் மாணவர்களுக்குக் கல்வி அளிக்க வேண்டும். மனப் பாடம் செய்து ஒப்புவிக்கும் கல்வி நல்ல தல்ல.

தற்போது நடக்கும் பரீட்சை முறை சூதாட்ட முறையாக உள்ளது. மாணவர்களிடம் மறைந்து கிடக்கும் ஆற்றலை வெளிப்படுத்தும் விதத்தில் போதிய ஊக்கமளிக்க வேண்டும்.

ஆசிரியர்களும் தலைமையாசிரியர்களும் மாணவர்கள் நூற்றுக்கு நூறு மார்க்குகள் வாங்கும்படி கஷ்டப்பட்டு உழைக்க வேண்டும். ஆனால் இதற்காக கண்ணை மூடிக்கொண்டு மாணவர்களுக்கு மார்க்குகள் போட்டு பாஸ் செய்து விடக்கூடாது. இது சமூகத்துக்கு நல்ல தல்ல

எஸ். எஸ். எல். சி. தேர்வில் 77 சதவிகிதம் மாணவர்கள் தேறிய வேட்டவலம் ஜில்லா போர்டு உயர் நிலைப்பள்ளிக்கு சுழல் கோப்பைப் பரிசை திரு. சுந்தரவடிவேலு வழங்கினார்.

வடாற்காடு ஜில்லா செகண்டரி பள்ளி தலைமையாசிரியர்கள் சங்கத் தலைவர் திரு. பஸ்லூர் ரகிமான் தலைமை வகித்தார். செயலாளர் திரு. எம். எஸ். வரதாச்சாரி நன்றி கூறினார்.

# ஆதரவு

(தாமரைக் கண்ணன்)

"சார்...போஸ்ட்...!"

'லொக்கு லொக்கு' என்ற இருமல் ஒலி முன்னே வர, ஓய்வு பெற்ற ஆசிரியர் பொன்னம்பலம் பின்னே வந்தார்.

"யார் பெயருக்கு வந்திருக்கு...?"

"நம்ம குழந்தை ஜெயந்தி பெயருக்கு வந்திருக்கு, சார். எங்கே குழந்தையைக் காணோம்...?"

"எட்டு மாதமாக வேலைக்கு அலைந்து கொண்டிருக்கிறது. இன்றைக்கு ஏதோ ஒரு பெண்கள் பள்ளியில் முடிவு சொல்வதாகச் சொன்னார்களாம். அதற்காகப் போயிருக்கிறது." அடிவயிற்றிலிருந்து புகைந்து கிளம்பிய இருமல்களுக்கு இடையில் இடறி விழுந்தன வார்த்தைகள்.

ஆசிரியரின் நிலை கண்டு தபால்காரர் இரங்கற்பா பாடினார்.

"என்னங்க, சார்! நீங்க ஓய்வு பெற்ற இந்த இரண்டு வருஷ காலமா பார்த்துக்கிட்டு வர்றேன். ஓயாமல் இருமி இருமி மெலிந்துகொண்டே போகிறீர்கள். பிராவிடண்டு பண்டு பணம் வாங்கினீங்களே, அதைக் கொண்டாவது வைத்தியம் பார்த்திருக்கக் கூடாது..."

"என்னப்பா, செய்வது? இரண்டாயிரம் ரூபா கடன் கொடுத்தேன். மீதி இருந்த பணம் ஜெயந்தியை ஆசிரியர் வேலைக்குப் படிக்க வைக்கவும், சாப்பாட்டுக்கும் சரியாய் போச்சு. நம்ம தலையெழுத்து... பெண் பிள்ளையைப் படிக்க வைச்சு வேலைக்கு அனுப்பிப் பிழைக்க வேண்டியிருக்கிறது. தாயின் அரவணைப்பிலே யிருக்கத்தான் அது கொடுத்துவைக்கவில்லை. வீட்டோடு செழுமையாயிருந்து எதிர்கால வாழ்வைப் பற்றி இனிய கனவுகளைக் கண்டு கொண்டிருக்க வேண்டிய வயசு. வேலைக்காக இப்படி அலைந்து கொண்டிருக்கிறது"

தன் மனக்குறையை அவர் சொல்லி ஆற்றிக்கொள்வதற்குள் இருமல் அவரை வாட்டி எடுத்து விட்டது.

"உங்க தம்பிதான் பத்து பள்ளிக்கூடங்களைத் தம் சொந்த நிர்வாகத்தில் வைத்து நடத்துகிறாரே... அவர் மனம் வைத்தால் எத்தனை பேருக்கு வேண்டுமானாலும் வேலை கொடுக்கலாம். பழைய விரோதத்தை மறந்து நீங்களே நேரில் சென்று அவரை ஒரு வார்த்தை கேட்டால் போதும், சார். நம்ம ஜெயந்தி

இப்படி முன்பின் தெரியாதவர்களிடம் சென்று கெஞ்சவேண்டியதில்லை.''

தபால்காரர் நல்ல யோசனைதான் சொன்னார். ஆனால், நெருப்பை மிதித்தவர் போலக் கொதித்து எழுந்தார் பொன்னம்பலம்! ''அந்தத் துரோகியின் பேச்சை என் காதில் போடாதீர்கள். நான் செத்தால்கூட அவன் முகத்தில் விழிக்க மாட்டேன். ஆயிரம் தில்லு முல்லுகளையும் பித்தலாட்டங்களையும் செய்து எங்கள் குடும்பத்தையே சீரழித்தவன், அவன். எங்கள் பெற்றோர்கள் தள்ளாத காலத்தில் கண்களை மூடியபோதுகூட உள்ளூரிலேயே இருந்தும் எட்டிப் பார்க்காத நாசகாலன். நான் மானமுள்ளவன்; ரோஷம் உள்ளவன். நான் இறந்தால்கூட உதவி என்று அவன்முன் போய் நிற்க மாட்டேன்.''

மனக் கொதிப்பின் மிகுதியால் அவருக்கு இருமல் அதிகரித்து விட்டது. மேல்மூச்சு வாங்கியது.

'இன்று இருப்பார் நாளையில்லை; இதில் வைராக்கியம் எதற்கு' என்ற எண்ணத்தாலும் அந்த இரு ஜீவன்கள் படும் துன்பத்தாலும் தமக்குத் தெரிந்த யோசனையைக் கூறிய தபால்காரர், பொன்னம்பலனாரின் சிற்றத்தைக் கண்டு பிரமித்துப் போனார்.

மனிதர்கள் உடல் தளர்ந்தாலும் உள்ளம் தளராமல் வீம்பு பேசுவதில் மட்டும் கொஞ்சமும் சளைப்பதில்லை.

''உங்க பெருந்தன்மைக்கும், ஜெயந்தியின் அழகுக்கும் நல்ல குணத்துக்கும் எல்லாம் நல்லபடியா முடியும். நீங்க உங்க உடம்பை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளுங்கள், சார். எனக்கு 'பீட்'டுக்கு நேரமாச்சு; நான் வர்றேன்.''

தபால்காரர் நடையைக் கட்டியதும், தமது வெள்ளெழுத்துப் பார்வையால் கடிதத்தைப் பார்த்துக்கொண்டே உள்ளே சென்றார், பொன்னம்பலனார்.

கடிதத்தின் அடியில் 'பொ. ஜெயந்தி' என்று கையெழுத்து இடப்பட்டிருந்தது.

'அது யார், ஜெயந்தி...? கையெழுத்துக்கூட நம் பெண்ணின் கையெழுத்தைப்போலவே இருக்கிறதே...?'

நினைத்து நினைத்துப் பார்த்தார். பிடிபடவில்லை. தட்டுத் தடுமாறிக் கடிதம் முழுவதையும் படித்தார்.

திண்டிவனம்,
25–2–'62.

அன்புள்ள ஜெயந்திக்கு! என் பிறந்தகத்திலிருந்து இந்தக் கடிதத்தை எழுதுகிறேன். பயிற்சிப் பள்ளியில் படித்தபோது எங்கள் குடும்பநிலையைப்பற்றி உனக்குக் கூறியிருக்கிறேன். நம் பள்ளியின் எதிரில் வானளாவித்தழைத்து வளர்ந்து நூற்றுக் கணக்கான

பறவைகட்குப் புகலிடம் தந்து, நம்முடன் படித்த இருநூறு சகோதரிகட்கும் அமர்ந்து பேச குளிர்ந்த நிழலைக் கொடுத்து உதவிய அந்தப் பெரிய ஆலமரத்தின் அடியில் உட்கார்ந்து உனக்கு எங்கள் குடும்பத்தின் நிலைபற்றிக் கதை கதையாக எத்தனையோ தடவை சொல்லியிருக்கிறேன். என் கணவரின் தவறான போக்கை எண்ணி எண்ணி நான் விட்ட கண்ணீரால்தான் அந்த ஆலமரம் தழைத்து வளர்கிறது என்றுகூட என்னைக் கிண்டல் செய்வாய். 'நீ ஆலமரத்தின் கீழே உட்கார்ந்து முகத்தை 'உம்'மென்று வைத்துக்கொண்டு அழுவதை நிறுத்தி விடாதேடி. பிறகு உன் கண்ணீர் இல்லாமல் மரம் பட்டு விடப் போகிறது' என்று விளையாட்டாகப் பேசி என்னைச் சிரிக்க வைத்து விடுவாய்.

ஜெயந்தி! என் கணவர் போக்கு இன்னும் மாறவில்லை. அவர் யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் எங்கேயோ ஓடி விட்டார். இந்த நிலையில் தேர்விலும் நான் தோல்வி. 'நாம் படிப்பதற்குத்தானே இங்கு வந்துள்ளோம். வீட்டில் உள்ள சூழ்நிலைகளை நினைத்து நினைத்து மனம் கலங்கி அழுவதற்காகப் பயிற்சிப் பள்ளிக்கு வரவில்லை. எல்லாக் கவலைகளையும் தூக்கி யெறிந்துவிட்டு படிப்பில் கவனம் செலுத்து. முதலில் தேர்வில் வெற்றியடைவதற்கான வழியைப் பார். நன்றாகப் படி' என்று நீ படித்துப் படித்துச் சொன்னதைக் கேட்காமல் போய்விட்டேன். தோல்வியடைந்துவிட்டு இன்று அல்லல்படுகிறேன். தேர்வில் வெற்றி பெற்றவர்களே வேலை வாங்க முடியாமல் இருக்கும்போது, தோல்வியுற்ற எனக்கு எப்படி வேலை கிடைக்கும்? தாய் வீட்டிலும் சூழ்நிலை சரியில்லை. என் எதிர்காலம் இருள் நிறைந்து பயங்கரமாகக் காட்சியளிக்கிறது. உள்ளம் ஒன்றிய நம் சிநேகிதத்தின் பேரால் வேண்டுகிறேன். இந்தக் கடிதம் கண்டதும் ஒரு தடவை திண்டிவனம் வந்துபோ. நேரில் நிறையப் பேச வேண்டியிருக்கிறது.

உன் அன்புள்ள,
ஜெயந்தி.

கடிதத்தைப் படித்து முடித்ததும் களைப்பு மிகுதியால் சாய்வு நாற்காலியில் சாய்ந்தவாறு மனம் குழம்பிக் கொண்டிருந்தார், அவர்.

"அப்பா..." என்று கனிந்த குரலைத் தூது அனுப்பியவண்ணம் அவர் மகள் ஜெயந்தி வந்தாள்.

"போன காரியம்..." என்று இருமலால் இழுத்தார், தந்தை.

அவள் ஆசிரியை வேலைக்குப் பயிற்சி பெற்றவள் அல்லவா? ஆகையால் 'சென்ற வேலை பூஜ்யம்...' என்று வலது கை ஆள் காட்டி விரலால் பெரிதாக 'சைபர்' போட்டுக் காட்டினாள்.

"எப்போதுதான் உனக்கு வேலை கிடைக்குமோ; எனக்கு நிம்மதி பிறக்குமோ..." கவலையில் தோய்ந்த பொன்னம்பலம் வந்த கடிதத்தை எடுத்து ஜெயந்தியிடம் நீட்டி, "யாரம்மா இந்த ஜெயந்தி?" என்று வினா தொடுத்தார்.

மடலில் மான்விழியை மேய விட்ட ஜெயந்தி, "என் தோழி, அப்பா! அவள் பெயரும் ஜெயந்தி தான். பள்ளியில் குழப்பம் வரக்கூடாது என்று 'வசந்தி' என்று அவளை நாங்கள் அழைப்போம். எனக்கிருப்பதைப் போலவே நெற்றிப் பொட்டின் உச்சியில் ஒரு மச்சமும், இடது கை சுண்டு விரலில் ஒரு மச்சமும் அவளுக்கும் இருக்கின்றன. என் சாயலே அவளுக்கும் அதனால் எங்களை 'அபூர்வ சகோதரிகள்' என்று ஆசிரியர்களும் மாணவிகளும் கிண்டல் செய்வார்கள். உங்களிடம் அவளைப்பற்றிப் பல தடவை சொல்லியிருக்கிறேன். நீங்கள்தான் மறந்து விட்டீர்கள். பாவம், அவள் வாழ்க்கை இப்படி ஆகிவிட்டது. அப்பா! இரண்டு நாள் கழித்து நான் திண்டிவனம் போய்வரட்டுமா?" சிறு விளக்கத்திற்குப் பின்னர் தந்தையிடம் அனுமதி கேட்டாள், ஜெயந்தி. அவரும் அவள் விருப்பத்திற்குத் தலையசைத்தார்.

## 2

திண்டிவனம்; ராஜாங்குளம்...

உயர்ந்த பெரிய அரசமரத்தின் அடியில் 'அபூர்வ சகோதரிகளான' தோழிகள் இருவரும் மாலைத் தென்றலைக்கூட அனுபவிக்காமல் குளத்தில் நிரம்பியிருந்த நீரைப்பார்த்தவாறு அமைதியாக அமர்ந்திருந்தனர். செப்புக் குடங்கள் இரண்டும் அந்தச் செதுக்காத பொற்சிலைகளின் முன்பு தலைசாய்ந்து கிடந்தன.

ஜெயந்தி, ஜெயந்தியிடம் சொன்னாள்:

"ஆமாம், ஜெயந்தி! என் வாழ்க்கையே போய்விட்டது. 'எங்கள் எல்லோரையும் மீறி உன் இஷ்டப்படி தானே திருமணம் செய்து கொண்டாய்? நீ இங்கு இருக்க வேண்டாம். உன்னைப்பற்றி எங்களுக்குக் கவலையில்லை. நீ உன் கணவன் வீட்டிற்குப்போய்விடு' என்று இரத்த பாசத்தையும் மறந்து என்னைப் பெற்றவர்கள் கூறுகிறார்கள்; 'உதாரித்தனமாகத் திரிந்து கொண்டிருந்தவனை நீயாகப் பார்த்துக் கட்டிக் கொண்டாய். அவனே வீட்டை விட்டு எங்கேயோ ஓடிவிட்டபிறகு உனக்கு மட்டும் இங்கென்ன வேலை?' என்று மாமியார் வீட்டில் ஆத்தியடிக்கிறார்கள். போக்கிடம் இல்லாமல் தவிக்கிறேன், ஜெயந்தி! ஆசிரியத் தேர்வில் வெற்றி பெற்றிருந்தாலும் பாதகமில்லை. எங்கேயாவது ஒரு வேலையைத் தேடிக் கொண்டு என்வரை பிழைத்துக் கொள்வேன். அதிலும் தோல்வி......"

"தேர்வுக்குத்தான் மறுபடியும் பணம் கட்டியிருக்கிறாயே. இன்னும் ஒரு மாதம் இருக்கிறது, தேர்வுக்கு! நீ கஷ்டப்பட்டு ஒரே மனநிலையோடு படித்தால் இதில் நிச்சயம் வெற்றியடைந்து விடுவாய்" என்று தோழியைத் தேற்றினாள், ஜெயந்தி.

"இன்னும் நூறு தடவை எழுதினாலும் தேர்ச்சியடைய மாட்டேன், ஜெயந்தி! பயிற்சிப் பள்ளியில் இரண்டு ஆண்டுகள் பயிற்சி பெற்று எழுதியபோதே நான் தேறவில்லை. என் எதிர்கால வாழ்வை எண்ணி எண்ணி என் மனம் அந்த அளவு புண்பட்டுக் குழம்பி விட்டது. உன்னைப்போல் திருமணம் ஆகாமல் இருந்தால் எவ்வளவோ மகிழ்ச்சியடைவேன். மூன்று ஆண்டுகளுக்கு முன்பே திருமணம் செய்து கொண்டு நான் இப்படியெல்லாம் நாசமாகி விடுவேனா...?"

தோழியின் அவலநிலை கண்டு ஜெயந்தி மனம் கசிந்து உருகினாள். பின்னர், அவளுடைய குடும்பத்துன்பம் வெடித்தது.

"என் வாழ்க்கை மட்டும் என்ன வாழ்கிறதாம். என் தந்தை என் அன்னை இறந்த பிறகு என்னை எவ்வளவோ அருமையாகக் கண்காணித்துப் பத்தாவது வரை படிக்க வைத்துப் பயிற்சிப் பள்ளிக்கும் அனுப்பினார். நான் வெற்றி பெற்றும் எட்டு மாதமாக வேலை கிடைக்கவில்லை. அப்பா காச நோயால் இரவு பகலாகத் துன்பப்படுகிறார். இப்போதெல்லாம் படுக்கையைவிட்டே அவரால் எழுந்திருக்க முடியவில்லை. ஆண் மகனாகப் பிறந்திருந்தால் எங்கேயாவது கூலிக்குச் சென்றாவது அவருக்குச் சரியான உணவும் மருந்தும் வாங்கிக் கொடுக்க முடியும். பதினெட்டுவயதுப் பெண் என்ன செய்யமுடியும்? அவருக்கு வேளாவேளைக்கு உணவு தருவதற்குக்கூட முடியாமல் தத்தளிக்கிறேன். நான் தான் எப்படியோ பொறுத்துக் கொள்கிறேன். காச நோயில் உள்ள அவர் இரண்டுநாட்களுக்கு ஒரு வேளை சாப்பிடுவதென்றால்......நானே பட்டினி போட்டு அவரைக் கொன்றுவிடுவேன் போலிருக்கிறதடி...இந்த நிலையில் நான் வெற்றி பெற்றுதான் என்ன பயன்...?"

"ஜெயந்தி...!"

"ஆமாம்; நான் எவ்வளவு சங்கடமான நிலையில் இருக்கிறேன்? யாராவது முன்னூறு ரூபா கொடுப்பதாக இருந்தால் என் உயிரைக் கூட அவர்களுக்கு விற்றுவிடுவேன். என் உடலையும் உயிரையும் அறிவையும் வளர்த்து என்னை ஆளாக்கிய அவருக்கு நான் என் உயிரை விற்றாவது உதவி செய்வதுதானே என் கடமை?"

"ஜெயந்தி! எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது;

அதைச்சொன்னால் நீ கோபித்துக் கொள்ளமாட்டாயே?''

''என்னடி...''

''ஒன்றுமில்லை! நான் பள்ளியில் அவ்வளவு நெருங்கிய உயிருக்கு உயிரான சிநேகிதியாக இருந்தும் என்னிடம் கூட ஒரு சிறு உதவியையும் நீ கேட்கமாட்டாய்; நீ வாரிக்கொள்ளும் சீப்பு உடைந்துவிட்டால் வேறு ஒருவர் சீப்பைக் கேட்டு வாங்கித் தலை வாரிக்கொள்ள மாட்டாய்; உன்னிடம் தேங்காய் எண்ணெய் ஆய்விட்டால் ஒரு வேளைக்குத் தானே என்று யாரிடமும் எண்ணெய் கேட்கமாட்டாய். அவசியம் ஏற்பட்டாலும் இப்படி ஒரு சிறு தேவையைக்கூடப் பிறர் பொருளில் பூர்த்தி செய்து கொள்ளாதவள் நீ! நானே வலிய உதவி செய்ய வந்தாலும். என்னைக் கோபித்துக் கொள்வாய்! எவ்வளவு அவசியம் இருந்தாலும் பிறருக்குக் கைமாறோ ஈடோ செய்யாமல் அவர்களிடமிருந்து எந்த உதவியையும் நாம் பெறக்கூடாது என்று கூறுவாய். அவ்வளவு கண்டிப்பானவள், நீ! அதனால்தான் என் யோசனையை உன்னிடம் கூறப் பயமாக இருக்கிறது, ஜெயந்தி!'' என்றாள், தோழி.

''போடி, பைத்தியக்காரி! அதெல்லாம் ஒன்றுமில்லை. தைரியமாகச் சொல்'' என்றாள் ஜெயந்தி செல்லமாக அவள் கன்னத்தில் தட்டிக்கொண்டே!

''வேறொன்றுமில்லை. இதுதான். என் நகைகளை விற்றால் முன்னூறு ரூபா தேறும், ஜெயந்தி! விற்றுத் தருகிறேன். எடுத்துச் சென்று முதலில் உன் தந்தையின் மருத்துவச் செலவைப் பார்க்கிறாயா?''

தோழியின் யோசனையும் அரிய உதவியும் சிறந்தனவாகவே தோன்றின ஜெயந்திக்கு! நம் தொல்லைக்காக நம் தோழி தன் நகைகளை இழப்பதா? அதிலும், வேறெந்த ஈட்டையும் காட்டாமல் நட்பை மட்டும் முதலாக வைத்தா அவள் பணத்தைப் பெற்றுச் செல்வது? என்று குழம்பிய ஜெயந்திக்கு 'பளிச்' சென்று ஒரு எண்ணம் தோன்றியது. ஆம்! அப்படிச் செய்தால்தான் தந்தையைக் காப்பாற்றியதாகவும் இருக்கும்; தன் கொள்கைக்கும் முரணில்லாமல் இருக்கும்! உடனே அவள் ஒரு முடிவுக்கு வந்தாள். அவள் பிடிவாதக்காரி. ஒரு முடிவுக்கு வந்தால் அதைச் செய்தே தீருவாள்!''

''சரி, அப்படித்தான் உன் நகைகளை விற்றுக்கொடு. பணம் வாங்கிக் கொள்கிறேன் ஆனால், நான் சொல்வதைப்போல் நீ கேட்கவேண்டும்'' என்றாள், தோழியிடம்!

''என்ன சொல்...!''

'' இப்படி வா, சொல்கிறேன்...!.

ஜெயந்தி தன் தோழியின் காதில் சேதியைச் செருகினாள்

சேதி கேட்ட தோழி, பதறிப் போனாள்.

"ஆ...அப்படி வேண்டாம், ஜெயந்தி. அது தவறான காரியம். நான் இதற்கு ஒப்புக் கொள்ள மாட்டேன்."

ஜெயந்தியின் இதழ்களில் வேதனைச் சிரிப்பு வெடித்தது.

"ஒப்புக் கொள்ளா விட்டால் உன் பணம் எனக்கு வேண்டாம்"

"வேண்டாம், ஜெயந்தி! இதிலெல்லாம் வீண் பிடிவாதம் செய்யாதே. உன் கொள்கையே முட்டாள்தனமானது. உலகத்தில் ஒருவர் உதவியை ஒருவர் நாடாமல் வாழ முடியாது!" என்றாள் தோழி!

"என் கொள்கை மூட நம்பிக்கையாக இருந்தாலும் சரி! அதுதான் எனக்கு உயர்ந்தது. என் துன்பத்தைப் போக்க நீ பணம் தருகிறாய். அந்தப் பணத்தைத் திருப்பிக் கொடுக்கும் வரை ஈடாக என் பொருளை உனக்குக் கொடுக்கிறேன். மேலும், என்னுடைய பொருள் ஒன்று உன்னிடம் இருந்தால் தானே உன் கடனை விரைவில் கொடுக்க நான் முயற்சிப்பேன்!"

அதற்காக உன் எதிர் காலத்தை உன் ஒரே பற்றுக்கோடான கொழுகொம்பை நான் தகர்த்தெறிய வேண்டுமா, ஜெயந்தி! நீ சொல்வது எனக்குக் கொஞ்சம் கூட பிடிக்கவில்லை. உனக்கு சமயத்துக்கு உதவி செய்வதற்குக் கூடவா எனக்கு அருகதையில்லாமல் போய் விட்டது? சிநேகிதியிடமே நீ இப்படியெல்லாம் பேசுவதைக் கண்டு ரொம்பவும் வருத்தப்படுகிறேன்."

"அது தவறு. என் சிநேகிதியிடம்கூட என் கொள்கை வைராக்கியத்துடன் இட சித்தமுள்ள என்னை நீ பாராட்ட வேண்டுமே தவிர, கோபித்துக் கொள்ளக் கூடாது!" என்று ஜெயந்தி சிரித்துக் கொண்டே கூறினாள்.

"நீ சொல்வதைவிட நான் ஒரு வழி சொல்கிறேன். அது நீ சொல்லும் அபத்தமான செயலைவிட எவ்வளவோ நல்ல வழி. நீ என்னிடம் பணம் வாங்கிக் கொண்டு போ. உன் 'சர்டிபிகேட்டை'க் காண்பித்து எங்கேயாவது சீக்கிரத்தில் வேலை வாங்கிக்கொள். மாதா மாதம் நூறு ரூபா உனக்குச் சம்பளம் கிடைக்கும். அதில் உங்கள் குடும்பச் செலவும் உன் தந்தையின் மருந்துச் செலவும் போக மீதி பத்தோ பதினைந்தோ என்னிடம் வாங்கிய பணத்துக்காக எனக்கு அனுப்பிவிடு. அதுதான் நல்லது. திருப்பிப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற எண்ணத்துடன் உனக்கு நான் இந்தப் பணத்தைக் கொடுக்கவில்லை. நீயாகவே திருப்பிக்கொடுத்துவிட்டுத்தான் மறுவேலை பார்ப்பேன் என்று பிடிவாதமாகக் கூறுவதால் இதைச் சொன்னேன். அதை

விட்டுவிட்டு நீ சொல்வதைப் போல் செய்தால் ஒரு அரிய பொருள் எதற்கும் பயன்படாமல் போவதுடன் உனக்குக் கிடைக்க வேண்டிய எவ்வளவோ பணமும் கிடைக்காமல் வீணுகி விடுகிறது'' என்ருள் தோழி. அதற்கு ஜெயந்தி ஒப்புக்கொள்ளவில்லை.

''நீ சொல்வதும் ஓரளவு உண்மைதான். இருந்தாலும் அப்படிச் செய்து உன் உதவியைப் பெற நான் விரும்பவில்லை. அதனுல் எனக்கொன்றும் பெரிய நஷ்டமில்லை. மேலும், என் தந்தை இருக்கும் நிலையில் அவரைத் தனியாக வீட்டில் விட்டு விட்டு நான் பள்ளிக்குச் சென்று வேலை செய்யவும் மனம் ஓடாது. எனக்கு என் எதிர்காலத்தை விட என் தந்தையின் உயிரே முக்கியமாகப் படுகிறது. உன் பணத்தைத் திருப்பிக் கொடுத்த உடன் நான் என்னுடையதை வாங்கிக்கொள்கிறேன். சரி என்று சொல். அப்படிச் சொன்னுல்தான் உன்னிடமிருந்து நான் பணத்தை வாங்கிக்கொள்வேன்'' என்று முரட்டுத்தனமாகப் பேசினுள், ஜெயந்தி!

ஜெயந்தியின் பிடிவாதத்திற்கு முன் எவ்வித உபதேசமும் செல்லாது என்று அவள் தோழிக்கு நன்ருகத் தெரியும். அவள்தான் எத்தனையோ வகையில் பயிற்சிப்பள்ளியில் அவள் குணத்தைப் பற்றித் தெரிந்து வைத்துக் கொண்டிருக்கிருளே!

ஆகவே, ஜெயந்தியின் தந்தையினுடைய மருத்துவச் செலவுகளுக்காவது தன் பணம் பயன்படட்டும். பிறகு சிநேகிதியின் மனத்தை மாற்றிக் கொள்ளலாம் என்ற எண்ணத்துடன் தனக்குப் பிடிக்காத அந்த ஒப்பந்தத்தைத் தற்காலிகமாகவும் அரை மனத்துடனும் ஜெயந்தியின் பிடிவாத குணத்திற்காக ஒப்புக் கொண்டாள்.

தோழிகள் இருவரும் எழுந்து, தங்கள் சேலைகளை உதறி ஒழுங்குபடுத்திக்கொண்டு குடங்களை எடுத்துக்கொண்டு குளத்தில் இறங்கினர், தண்ணீர் எடுத்துச் செல்ல !

நகையை விற்று, அன்று இரவே ஜெயந்தியிடம் பணம் கொடுத்து மறுநாள் காலை அவளை வாலாசாபாத்திற்கு அனுப்பி வைத்தாள் தோழி!

## 3

நான்கு மாதங்கள் கடந்தன. தன் தோழி தேர்வு எழுதினுளா? தேர்வில் வெற்றி பெற்ருளா இல்லையா? அவள் எப்படியிருக்கிருள்? எங்கேயோ ஓடிப் போன அவள் கணவன் திரும்பி வந்தானு என்ற விவரங்கள் எதுவுமே ஜெயந்திக்குத் தெரியாது. அவள் திண்டிவனத்தில் உள்ள தன் சிநேகிதிக்குக் கடிதம் எழுதித் தெரிந்துகொள்ளவும் இல்லை. அவள் தோழியும் இவள் நலம் கோரிக்கூட ஒரு வரி எழுதவில்லை.

பொழுது விடிந்தால் தன் தந்தையை மருத்துவமனைக்கு அழைத்துச்சென்று டாக்டரிடம் காட்டுவதும் பிறகு, டாக்டர் தரும் சீட்டை எடுத்துக்கொண்டு மருந்து வாங்குவதற்காக, கடைக்கு ஓடுவதும், தந்தைக்கு அருகில் இருந்து மருந்து கொடுத்து அவருக்கு ஆகவேண்டியவற்றைப் பரிவுடன் கவனிப்பதுமாக ஜெயந்திக்கு ஓயாத வேலைகள். உலகத்தையே மறந்துவிட்டு, தன் தோழியிடமிருந்து வாங்கிவந்த பணத்தைக்கொண்டு தந்தையின் நோயோடு போராடிக் கொண்டிருந்தாள்.

பொன்னம்பலனுருக்கோ தன் அருமை மகள் ஜெயந்தி அழகாகத் தன்னை அலங்கரித்துக் கொண்டு கையில் குடையுடன் மற்ற ஆசிரியைகளைப் போல் தினமும் பள்ளிக்குச் சென்று வரும் அழகுக் காட்சியைக்காண வேண்டும் என்று பேராவல். ஆகவே, அவர் மகளை அடிக்கடி கச்சரித்துக்கொண்டிருந்தார்.

"ஏம்மா, ஜெயந்தி! நீ ஆசிரியர் வேலைக்குப் படித்து நிறைய மார்க்குகள் பெற்று சர்டிபிகேட்டையும் வாங்கி வைத்துக் கொண்டு, இப்படி வீட்டில் என்னோடு அடைந்து கிடக்கிறாய்? நீ வேலைக்கு முயற்சி செய்யம்மா" என்பார்.

ஆனால், அவளோ "நான் ஐந்து இடங்களுக்கு எழுதிப் போட்டிருக்கின்றேன், அப்பா! இந்தக் காலத்தில் சிபாரிசு உள்ளவர்களுக்குத் தானே அப்பா ஆசிரியை வேலை சீக்கிரத்தில் வசதியாகக் கிடைக்கிறது. இல்லையென்றால் இருபது மைல்களுக்கப்பால் வசதியில்லாத இடத்தில் போட்டு விடுகிறார்கள். உங்கள் உடம்பு கொஞ்சம் நன்றாக ஆகட்டும், அப்பா! நான் எப்படியாவது வேலை வாங்கிக் கொள்கிறேன்" என்று தந்தைக்கு சமாதானம் சொல்லிக்கொண்டு வந்தாள், அவள்.

"செலவுக்குப் பணம் ஏது அம்மா?" என்று கேட்டதற்குத் தன் தோழியின் அன்பான உதவியைக் கூறினாள்.

இத்தனைக்கும் இடையில் விவரிக்க முடியாத ஏதோ ஒரு குறை—இழக்கக்கூடாத ஒரு பொருளை வேண்டுமென்றே இழந்துவிட்டதாக ஒரு பெரிய குறை அவள் இதயத்தை உறுத்திக்கொண்டேயிருந்தது. எதனால் அந்தக் குறை ஏற்படுகிறது என்பது அவளுக்கே தெரியும். தெரிந்து என்ன பயன்? அந்தக் குறையை அவள் தன் தந்தையிடம் சொல்லி ஆற்றிக்கொள்ள முடியுமா என்ன?

தோழி, சமயத்தில் உதவிய பணத்துக்காக, தன் எதிர்கால வாழ்வின் முக்கியமான பிடிப்பை ...ஒளிகாட்டும் கைவிளக்கை குறுக்கு வழியில் ஈடு செய்தது பெரிய குறைதான்.

ஒரு நாள், தனக்கு இரண்டு ரூபா வேண்டும் என்று கேட்டார், பொன்னம்பலம். 'ஏன்?

என்று கேட்காத ஜெயந்தி, நான்கு மாதச் செலவுக்குப் பிறகு, கடைசியாக மீதியிருந்த இரண்டு ரூபாயைத் தந்தையினிடம் கொடுத்து விட்டு, டாக்டரிடம் சென்றாள், மருந்து வாங்கி வர!

"உன் தந்தைக்கு உடல் நோயைவிட மன நோய் தான் ஜெயந்தி, அதிகம்; உன்னைப்பற்றி அதிகம் கவலைப்படுகிறார் போலிருக்கிறது" என்றார், டாக்டர்.

மருத்துவ மனையிலிருந்து அவள் வீட்டுக்கு வந்தபோது, அவர்கள் வீட்டின் எதிரில் ஒரு குதிரை வண்டி நின்றிருந்தது. அவள் தெரு முனையைத் தாண்டி வீட்டிற்கு வருவதற்குள் அந்த வண்டி போய் விட்டது. அது அவளுடைய சித்தப்பா வீட்டு வண்டி.

"அப்பா படுத்த படுக்கையாகக் கிடந்தபோது கூட பக்கத்துத் தெருவில் இருந்த சித்தப்பா பணத்திமிரால் வந்து எட்டிப் பார்க்கவில்லை. 'உடம்புக்கு என்ன' என்று ஒரு வார்த்தை விசாரிக்கவில்லை. அந்த மனிதர் வீட்டு வண்டி எதற்காக அங்கே வந்து போகிறது?"

கேள்விக்குறியை முகத்தில் தேக்கிக் கொண்டு உள்ளே நுழைந்தாள், ஜெயந்தி.

சாய்வு நாற்காலியில் சாய்ந்து படுத்துக் கூரைமுகட்டில்பார்வையைப் பதித்துக் கொண்டிருந்த பொன்னம்பலனாரின் கண்களில் நீர் வழிந்து கொண்டிருந்தது. மகளின் வருகையை உணர்ந்த அவர், தன் அழுகையை அவள் பார்த்துவிடக்கூடாதென்று கண்களைத் துடைத்துக் கொண்டார். ஆனால் ஜெயந்தியின் அம்பு விழிகள் அவர் செய்கையைப் பார்த்து விட்டன.

மருந்து புட்டியை மாடத்தில் வைத்துவிட்டுத் தன் தந்தையின் முழங்கால்களில் முகத்தைப் பதித்துக்கொண்டு தரையில் உட்கார்ந்த ஜெயந்திக்குத் துக்கம் தாளமுடியவில்லை. அவருடைய கால்களைப் பற்றிக் கொண்டு விம்மினாள்.

"அப்பா! நான் இவ்வளவு பெரியவளாகியும் என்னப்பா பயன்? உங்களுக்கு ஒன்றுமே செய்ய முடியாதவளாக இருக்கிறேன். உங்களுக்கு இருக்கும் உடல் நோய் போதாதென்று, நான் வேறு சுமையாக இருந்து உங்கள் இதயத்தை வருத்திக் கொண்டிருக்கிறேன்."

மகளின் கூந்தலை அன்புடன் கோதிக் கொண்டே, பொன்னம்பலம் விழிகளில் நீர் வழிய தன் இதயக் கதவைத் திறந்தார்.

"ஜெயந்தி! அழாதேம்மா. நீ படித்தும் உனக்கு வேலை கிடைக்கவில்லை. நீ தான் என்ன செய்வாய்? அதனால்தான் என் வைராக்கியத்தையும் மறந்து உன் பொருட்டு உன் சிற்றப்பனிடம் சென்றேன், ஒரு வண்டியை அமர்த்திக்கொண்டு! என்னைக்

கண்டதும் கட்டிக்கொண்டு 'ஓ' வென்று அழுது விட்டான். தன் தவறுகளுக்காக மன்னிப்புக் கேட்டுக் கொண்டான். 'நீ உன் தவறுகளை உணர்ந்ததற்கு அடையாளமாக நம் ஜெயந்திக்கு உன் நிர்வாகத்தில் உள்ள பள்ளிகள் ஏதாவது ஒன்றில், ஒரு ஆசிரியை வேலை கொடுடா' என்று சொன்னேன். 'கட்டாயம் வேலை கொடுக்கிறேன். அதைக்கூடச் செய்ய வில்லையென்றால் நான் இருந்துதான் என்ன பயன்? இன்று இருப்பார் நாளை இல்லை. நான்தான் இவ்வளவு நாட்கள் பணத்திமிரால் உங்களையெல்லாம் மறந்து இருந்தேன். என் தவற்றை மன்னியுங்கள். நாளைக்கே ஜெயந்தியை வரச் சொல்லுங்கள், அண்ணா' என்றான். நான் திரும்பி வருவதற்கும் வண்டி அனுப்பினான். நான் வைராக்கியத்தோடு உயிர் துறந்து என்னம்மா லாபம்? உனக்கு ஒரு நல்வழி தேடி வைக்க வேண்டும் என்ற நீங்காத ஆசையால்தான் என் நீண்டநாள் உறுதியையும் தளரவிட்டு அவனிடம் சென்றேன்."

இருமலும் இழுப்பும் அவரை வதைத்து எடுக்கவே நீண்ட தொரு பெருமூச்சோடு உரையை முடித்தார்.

அதுவரை இதயப் பொருமலோடு கேட்டு வந்த ஜெயந்தி பொங்கிவந்த அழுகையை அடக்க முடியாமல், "என்னை மன்னித்து விடுங்கள், அப்பா. உங்கள் நீங்காத ஆசையை நிறைவேற்ற முடியாத நிலையில் நான் இருக்கிறேன். சர்டிபிகேட் இல்லாமல் எப்படியப்பா நான் ஆசிரியர் வேலைக்குச் செல்ல முடியும்? உங்கள் நோயை எப்படியும் குணப்படுத்த வேண்டும் என்ற ஆவலால் என் 'சர்டிபிகேட்டை' முந்நூறு ரூபாய்க்கு ஈடு வைத்துள்ளேன் அப்பா..." என்று தந்தையின் கால்களைக் கட்டிக் கொண்டு கதறினாள்.

காசநோயின் கோரப்பிடியில் சிக்கித் திணறிக்கொண்டிருந்த பொன்னம்பலனாரின் இதயம் வெடித்துச் சிதறியது.

"ஆ...சர்டிபிகேட்டை ஈடு வைத்தா இத்தனை நாளா என் உடலைக் கவனித்தாய்? உன் நலனுக்காக, பரமவைரியான என் தம்பியிடம் சென்று உதவி கோரினேனே! உன் வாழ்க்கைக்கு ஊன்றுகோலான நான் உனக்குத் தேடி வைத்த சொத்து அந்தச் சர்டிபிகேட்டு ஒன்று தானே, அம்மா! அந்த ஒரே ஒரு சொத்தையும் இந்தப் பாவிக்காகவே இழந்துவிட்டுத்தான் இத்தனை நாட்களாக 'வேலைக்கு முயற்சி செய்யம்மா' என்று பல தடவை சொன்னபோதெல்லாம் புன்முறுவலுடன் 'முயற்சி செய்து கொண்டுதான் அப்பா இருக்கிறேன்' என்று சொல்லிக் கொண்டிருந்தாயா? உண்மையைச் சொன்னால் நான் வருத்தப் படப் போகிறேன் என்று நினைத்தா அம்மா என்றுமே

பொய் சொல்லாத நீ என் பொருட்டு இத்தனை நாட்கள் பொய் சொல்லிக் கொண்டிருந் தாய்? எல்லாம் வீணாகி விட் டதே!

"உன் எதிர் காலம் செழிப்பு டன் இருக்க வேண்டுமென்று தானே கண்ணே, எத்தனை நாட் கள் இராப்பட்டினி பகல் பட் டினி கிடந்து உன்னைப் பயிற்சிப் பள்ளியில் படிக்கவைத்தேன். கடைசியில் எனக்காகவே நீ எவ் வளவு தியாகம் செய்திருக்கிறாய்? நான் எந்த வகையிலும் நன்மை யைச் செய்ய முடியாதவனாகி விட்டேனே, ஜயந்தி! நான் உயிரோடு இருக்கும் வரை உனக்கு சுமையாகத்தானம்மா இருப்பேன்? நான் இறந்தால் தான்...ஜெயந்தி......ஜெ....ய... ந்...தி...!"

ஜெயந்தி வாய் திறப்பதற்குள் அவர் வாய் அடைத்துவிட்டது. சாய்வு நாற்காலியில் சாய்ந்த படியே கண்களை மூடிவிட்டார்.

எந்தத் தியாகம் செய்து தந் தையின் உயிரைக் காப்பாற்றி விடலாம் என்று அந்தப் பேதைப் பெண் நினைத்தாளோ அந்தத் தியாகமே அவர் உயிரை வாங்கி விட்டது...!

ஜெயந்தியின் நெஞ்சமே பிளந்துவிடும் போலிருந்தது. அவளுடைய கதறலைக் கேட்டு, அக்கம் பக்கத்திலிருந்த பெண் கள் ஓடி வந்தனர். "அய்யோ பாவம்! எவ்வளவோ நல்லவர்" என்று அங்கு எழுந்த முணு முணுப்புக்களை அமுத்திக் கொண்டு "சார்...போஸ்ட்" என்ற தபால்காரரின் குரல் ரீங் காரம் இட்டது.

தபாலைக் கொடுத்துவிட்டுத் தனது ஆழ்ந்த அனுதாபக் கண் ணீரைச் சிந்திய தபால்காரர் அப்பால் சென்றார். யாரோ ஒருத்தி தபாலைப் பிரித்து ஜெயந் தியிடம் நீட்டினாள்.

கவருக்குள் ஜெயந்தியின் சர்டி பிகேட்டும் ஒரு கடிதமும் இருந் தன. அவளுடைய தோழி அனுப்பியது தான். ஜெயந்தி யின் நீர் நிரம்பிய விழிகள் கடி தத்தில் நீந்தின.

திண்டிவனம்,
31-6-62.

அன்புள்ள ஜெயந்தி! அந்த உன்னுடைய அன்பு எனக்குத் தன்னம்பிக்கையை ஊட்டியது. ஒரு மாதகாலம் உறுதியான மன நிலையுடன் அமர்ந்து படித்துத் தேர்வு எழுதினேன். அதன் முடிவு தெரிந்த பின்னரே உனக்கு மடல் தீட்டவேண்டும் என்று இருந்தேன். முடிவு தெரிந்தது; உன் அன்பான வாழ்த்தலின்படியே தேர்வில் வெற்றி பெற்றுள்ளேன். என் கணவரும் மனம் திருந்தி இன்று தான் வீடு வந்து சேர்ந்தார்.

என்ன இருந்தாலும், நீ என் னுடைய அன்பான வேண்டு கோளையெல்லாம் புறக்கணித்து விட்டுக்கேவலம் என் பணத்திற்கு

ஈடாக உன் 'சர்டிபிகேட்டை' என்னிடம் தந்தது எல்லையில்லா வருத்தத்தைக் கொடுத்தது.

சான்றுதாளை நீ வாலாசாபாத்துக்குச் சென்ற மறுநாளே அனுப்பிவிட்டிருப்பேன். ஆனால், உனக்குக் கோபம் வந்து நான் கொடுத்தனுப்பிய பணத்தை நீ திருப்பி அனுப்பிவிடுவாயோ என்று பயந்தேன். அதனால்தான் நான் தேர்வில் வெற்றி பெற்ற பிறகு இதை அனுப்புகிறேன்.

அன்புத் தந்தையின் உடல் நலம் பற்றியறிய அவா...

உடன் படல்!

அன்புள்ள,
ஜெயந்தி.

ஐந்து நிமிடங்களுக்கு முன்பு இந்தத் தபால் வந்திருந்தாலும் தந்தை அதிர்ச்சியால் இறந்திருக்க மாட்டாரே என்று விம்மிய ஜெயந்தி மெல்லத் திரும்பித் தந்தையின் முகத்தைப் பார்த்தாள்.

எந்த நேரத்திலும் ஏக்கமும் துக்கமும் விளங்கிக் கொண்டிருந்த அவர் முகத்தில் ஆழங் காண இயலாத அமைதி குடி கொண்டிருந்தது.

தெருவில் ஏதோ வண்டி வரும் ஒலி கேட்டது. கையில் சான்றுத் தாளுடன் இதயத்தை தந்தையின் பிரிவு கனமாக அழுத்த கலங்கிய கண்களுடன் ஜெயந்தி வாயிற்பக்கம் பார்த்தாள்.

தந்தையின் மறைவுச் செய்தி கேட்ட சித்தப்பா குதிரை வண்டியிலிருந்து பரபரப்புடன் இறங்கி உள்ளே வந்தார்

(முற்றும்)

—"பிரசண்ட விகடன்"

MIDDAY MEALS RETURN FOR THE QUARTER ENDING (ENGLISH) 100-Rs. 2-50
(AS PER NEW G. O.)

தபால் சார்ஜ் பிரத்தியேகம்

புதிய பகல் உணவு பாரங்கள்

பகல் உணவு மாதாந்திர அறிக்கை
(தமிழில்) 100-க்கு ரூ. 2-50

ASSOCIATION PUBLISHING HOUSE
94-95, New Street, Mannady, Madras-1.

# இல்லத்தில் தந்தையின் இடம்

(ஸி. ஆர். ஆண்டர்சன், எம். டி.)

"எங்குத் தாய் இருக்கிறாளோ, அதுதான் இல்லம்" என்பது பழமொழி. இந்த எளிய வார்த்தைகளில் ஆழ்ந்த பொருள் பொதிந்துள்ளது. இல்லத்தைப் பற்றி நாம் நினைக்கும் போதெல்லாம் தாயின் நினைவுதான் முதலில் வரும். எனினும் மிகவும் முக்கியமான, நம்மால் அலட்சியப் படுத்த முடியாத வேறு ஒருவரும் இருக்கிறார். அவர்தான் தந்தை. வளர்ந்த பெரிய பிள்ளைகள் இளைஞர்கள் முதலியோர் தகாத்ஒழுக்கம்நிறைந்தவர்களாக இருக்கும் இன்றைய நாளில் தந்தையின் பொறுப்பு மகத்தானது. அதிகாரிகளிடம் மரியாதை காட்ட வேண்டிய நல்ல பழக்கம் சிறு வயதிலேயே வரவேண்டும். அறிவு மிகுந்த, முன் மாதிரியான தந்தையால்தான் இந்தப் பழக்கத்தைக் கொண்டுவர இயலும்.

பெற்றோரில் ஒருவர் இடத்தை மற்றவர் நிரப்ப முடியாது. அதாவது, நல்ல இல்லத்திற்கு இவர்கள் இருவருமே சரிசிகிதமாகத் தேவைப்படுகிறார்கள். குறிப்பாக, குழந்தைகள் வளரும் பருவத்தில் அவர்களை நல்லொழுக்கத்தில் பயிற்றுவிக்க இவர்கள் இருவருமே தேவைப்படுகிறார்கள். வாழ்க்கையின் உண்மைகளை உணர்ந்துகொள்வதற்கு இந்த இருவர் பணியும் இன்றியமையாத தேவையாக இருக்கிறது. இதில் ஒவ்வொருவரும் பலன் பெறுகிறார்கள்.

நல்ல பெற்றோரின் குழந்தைகள் சில சமயங்களில் கெட்டவர்களாக இருக்கிறார்கள். இது எப்பொழுதுமே பெற்றோரின் குறறமல்ல. வளரும் பருவததிலே வரும் சில பழக்கங்கள் குழந்தைகளை நல்லவர்களாக முடியாதவாறு செய்து விடுகின்றன. பணம் சம்பாதிப்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கும் அனேகத் தந்தைமார் தம குழந்தைகட்கு நல்ல பழக்கத்தைக் கற்பிக்கத் தவறிவிடுகின்றனர். இப்படிப்பட்டோர் வாணிப உலகில் எவ்வளவுதான் சிறந்தவர்களாக இருப்பினும் நல்ல பெற்றோராக மாட்டார்கள். நல்ல பெற்றோர் தம் குழந்தைகளை நற்பண்பில் பயிற்றுவிக்கத் தமது நேரத்தைச் செலவிடுவர். குழந்தைகளை அவர்கள் வழியில் விட்டுவிடாமல் இருப்பதுதான் குழந்தையை வளர்க்கும் சிறந்த முறை. ஒவ்வொரு பையனும் இயற்கையாகவே வீர வணக்கம் செய்யும் இயல்பினன். தன் பெற்றோரால் செய்ய இயலாத செயல் ஒன்றுமே உலகில் இல்லை என்பது அவன் எண்ணம்.

தந்தையே, உமது மகன் இவ்விதமாகவே உம்மை வீரர் என்று

எண்ணுவதற்குரிய வாய்ப்பை அவனுக்கு அளியும். உம்மைப் பற்றி அவன் கொண்டுள்ள இந்த உயர்ந்த எண்ணம் உமக்கு நன்மை பயக்கும். நீர் அவன் வாழ்விலே முக்கியத்துவம் பெற்றவர். நீர் உண்மையிலே அவனை நேசிக்கிறீர். அவனோடு நீர் என்றும் இருக்க வேண்டும் என்று அவன் விரும்புகிறான். அவனுக்காக நீர் ஒரு சில மணித் துளிகளை ஒதுக்குக; அவனோடு விளையாடுக. அவனுக்குச் சில எளிய உண்மைகளை உணர்த்துக. உமது வாழ்வில் அவனுக்கும் ஒரு பங்கு உண்டு என்பதை அவன் உணர்ந்து கொள்ளுமாறு நடந்துகொள்க; அவனை ஒதுக்கி விடாதீர். விலை மதிக்கவொண்ணாத இந்த நாட்கள் விரைவில் சென்றுவிடும்; மீண்டும் திரும்பி வரா. இன்று நீர் அவனுக்குச் செய்வது அவன் பிற்கால வாழ்வை வகுத்துக் கொள்ளப் பெரிதும் துணை புரியும்.

இல்லத்தில் தந்தை வகிக்கும் இடம் குடும்பத்தினரின் தேவைகளை அறிந்துகொள்வதற்கு அதிகமாக உதவும். இல்லத்திலேயே கற்றுக்கொள்ளும் இந்த அடிப்படைக் கல்விதான் சிறுவர்களை எதிர்காலத்தில் நல்ல குடிமக்களாகச் செய்யும். அவர்கள் வளர்ந்த பின் அவர்கள் அதிகாரத்தை வகிக்கும் ஆற்றல் பெறுகிறார்கள். பள்ளியிலும் இந்த அடிப்படைக் கல்விதான் தரப்படுகிறது. தெருக்களிலே அதிகாரத்தை வகிப்பவர்கள் போலீசார். வேலை செய்யும் இடங்களில் இந்த அதிகாரத்தையுடையவர்கள் இருக்கிறார்கள். வாழ்க்கை முழுவதற்கும் பார்த்தால், இந்த அதிகாரத்தை அமுல் நடத்துகிறவர்கள் அரசியலார். பெரியவர்களாக வளர்ந்த பின், அவர்கள் எங்கு வாழ்ந்தாலும் பதவியை அவர்கள் தைரியத்தோடு ஏற்றுக்கொள்கிறார்கள். அவர்களுக்கு ஒரு நல்ல தந்தை இருந்து அவரை நேசிக்கவும், அவரை நம்பவும் அவர்கள் கற்றுக்கொண்டால், எதிர்காலத்தின் எல்லாப் பிரச்சினைகளுக்கும் தீர்வு கண்டுகொள்வர்.

ஆனால் அவர்கள் தம் இளம் வயதில் அநீதியாக நடத்தப்பட்டாலோ, அல்லது அலட்சியப்படுத்தப்பட்டாலோ அவர்கள் ஏற்கும் பதவிகளில் கோபம் மிகுந்தவர்களாகவே இறுதி வரையில் இருப்பார்கள். இப்படிப்பட்டவர் எல்லாம் பரிதாபத்துக்கு உரியவர். பொதுவாக அவர்கள் எல்லாம் சபல சித்தமுள்ளவர்களாகவும், இருக்கும் வேலையை விட்டுவிட்டு வேறு வேலைக்குப் போகும் தன்மையுடையவர்களாகவும், உண்மையை உணர்ந்து கொள்ள முடியாதவர்களாகவும் இருப்பார்கள். அவர்கள் முன் கோபமே அவர்களைக் கெடுத்துவிடும். பலர் மது அருந்துபவர்களாகவும், சிலர் வேறு குற்றங்கள் இழைக்கக் கூடியவராகவும், மாறிவிடுகிறார்கள்.

சில பெற்றோர் சரியான ஆசிரியர்களாக இருப்பது இல்லை. காரணம் அவர்களே இந்த அடிப்படைத் தத்துவத்தைக் கற்றுக் கொள்ளவில்லை. ஒருவேளை அவர்கள் கொடிய பெற்றோரிடம் வளர்ந்தவர்களாக இருக்கலாம். பெற்றோர் அதிகக் கண்டிப்பு மிகுந்தவர்களாக இருந்தால், அவர்களது பிள்ளைகள் விதிகளையும் நிபந்தனைகளையும் வெறுப்பர். கண்டிப்பே இல்லாத பெற்றோரிடம் வளரும் பிள்ளை ஒழுங்கற்றதாக இருக்கும். இந்த இரண்டு வித வளர்ப்பும் சரியல்ல. இந்த உலகம் அவர்களுக்கு ஒரு வேலை தேடித் தர வேண்டுமென்று கூட நினைக்கத் துவங்குவர்.

நல்வாழ்க்கையின் அடிப்படைத் தத்துவத்தை நமது வீட்டிலேயே நமது பிள்ளைகளுக்குக் கற்றுத் தந்துவிட வேண்டும். இந்த மாதிரி அடிப்படைக் கல்வி வீட்டிலேயே பெறாத ஒரு குழந்தை வாழ்விலே நல்ல விதமாக இருக்கலாம். காரணம் அவனை அறியாமலே அவன் இவ்வித நல்ல பயிற்சி கொடுப்பவர்களைப் பின்பற்றி இருக்கலாம். நல்ல பயிற்சி பெறாத இளைஞர்கள் கொடிய குற்றவாளிகளாக இருக்கிறார்கள் என்பதைத் தற்கால நீதிமன்றங்கள் நிரூபித்து வருகின்றன. முன்பு எப்பொழுதுமே இல்லாத குற்றங்கள் பல இப்பொழுது நிகழ்கின்றன. இவ்விதக் குற்றவாளிகளில் பல இளைஞர் நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவர். தற்காலம் வீட்டில் நல்ல பழக்கம் பயிற்றுவிக்கப்படவில்லை என்பதற்கு இது ஒரு சான்று. சமூகத்தின் நல்வாழ்விற்கு வீட்டிலேயே நல்ல பயிற்சி தேவைப்படுகிறது.

இந்தக் குறைபாடுகளுக்கு எல்லாம் தந்தை ஒரு விதத்தில் காரணமாகிறார். அவர் வேறு பல காரியங்களில் கவனத்தைச் செலுத்துகிறார். தம் குடும்பத்தைக் கவனிக்க அவருக்கு நேரம் இல்லை. தந்தையின் பொறுப்பை அம்மாள் எடுத்துக்கொள்கிறாள். இது குழந்தைக்கு நல்லதே அல்ல. நல்ல தந்தை தமது நேரத்தைத் தமது பிள்ளைகளுக்காகச் செலவிடுவார். தந்தை உடல் உறுதி மிக்குடையவராகவும், அறிவு நிறைந்தவராகவும் இருந்தால், அவர் நிறையச் சம்பாதிக்காவிட்டாலும் பிள்ளைகள் அவரை நேசிப்பார்கள். வாழ்க்கையில் சில காரியங்கள் பணத்தை விட முக்கியத்துவம் பெறுகின்றன. விடுமுறை நாட்களை வீட்டிலேயே குடும்பத்திலுள்ளவர்களிடம் செலவிடாது, வெளியில் நண்பர்களோடு செலவிடும் தந்தையைப் பிள்ளைகள் அலட்சியப்படுத்துவர்.

இளங் குழந்தைகளை நல்ல விதமாக வளர்ப்பதற்கு உறுதியான உடலும், சக்தி மிகுந்த குரலும் இன்றியமையாதவை. உணர்ச்சி வசப்படாத, நம்பத் தகுந்த தந்தை அவர்களுக்குத் தேவைப்படுகிறது. அதிகக்

கோபப்பட்டுக் கத்திக்கொண்டிருக்கும் தந்தையைப் பிள்ளைகள் விரும்பவே மாட்டார்கள். தந்தைக்கு இது ஒரு விதப் பலவீனம் என்றுதான் சொல்ல வேண்டும். அன்பு மிகுந்தவரின் அதிகாரத்திற்குத்தான் குழந்தைகள் மதிப்புத் தருவர். இந்த மாதிரி குணமுள்ள தந்தையால் தான் அம்மாவும் மகிழ்ச்சி பெறுவாள். அவளும் அவரையே சேர்ந்து வாழவேண்டியவள். அவளது பொறுப்பின் பெரும் பகுதியைக் கணவரே எடுத்துக் கொள்வதால், அவளது வாழ்வும் சுலபமாக இருக்கிறது.

குழந்தைகள் விளையாட்டை விரும்புவர். ஒரு சார்பாகச் சார்ந்துகொள்ளும் தன்மையை வெறுப்பர். ஒரு தந்தை, தம் ஒவ்வொரு குழந்தையிடமும் அன்பைப் பகிர்ந்து கொடுப்பதில் கண்ணும் கருத்துமாய் இருக்க வேண்டும். தந்தையே,. உமது மகன் வாழ்வில் வளம் பெறவேண்டுமானால், நீர் அவனுக்கு ஒரு தோழனாய் இரும். அவன் உம்மோடு வேலை செய்யட்டும்; உம்மோடு உரையாடட்டும்; நீர் அவனுக்கு உண்மையான தோழன் என்பதை அவன் உணரட்டும். அவனை விட்டுப் பிரிந்து விடாதீர். உண்மையையும், தன்னலமின்மையையும் அவனுக்குக் கற்றுத் தாரும். அவன் பிறருக்கு முன்மாதிரியாக விளங்குமாறு செய்யும். அவன் நல்ல குடிமகனாக விளங்க அவனுக்கு உதவி புரியும். அவன் வளர்ந்தவுடன் இந்த மனிதத் தன்மையைப் பெற்றுவிட்டதற்காகப் பெருமைப்படுவான்.

உயர்ந்த குணம் ஒரே நாளில் வந்துவிடாது. அநேக ஆண்டுகட்குப் பிறகுதான் உருவாகும். ஆதலால்தான் நல்ல தந்தை ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையாதவராக இருக்கிறார். வாழ்க்கைப் போராட்டத்தில் நாம் எப்படி உண்மை மனிதனைப் போராட வேண்டும் என்பதைக் கற்றுத் தரத் தந்தை மிகத் தேவைப்படுகிறார். பிள்ளைகளை அளவிற்கதிகமாகக் கவனித்தால், அவர்களாகவே நற்குணங்களை வளர்த்துக் கொள்ளத் தக்க வாய்ப்பை இழந்துவிடுவர். அவர்கள் பள்ளத்தாக்கில் வளர்ந்த மரங்களைப் போன்றவர். அவை பார்வைக்கு நன்றாக இருக்கலாம். ஆனால் புயல் வந்தால், அவை வீழ்ந்து விடும்—வலிமை மிகுந்த வேர்கள் இல்லாததால்.

ஆனால் மலை உச்சி மீது வளர்ந்துள்ள மரங்கள் உறுதியானவை. அவை இளமரமாயிருந்தபோது, பயங்கரக் காற்றைக் கண்டவை. அவற்றின் வேர்கள் ஆழமாகப் பதிந்துள்ளன. அவை நிலத்தின் ஆழத்தில் சென்று தண்ணீரையும் உணவையும் நிறையப் பெற்றுக் கொண்டுள்ளன. இந்த மாதிரி மரங்கள் பயங்கரக் காற்றுக்குமுன் வளைந்து கொடுக்கும். ஏன் தெரியுமா? அவை சிறு மரமாக இருக்கும் போதே, புயலில் அடிபட்டுப் பலப்பட்டு விட்டன!

இது மனிதருக்கும் பொருந்தும். மிகுதியான பாதுகாப்பு உள்ளவர்கள எளிதில் தோற்கடிக்கப் பெறுவர். தற்கால வாழ்விலே போராடப் பக்குவமற்றவராகிவிடுகின்றனர். வாழ்க்கையில் போராடுவதை இள வயதிலேயே தம் பெற்றோரிடமிருந்து கற்றுக்கொண்ட பிள்ளைகள் எதைக்கண்டும் பயப்படுவது இல்லை. அவர்கள் வாழ்வில் ஏற்படும் புயலைக் கண்டு அஞ்சுவதில்லை — சிறு வயதிலேயே கீழ்ப்படிதலையும் தன்னடக்கத்தையும் கற்றுக்கொண்ட காரணத்தால். இவ்விதக் குணங்களைச் சிறு வயதிலேயே பிள்ளைகளுக்குக் கற்றுத் தரவேண்டிய பொறுப்பு தந்தையினுடையது. இது இலகுவான பணியல்ல. எவ்வளவு விரைவில் இந்த அடிப்படைத் தத்துவத்தை அவர்கள் கற்றுக்கொள்கிறார்களோ, அவ்வளவுக்கு அவர்கள் மகிழ்வாக இருப்பார்கள்.

இல்லத்தில் தந்தையின் இடம் மிக மிகத் தேவையான ஒன்று. தம்மைச் சார்ந்துள்ளவர்களுக்காகச் சம்பாதிப்பது அவரது முதற் கடமை. ஆனால் இது மாத்திரமே அவரது கடமையாகிவிடாது. உண்மை அன்பை அவர் தமது பிள்ளைகளிடமிருந்து விலை கொடுத்து வாங்க முடியாது. சரிவிகிதமாகத் தம் அன்பை இல்லத்திலுள்ள பிள்ளைகளுக்குப் பகிர்ந்து கொடுப்பதன் வாயிலாகத்தான் அவர் இதை அடையலாம். அவரிடமிருந்து தான் குழந்தை வாழ்வின் அடிப்படைக் கல்வியைக் கற்றுக்கொள்ள முடியும்.

இவ்விதத் தந்தை தான் தமது பிள்ளைகளிடமிருந்து மரியாதையையும், நம்பிக்கையையும் பெற முடியும். பிள்ளைகள் வருங்காலத்தில் தமது தந்தையிடமிருந்து பெற்ற உதவிகளுக்கும், நல் வழிகாட்டியாக அவர் இருந்ததற்கும் என்றும் அவருக்கு நன்றியுள்ளவர்களாக இருப்பார்கள்.

— நல்வழி

---

(45-ம் பக்கத் தொடர்ச்சி)

ஜாகை வசதி கண்டிரோல், பிச்சைக்காரர்கள் சட்டம், சினிமா சட்டம்.

திரு. என். எஸ். எஸ். மன்றாடியார் (உணவிலாகா மந்திரி) உணவு, கூட்டுறவு, கோர்ட்டுகள், காடுகள்.

திரு. ஜி. பூவராகன் — செய்தி இலாகா மந்திரி.

திரு. எஸ். எம். ஏ. மஜீத்—ஸ்தல ஸ்தாபனங்கள் இலாகா மந்திரி, சமுதாய அபிவிருத்தி, பஞ்சாயத்துக்கள்.

திரு. ஆர். வெங்கட்ராமன் ஐ. நா. விலிருந்து திரும்பி வந்து பதவி ஏற்றுக்கொள்ளும் வரையில் அவருடைய இலாக்காக்களை திரு. பக்தவத்சலம், திரு. ராமய்யா, திரு. மன்றாடியார் ஆகிய மூவரும் பகிர்ந்து கொள்ளுவார்கள்.

# அதிசயம் ஆனால் உண்மை!

## ரூ. 6 லட்சம் மதிப்பு வைரம் இருந்தும் கடனாளி!

### இளைஞரின் விசித்திர அனுபவம்

போபால், ஆக. 31—

உலகத்திலேயே விலை உயர்ந்த வைரத்தைப் புதையலாகக் கண்டெடுத்த ஒரு இளைஞர் இப்போது கடன்களை அடைக்க வழியில்லாமல் திண்டாடுகிறார். ரூ. 6 லட்சத்திற்கு மேல் பெறுமானமுள்ள அந்தவைரம் கையிலிருந்தும்கவலை தீரவில்லை. இதற்குக் காரணம் அந்த விலை கொடுத்து வைரத்தைக் வாங்க இன்னும் யாரும் முன்வரவில்லை.

ரசூல் முகம்மது என்ற தொழிலாளி 1961 அக்டோபர் 19-ம் தேதி விஜய் என்ற அந்த 44·55 காரட் வைரத்தைக் கண்டெடுத்தார். உடனே கடன் கொடுப்பவர்கள் அவரை மொய்த்தனர். இப்போது அவர்கள் கொடுத்த கடன்தொகையான ரூ.5000-ஐத் திருப்பிக் கேட்கிறார்கள் என்று அவர் கூறினார்.

அவர் கல்லுடைக்கும் வேலை பார்த்து வந்தார். அதையும் விட்டுவிட்டார்.

மீதியுள்ள வாழ்நாட்களை நல்ல முறையில் கழிக்க இந்த வைரக்கல் போதுமான விலை தேடித்தரும் என்று எண்ணினார். ஆனால் வாங்குவாரைக் காணோம்.

விளம்பரம் காணாததே இதற்குக் காரணம் என்று அவர் அபிப்பிராயப்படுகிறார்.

மேலும் புதையல் தேடி வருகிறார். விலை மதிப்புள்ள கற்கள் இருக்கும் இடம் எனக் கூறப்படும் 25 அடி நிலத்தை அவர் வாங்கி யிருக்கிறார்.

செப்டம்பர் 25-ம் தேதி கல் ஏலம் விடப்படும்.

புதையலைத் தேடித்திரியும் மக்களுக்கு அவர் சொல்லும் நல்லுரை: வைரத்தைத் தேடி அலையும் வேலையை முழுநேர வேலையாக ஆக்கிக் கொள்ளாதீர்கள் என்பதாகும்

## திருமணமாகி 40 ஆண்டுகளுக்குப் பின் கணவனைக் கண்டாள்!

லண்டன், செப். 9—

திருமணமாகி 39 ஆண்டுகளுக்குப் பிறகு முதல் முறையாகத் தன் கணவரைப் பார்க்கும் பாக்கியம் இப்போதுதான் டெய்சி பார்ன்ஸ் என்னும் அம்மையாருக்குக் கிடைத்தது.

லண்டனைச் சேர்ந்த அவருக்கு 64 வயதாகிறது. 40 ஆண்டுகளுக்கு முன்னர் ஏற்பட்ட தொழிற்சாலை விபத்து ஒன்றில்

அவர் கண்ணிழந்துவிட்டார். அதன் பிறகு இவருக்குத் திருமணம் நடைபெற்றதால் அவரால் தம் கணவரைப் பார்க்கும் பாக்கியமில்லாமலேயே இருந்து வந்தது.

மூன்று தடவை நடைபெற்ற வெற்றிகரமான ஆப்ரேஷனுக்குப் பிறகு இப்போது அவர் தனது கணவரைக் கண்ணாரக் காண முடிந்தது.

"நான் கற்பனை செய்து பார்த்ததைவிட என் கணவர் அழகாகவே இருக்கிறார்" என்று அவர் கூறுகிறார்.

## முழுதும் ஏர்கண்டிஷன் செய்யப்பட்ட உலகின் முதல் நகரம்!

சிட்னி, ஆக. 8—

ஆஸ்திரேலியாவின் முக்கிய நகரமான சிட்னி முழுவதும் ஏர்கண்டிஷன் செய்யப்பட்ட உலகின் முதல் நகரமாக ஆகக்கூடும்.

44 மாடிகளைக் கொண்ட உருளை வடிவமான ஒரு கட்டடத்திலிருந்து இந்நகருக்குத் தானாகவே ஏர் கண்டிஷன் செய்து கொள்வதற்கான திட்டம் இப்போது நடைபெற்றுக் கொண்டு வருகிறது.

விசித்திரமான வடிவமைப்புக் கொண்ட 515 அடி உயரமுள்ள இக்கட்டடம் இதமான காற்றோட்டத்தை உருவாக்கும். பின்னர் சுற்றி உள்ள கட்டடங்களுக்கும், நகரின் மத்தியில் உள்ள வீதிகளுக்கும் இக்காற்றோட்டத்தை அக் கட்டிடம் அனுப்பி வைக்கும்.

"தரை மட்டத்திற்கு 200 அடிக்கு மேலே இருக்கக் கூடிய காற்றை, மேற்கிலிருந்தோ, வடகிழக்கிலிருந்தோ காற்று வீசும் போது ஒரே சீரான அளவில் செல்லும்படி இக்கோபுரம் தூண்டிவரும்" என்று ஆஸ்திரேலிய சதுக்கத் திட்டத்தின் சீனியர் கட்டுமான வரைவுத் திட்ட எஞ்ஜினியரான ஜே. ஸ்டைடர் கூறினார். மேற்படி உருளைக் கோபுரம் மேற்படி சதுக்கத் திட்டத்தின் ஒரு பகுதியாகவே கட்டப்படுகிறது.

"நகரின் சதுக்கத்தில் உள்ள மார்க்கெட் மட்டத்திற்குமேலே ஒரே சீரான அளவில் காற்று வீசும்போது அது இதமாக ஊசலாடும் பாசிச் சுற்றி தூசு, ஆவி, புகை ஆகியவற்றை மார்க்கெட் பகுதியிலிருந்து வாங்கி காற்று வெளியில் விட்டுவிடும்" என்று ஸ்டைடர் கூறினார்.

## டான்ஸ் ஆடும் புறாக்கள்

சிட்னி, ஜூலை 31—

இசைக்குத் தக்கபடி டான்ஸ் ஆடவும், பிங்பாங் போன்ற விளையாட்டுக்களை ஆடவும், பல புதிர்களை விடுவிக்கவும், 10 புறாக்களை நன்கு பழக்கியுள்ளதாக சிட்னியைச் சேர்ந்த மனோதத்துவ பேராசிரியர் டாக்டர் டி. வி. கோன்னர் தெரிவித்துள்ளார்.

டாக்டர் கோன்னர் நியூசவுத் வேல்ஸ் சர்வகலாசாலையின் கல்வி ஆராய்ச்சிப் பிரிவில் சீனியர் விரிவுரையாளராகப் பணியாற்றுபவர்.

பிராணிகளின் மனோதத்துவம் பற்றி ஆராய்ச்சியை மேற்கொண்ட அவர் புறாக்களுக்கு இசைக்குத் தக்கபடி வளையமாக நின்று 'வால்ட்ஸ்' நடனம் ஆடப் பழக்கினார். அவை வலஞ் சுழியாகவும் நடனம் ஆடக் கற்றுக் கொண்டன. பிங்பாங் பந்தாட்டம் போன்ற விளையாட்டுகளை ஆடவும், சில புதிர்களை விடுவிக்கவும் புறாக்களை அவர் பழக்கினார்.

சர்க்கஸ் விலங்குகளுக்கு ஒரு வித்தையைக் கற்றுக் கொடுக்க திரும்பத் திரும்ப அதையே செய்யச் செய்து பழக்கும் முறையை இவர் புறாக்களிடம் கையாண்டபோது, அவ்வளவாக அவருக்கு வெற்றி கிடைக்கவில்லை. எனவே, அவர் புதிய முறையைக் கையாண்டார். சிறிது சிறிதாகவே பழக்குவதே இவர் கையாண்ட முறையாகும்.

இந்த முறையின் மூலம் புறாக்களிடையே ஒத்துழைப்பையும், கற்பதில் ஒன்றுக்கொன்று போட்டி மனப்பான்மையையும் அவரால் ஏற்படுத்த முடிந்தது.

## ஜெட் விமான அதிர்ச்சியால் பேசும் சக்தி பெற்ற ஊமைக் கிழவி!

ஆட்விக்ஷாபன் (மேற்கு ஜெர்மனி), ஜூலை 31—

ஆஸ்பத்திரிக்கு மேலாக ஒரு ஜெட் போர் விமானம் திடீரென அதிவேகத்தில் பறந்து சென்றதால் ஏற்பட்ட அதிர்ச்சியில் தன்னையும் அறியாமல்வாய்விட்டு அலறி விட்டாள் ஒரு நோயாளிக் கிழவி. ஒரு விபத்தில் சிக்கியதால், பேசும் சக்தியை இழந்துவிட்ட அக்கிழவிக்குத் தனக்கு மீண்டும் பேசும் சக்தி வந்துவிட்டதை அறிய சில நிமிடம் நேரம் பிடித்தது.

மேலே குறிப்பிட்ட கிழவி ஒரு ரோடு விபத்தில் சிக்கிய போது, அந்த அதிர்ச்சியில் குரல் நாண்கள் செயலிழந்தன. அதனால் 60 வயதான அக்கிழவி பேசும் சக்தியை இழந்தாள். பின்னர் அவள் ஆட்விக்ஷாபன் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்தாள்.

"சூபர்சானிக் ஜெட்விமானம் பறந்த போது ஏற்பட்ட பயங்கர சத்தத்தில் என்னையும் அறியாமல் அலறி விட்டேன்" என்று அவள் பின்னர் கூறினாள்.

ஊமையாக இருந்த கிழவியைப் பேச வைக்க "அதிர்ச்சி வைத்தியம்" அளித்ததற்குப் பாராட்டு தெரிவித்து அந்த ஆஸ்பத்திரியின் தலைமை சர்ஜன் பிரிட்டிஷ் ஷாபன் விமான தளகமாண்டருக்கு ஒரு பாராட்டுக் கடிதம் எழுதியுள்ளார்.

ஆனாலும், ஒலியை மிஞ்சும் வேகத்தில் விமானங்கள் ஆஸ்பத்திரிகளின் மீதாகப் பறப்பது நோயாளிகளுக்கு ஊறு ஏற்படுத்திவிடும் என்று அவர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

# சென்னை புதிய மந்திரி சபை

சென்னை, அக். 2—சென்னை ராஜ்யத்தின் புதிய மந்திரி சபை இன்று பிற்பகல் விசுவாசப் பிரமாணம் எடுத்துக்கொண்டது. செக்ரிடேரியட்டிலுள்ள விசேஷ அறையில் புதிய மந்திரிகளுக்குக் கவர்னர் பிரமாணம் செய்து வைத்தார்.

முதன் மந்திரி திரு எம். பக்தவச்சலம் முதலில் பிரமாணம் எடுத்துக்கொண்டார். அவரைத் தொடர்ந்து மற்ற ஆறு மந்திரிகள் பிரமாணம் ஏற்றனர். மற்றொரு மந்திரியான திரு ஆர். வெங்கட்ராமன் ஐ.நா. சென்றிருக்கிறார். அவர் திரும்பி வந்த பிறகு பிரமாணம் எடுத்துக் கொண்டு பதவி ஏற்பார்.

முதலில் திரு. பக்தவச்சலம் தனது சகபாடிகளைக் கவர்னருக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

பிரமாணம் எடுத்துக்கொள்ளும்போது திரு. பக்தவத்சலமும், திருமதி. ஜோதி வெங்கடாசலமும் "உறுதியாகக் கூறுகிறோம்" என்று பிரமாணம் செய்தனர். மற்ற மந்திரிகள் "கடவுள் சாட்சியாகச் சொல்லுகிறோம்" என்று பிரமாணம் செய்தனர்.

## இலாகா விவரங்கள்

புதிய மந்திரிகளின் இலாகா விவரங்கள் பின்வருமாறு: திரு. எம். பக்தவத்சலம் (முதல் மந்திரி) பொது நிர்வாகம், (ரெவின்யூ போர்டு, ஜில்லா ரெவின்யூ ஸ்தாபனங்கள் உள்பட), திட்டம், நிதி, கல்வி, தொழிலாளர் நலன், சட்டசபைகள், தேர்தல்கள், அறநிலையங்கள், ஆட்சி மொழி.

திரு. ஆர். வெங்கட்ராமன்—(கைத்தொழில் இலாகா மந்திரி) கைத்தொழில்கள், விற்பனை வரி, சர்க்கார் பஸ் சர்விஸ், நுட்பக் கல்வி, மின்சாரம், ஜாகை வசதி, கைத்தறிகள், நூல், ஜவுளி, சுரங்கங்கள், இரும்பு உருக்கு கண்ட்ரோல், விலைவாசிகள், கம்பெனிகள், பத்திரிகைக் காகிதம், மாஜி ராணுவத்தினர் நலன், சீட்டுகள் பற்றிய சட்டம், போக்குவரத்து, சட்டம்.

திரு. பி. கக்கன் (போலீஸ் இலாகா மந்திரி) போலீஸ், விவசாயம், சிறிய நீர்ப்பாசனம், கால்நடைப் பராமரிப்பு, ஹரிஜன நலன்கள், மதுவிலக்கு, பூதானம், கிராமதானம்.

திரு. வி. இராமையா (மராமத்து இலாகா மந்திரி) மராமத்து இலாகா ரெவின்யூ, லேவாதேவி, கிராமக் கடன், அளவை, நிறுவை சட்டங்கள், கடல் கடந்த இந்தியர் அகதிகள், பாஸ்போர்ட், துறைமுகங்கள்.

திருமதி. ஜோதி வெங்கடாசலம் (சுகாதார இலாகா மந்திரி)—சுகாதாரம். மாதர், குழந்தைகள் நலன்கள், அனாதை விடுதிகள்,

(41-ம் பக்கம் பார்க்க)

# சோழர் காலத் துறைமுகம் கண்டுபிடிக்கப்பட்டது

---

## காவிரிப்பூம்பட்டினத்தில் பூர்வாங்க சோதனை வெற்றி

---

புதுடில்லி, செப். 12–இந்திய தொல்பொருள் தென் மண்டல ஆராய்ச்சியாளர், தஞ்சாவூர் ஜில்லா, காவேரிப்பட்டினத்தில் பூமியை வெட்டி சோதனைகள் செய்ததில் பழந்தமிழ் நூல்கள் கூறுவது ஊர்ஜிதமாகிறது. தவிர ஆதி சோழர் காலத்தில் கப்பல் துறை கட்டப்பட்ட விதம் பற்றிய புதிய தகவல் இப்பொழுது கிடைத்திருக்கிறது.

இங்கு சென்ற ஆண்டு நடத்திய பூர்வாங்க சோதனைகளைத் தொடர்ந்து பரீட்சார்த்தமாக இந்த வருஷம் பழைய காவேரிப் பட்டினம் துறைமுகத்திலும், முகத்துவாரத்திலிருந்த காவேரிப்பட்டினத்திலும், மற்றொரு இடத்திலும் வெட்டும் வேலைகள் மேற்கொள்ளப்பட்டன.

### கடல்மேடை

கீழையூரில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் கடல்மேடை முற்காலத்தில் படகுகளிலிருந்து சாமான்களை இறக்கவும் ஏற்றவும் பயன்படுத்தப் பட்டிருக்க வேண்டும் என்று ஊகிக்க இடமிருக்கிறது. இந்தக் கடல் மேடை முதலாவது நூற்றாண்டு காலத்தைச் சேர்ந்ததாக இருக்கலாம் என்று நிபுணர்கள் இங்குக் கருதுகிறார்கள்.

### பட்டினப்பாலைக்குச் சான்று

சங்க காலத்தைச் சேர்ந்த பட்டினப்பாலை என்னும் பழந்தமிழ் நூலில் வெள்ளை உப்புக்குப் பரிவர்த்தனையாகத் தானியங்களை ஏற்றி வரும் படகுகள் கடல்கரை ஓரங்களில் பெரிய முளைகளில் பிணைக்கப்பட்டதாகக் காணப் படுகிறது.

இப்பொழுது கண்டுபிடிக்கப் பட்டிருக்கும் மேடையும் அங்கிருக்கும் மரங்களும் அந்த இலக்கியக் காட்சியை ஊர்ஜிதம் செய்கின்றன.

### வாணகிரி

காவேரிப்பட்டினத்திற்கு அருகிலிருக்கும் வாணகிரியில் வெட்டு வேலைகள் நடந்த இடத்தில் கண்டு பிடிக்கப்பட்டவைகளில் சில :–

சில நாணயங்கள், சதுர செப்பு நாணயங்கள் (ஒரு புறத்தில் நிமிர்ந்து நிற்கும் புலியும் மறுபுறத்தில் யானையும் உள்ளவை). சதுர நாணயங்கள் சோழ மன்னர்களுடையதாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. சோழர்களுக்குத்தான் புலிச் சின்னம் உண்டு.

(47–ம் பக்கம் பார்க்க)

# இயேசுவின் மறுபிறப்பே காந்தி

(ஆர். சீனிவாசமூர்த்தி)

1937-ம் வருஷத்தில் மாகாண சுயாட்சி திட்டத்தின் கீழ் இந்தியாவில் ஏழு மாகாணங்களில் காங்கிரஸ் மந்திரி சபைகள் ஏற்பட்டன. முதல் முதலில் அப்போது தான் காங்கிரஸ் பதவி ஏற்றது. நாட்டின் முதல் தரமான தலைவர்கள் நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார்கள். 1937-ல் கிடைத்தது சுதந்திரமல்ல. சுதந்திரப் பாதையில் ஒரு தங்குமிடம் தான். தவறான பாதை ஒழுங்கீனம் முதலியவைகளெல்லாம் அப்போது காங்கிரஸ்காரர்களின் கனவில் கூடத் தோன்றியிருக்க முடியாது. ஆயினும் எவ்வளவு சிறந்த மனிதர்களையும் அதிகாரம் பாழ்படுத்தி விடும் என்பதைத் தீர்க்க தரிசனத்துடன் அன்றே காந்திஜி எச்சரித்திருக்கிறார்.

1938-ல் மகாத்மா காந்தி "யங் இந்தியா" பத்திரிகையில் ஒரு கட்டுரை எழுதியிருந்தார். இன்று நாட்டில் நாம் காணும் நிலைமையை காந்திஜி அன்றே எதிர்பார்த்திருக்கிறார் என்பதை அதிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

"ஏழு மாகாணங்களில் காங்கிரஸ் அதிகாரத்தை ஏற்றுக் கொண்டு விட்டது. ஆதிக்கத்துக்கு வருவது பெரும் புகழைக் கொடுக்கலாம் அல்லது சர்வநாசத்திற்கும் காரணமாக இருக்கலாம். முழுதும் கெட்டொழியாதிருக்க வேண்டுமாதலால், மந்திரிகளும், சட்ட சபை அங்கத்தினர்களும் தம் அந்தரங்க வாழ்க்கையிலும், பொது வாழ்க்கையிலும் கவனமாக இருக்க வேண்டும். ரோமாபுரி அரசன் ஸீஸரின் மனைவியைப் போல் இவர்கள் எதிலும் சந்தேகத்திற்கு இடமின்றி வாழவேண்டும்.

---

46-ம் பக்கத் தொடர்ச்சி

## ரோமாபுரியுடன் வர்த்தகம்

இங்கு அகப்பட்டிருக்கும் மண் பாண்டங்கள் ரோமாபுரியுடன் தொடர்பு இருந்திருக்கவேண்டுமென்பதைக் காட்டுகின்றன. நவரத்னகல் வகைகள் இங்கு கிடைப்பதைக்கொண்டு இந்தியாவின் ஏற்றுமதி வர்த்தகம் பற்றிக் கிரேக்க ஆசிரியர்கள் கூறியிருப்பது ஊர்ஜிதமாகிறது.

## ராஜராஜ சோழர் நாணயம்

மேலையூரில் நடைபெற்ற வெட்டு வேலைகள் சில இடைக்காலக் கட்டிடங்களை வெளிப்படுத்தி உள்ளன.

ராஜராஜ சோழர் காலத்திய செப்பு நாணயங்களும், சில மண் பொம்மைகளும் மணிகளும் கூட இங்கு அகப்பட்டிருக்கின்றன.

தமக்கோ, தம் உற்றார் உறவினருக்கோ தனி நன்மைகள் தேடிக் கொள்ளக் கூடாது. தகுதியானவர்கள் சிறந்தவர்கள் என்பதற்காகவே பதவிகள் கிடைக்க வேண்டும். அதிலும் அரசாங்கத்தில் கிடைப்பதை விட அவர்களின் வெளி மதிப்பு அதிகமாக இருக்கவேண்டும்.''

பாகிஸ்தானும், இந்தியாவும் ஜன்மவிரோதிகள் என்ற ரீதியில் இன்று பிரசாரங்கள் செய்யப்படுகின்றன. ஆனால் தேசப்பிதாவான மகாத்மா காந்தி இந்திய முஸ்லிம்களை அந்நியர்களாக நினைக்கவில்லை. ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள் என்றே நினைத்தார்.

மகாத்மா காந்தி வெளியிட்ட ஒரு பிரசுரம் 1919-ம் வருஷத்தில் அவருடைய ''யங் இந்தியா'' பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருந்தது. அதிலுள்ள கடைசிப் பகுதியை வாசிக்கும் போது ஹிந்துக்களாயிருந்தாலும், முஸ்லிம்களாயிருந்தாலும், மயிர்க் கூச்செறிவர். அந்த வாசகம் பின் வருமாறு :

''ஹிந்துக்களும், முஸ்லிம்களுமாகிய நாங்கள் கடவுளை சாட்சியாகக் கொண்டு பின் வருமாறு பிரதிக்ஞை எடுத்துக் கொள்கிறோம்; நாங்கள் ஒரே பெற்றோரின் குழந்தைகளைப் போன்று, ஒருவர் மற்றொருவரிடம் நடந்துகொள்வோம். நாங்கள் வேற்றுமை இன்றி, ஒருவர் துயரை மற்றவரின் துயராக எண்ணி அவற்றைப் போக்க ஒருவருக்கொருவர் உதவி செய்வோம். ஒருவர் மற்றொருவரின் மதத்தையும் மத உணர்ச்சியையும், மதித்து நடந்து கொள்வதோடு அவரவர் பழக்க வழக்கங்களுக்குக் குறுக்கே நிற்க மாட்டோம். மதத்தின் பெயரால் ஒருவர் மற்றொருவர் மீது பலாத்காரத்தை உபயோகிக்காமலும் இருந்து வருவோம்.''

முதலாவது உலக யுத்தம் முடிந்த காலம் அது. யுத்தத்தில் தோல்வியுற்ற கட்சியில் சேர்ந்திருந்த துருக்கி கலிபா விஷயத்தில் பிரிட்டன் நடந்து கொண்ட விதம் பற்றி முஸ்லிம் உலகமே ஆத்திரமடைந்திருந்தது. கீதையை வேதமாகமதித்தவரும், தான் ஒரு சனாதன ஹிந்து என்று பெருமைப்பட்டுக்கொண்டிருந்தவருமான மகாத்மா காந்தி இது முஸ்லிம்களின் பிரச்னை தானே என்று ஒதுங்கி நிற்கவில்லை. எல்லா மதங்களும் ஆண்டவனை அடையும் வழியைத் தான் காட்டுகின்றன. ஆகையால் எல்லா மதங்களிலுமே சிறந்த அம்சங்கள் இருந்து தானாக வேண்டுமென்று காந்திஜி நம்பினார்.

''ஏசுநாதரின் மறு பிறவிதான் மகாத்மா காந்தி. காந்தியடிகளின் முடிவும் கூட, ஏசுகிறிஸ்துவின் முடிவைப்போலவே இருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை'' என்று ஒரு அமெரிக்கப் பாதிரி சுமார் 42 ஆண்டுகளுக்கு முன் கூறினார்.

அவர் தாம் முதன் முதல் காந்திஜியைப்பற்றி அமெரிக்க மக்களுக்கு அறிமுகப்படுத்திய வர். அவரே காந்திஜியின் முதல் அமெரிக்க சீடர்.

## மகாத்மாவின் முதல் அமெரிக்க சீடர்!

"காந்தியடிகளைப்பற்றி நினைக்கும்போதெல்லாம் எனக்கு ஏசு கிறிஸ்துவின் நினைவே வருகிறது. மகாத்மா வாழும் வாழ்வு, ஏசுவின் வாழ்வைப் போன்றது. மகாத்மாவின் மணிமொழிகள் எனக்கு ஏசுவின் வாசகங்களையே நினைவுறுத்துகின்றன. காந்திஜியும் ஏசுவைப்போலவே உழைக்கிறார். ஏசுநாதர் இவ்வுலகில் கடவுளின் சாம்ராஜ்யத்தை நிறுவும் பணியில் தம் நல்லுயிரீந்தார். என்றேனும் ஒருநாள் காந்திஜியும் ஏசுவைப்போலவே அதைப்போன்ற பாணியில் உயிர் நீப்பார்..."

இவ்வாசகம் இன்றைக்கு சுமார் 42 ஆண்டுகளுக்கு முன், மகாத்மாவைக் கண்ணாலும் கண்டிராத ஒரு அமெரிக்கப் பாதிரியார் கூறியது என்றால் அது ஆச்சரியமாக இல்லையா?

ஆமாம்! அமெரிக்க மக்களுக்கு காந்தியடிகளைப் பற்றி முதன் முதல் அறிவித்த பெருமை பூஜ்யர் ஜான் ஹேன்ஸ்ஹோம்ஸ் என்பவருக்கே உரியதாகும்.

மகாத்மா காந்தி தென்னாப்பிரிக்காவிலிருந்து இந்தியா வந்து சேர்ந்த பிறகுதான் ஹோம்ஸ், காந்தியடிகளைப்பற்றித் தெரிந்து கொண்டார். தென்னாப்பிரிக்காவில் காந்திஜி நடத்திய அறப்போர் பற்றிய கட்டுரை ஒன்றை இங்கிலாந்து பத்திரிகை ஒன்றில் ஹோம்ஸ் படித்தார்.

காந்திஜியின் போராட்ட முறைகளும், அவருடைய பேச்சில் கண்ட அஹிம்சை - ஒத்துழையாமை போன்ற கருத்துக்களும் ஹோம்ஸின் உள்ளத்தைப் பெரிதும் தொட்டன.

"இரண்டாவது பிறவி அல்லது புனர்ஜன்மம் என்பதில் நம்பிக்கை இருப்பவர்களுக்குச் சொல்வேன். அன்று சிலுவை ஏந்தி மரித்த ஏசுநாதரே தான் இன்று மகாத்மா காந்தியாக உருவாகியிருக்கிறார். காந்தியிடம் இல்லாமல் ஏசுவிடம் இருந்தது சிலுவை. ஒருவேளை முடிவில் காந்திஜியும் ஏசுவைப் போலவே மரணமடையமாட்டார் என்று எப்படிச் சொல்லமுடியும்?" என்று கூறினார் ஹோம்ஸ் (இது 1921ல்).

நியூயார்க் நகர கம்யூனிடி சர்ச் என்ற கிறிஸ்தவ தேவாலயத்தில் 'உலகத்தின் மாபெரும் மனிதர்' என்ற தலைப்பில் 1921ம் ஆண்டு ஏப்ரல் முதல் வாரம், ஹோம்ஸ் பேசினார்.

அமெரிக்க மக்களுக்குக் காந்தியடிகளைப்பற்றிச் சரியான முறையில் தெரிந்துகொள்ளக்கிடைத்த முதல் வாய்ப்பு அதுதான்.

தெ. ஆப்பிரிக்க பிரதமராக இருந்த ஸ்மட்ஸ், பிரான்ஸ்

தேசத்தின் தலைசிறந்த அறிஞரும் காந்திஜியின் தலைசிறந்த நண்பரும் ஆன ரோமைன்ரோலந்து, மற்றும் ரஷிய தலைவர் லெனின் போன்ற அக்காலத்துப் பிரமுகர்கள் அனைவரையும்பற்றி விவாதித்து, பின்னர் காந்திஜியின் வாழ்க்கை, கொள்கை ஆகியவற்றை அவர் விளக்கினார்.

இந்த உரை நிகழ்த்தப்பட்ட ஒரு ஆண்டுக்குள் அதாவது 1922ம் ஆண்டு மார்ச் மாதம், காந்திஜி இந்தியாவில் கைது செய்யப்பட்டார். அவர் கைது ஆன மறுநாள் ஹோம்ஸ் மீண்டும் காந்தியடிகளைப்பற்றிப் பேசினார். பிரார்த்தனைக் கூட்டத்தில் பேசிய அந்தப் பேச்சு காந்தியடிகளைப்பற்றி மேலும் தெரிந்துகொள்ள அமெரிக்கர்களுக்கு உதவியது எனலாம்.

அதற்குப் பிறகுதான் 'சர்வே' 'ரியாலிடி' 'ஃபோரம்' 'அவுட்லுக்' 'அட்லாண்டிக் மந்த்லி' 'க்வேகர்' 'கிரிஸ்டியன் ரிஜிஸ்டர்' 'நியூயார்க் கால்' 'லீடர்' போன்ற பல அமெரிக்க இதழ்கள் காந்திஜியைப் பற்றிய செய்திகளையும், கட்டுரைகளையும் வெளியிட்டன.

'நியூயார்க் ஓர்ல்டு' என்ற பிரபல அமெரிக்க பத்திரிகை முக்கியமான நிருபர் ஒருவரை இந்தியாவுக்கே அனுப்பி காந்திஜியைப் பற்றியும், சுதந்திரப் போராட்டத்தைப் பற்றியும், இந்திய நாட்டைப்பற்றியும் விசேஷக் கட்டுரைகள் வெளியிட்டன.

(மிஸ்) பிளாஞ்சி வாட்சன் என்ற பிரபல அமெரிக்கப் பத்திரிகையாளர் பின்வருமாறு கூறியுள்ளார்:—

“நியூயார்க் நகர மக்களுக்கும் அவர்கள் வாயிலாக அமெரிக்க மக்களுக்கும் காந்தியடிகளை அறிமுகப்படுத்தியது ஹோம்ஸ் அவர்கள்தான். 1921 ஏப்ரல் மாதம் கம்யூனிடி சர்ச்சில் 'உலகத்தின் மாபெரும் மனிதர்' என்ற தலைப்பில் அவர் ஆற்றிய பிரார்த்தனை உரை, காந்தியடிகளை அறிமுகப்படுத்தியது.

அதற்கு முன் காந்தியடிகளைப் பற்றிய செய்திகள் அமெரிக்க இதழ்களில் இடம் பெற்றிருப்பினுங்கூட, அவற்றை யாரும் அவ்வளவாகக் கவனித்ததில்லை.

ஹோம்ஸின் உரைக்குப் பின்னர்தான் காந்திஜியைப் பற்றிய அக்கறை அமெரிக்கருக்கு அதிகமாகியது.

ஹோம்ஸ் பாதிரியாரைப்பற்றி தீனபந்து சி. எப். ஆண்ட்ரூஸ் குறிப்பிட்டுக் கூறுகையில், “காந்திஜியின் பெயர் முதன்முதலாக அமெரிக்காவுக்குத் தெரியவும், அவரிடம் அந்நாடு அன்புகொள்ளவும் பணியாற்றியவர் ஹோம்ஸ். ஐரோப்பாவில் ரோமன் ரோலந்து ஆற்றிய அதே பணியைப் புதிய உலகத்தில் (அமெரிக்காவில்) சாதித்தவர் ஹோம்ஸ்தான்” என்று கூறியிருக்கிறார்.

ரெவரண்ட் ஜான் ஹேன்ஸ் ஹோம்ஸ் 1879ல் நியூ இங்கி

லாந்தில் பிறந்தார். ஹார்வர்ட் பல்கலைக் கழகப் பட்டம்பெற்று, சமயக்கல்வி கற்றுப் பின் மத போதகரானார். நியூயார்க் பகுதியில் எந்தப் பிரிவையும் சாராத ஒரு பொதுத் திருச்சபையை நிறுவினார். அமெரிக்கக் குடி உரிமைச் சங்கத்தையும், வெள்ளையரல்லாத மக்கள் முன்னேற்ற சங்கத்தையும் அமைத்ததில் ஹோம்ஸ் ஆற்றிய பணி மகத்தானது. 'யூனிடி' என்ற இதழின் ஆசிரியர் ஹோம்ஸ். அவ்விதழில்தான் காந்திஜியின் சுயசரிதை முதன் முதல் வெளியாயிற்று. காந்திஜிபற்றி அவர் சேகரித்த நூல்கள் அமெரிக்காவில் உள்ள ஹார்வர்டு பல்கலைக் கழகத்தில் ஒரு தனிப் பிரிவாக வைக்கப்பட்டுள்ளனவாம்.

ஹோம்ஸ் எழுதிய 'என் காந்தி' என்ற நூல் அமெரிக்காவில் மிகவும் பிரசித்தி பெற்றது; காந்திய இலக்கியங்களில் முக்கியமான ஒன்றாகும்.

ஹோம்ஸ் 1931க்குப் பிறகு தான் காந்திஜியைச் சந்தித்தார்.

இன்று அமெரிக்காவில் நீக்ரோ மக்கள் காந்திஜியின் அறவழியைப் பின்பற்றி, உரிமைகள் பெறப் போராடி வருகின்றனர். அவர்களைத் தலைமை தாங்கி நடத்தி வருபவர் நீக்ரோ பாதிரியான மார்ட்டின் லூதர் கிங் என்பவர்தான். காந்திய நெறி அமெரிக்க மண்ணில் வேரூன்றவும் காந்தியக் கருத்துக்கள் அந்நாட்டில் பரவவும், வித்தூன்றிய ஹோம்ஸ் பாதிரியாரை இந்த நேரத்தில் நினைவு கூர்வது பொருத்தம் அல்லவா?

---

(60-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆகியவற்றின் காரணமாக, 'மலாசியா'வின் இரப்பர் தொழிலுக்கு ஆபத்து தோன்றியுள்ள போதிலும், 'மலாசியா' பகுதிகளுக்குத் தற்போது நிதிப் பிரச்னைகள் எதுவுமில்லை. சொல்லப்போனால் 'மலாசியா'ப் பகுதியின் அரசாங்கங்கள், மற்ற தென் கிழக்கு ஆசிய நாடுகளுடன் ஒப்பிடும் போது செல்வக் குவியலின்மீது உட்கார்ந்துகொண்டுள்ளன.

'மலாசியா'வில் இடம்பெறும் 4 பகுதிகளின் மொத்த அந்நியச் செலாவணிக் கையிருப்பு சுமார் ரூ. 590 கோடியாகும்.

ஏற்றுமதி மூலம் கிடைக்கும் வருமானத்தை மட்டும் கணக்கில் கொண்டால் மலாசியாவின் நபர் வாரி ஏற்றுமதி வருமானம் ரூ. 515 ஆக உள்ளது.

ஆனால் இந்தியாவின் நபர் வாரி ஏற்றுமதி வருமானம் ஒன்றரை ரூபாயாகும்; ஆனாலும், இந்த ஒப்பீடு அவ்வளவு சரியானதாகக் கூற முடியாது. ஏனெனில், மலாசியாவின் மொத்த தேசிய உற்பத்தியில் 45 சதவிகிதம் ஏற்றுமதி செய்யப்பட்டுவிடுகிறது.

நபர் வாரி வருமானத்தைக் கணக்கிட்டால் மலாசியப் பகுதிகளின் நபர்வாரி வருமானம் இந்தியாவிலுள்ளதைவிட 4 மடங்கு அதிகமானதாகும்.

# ஆரம்பப்பள்ளி ஆசிரியர்க்கு வீட்டு வசதி

## மாநிலங்களுக்கு ரூ. 10 கோடி கடன் தர மத்திய சர்க்கார் முடிவு

### தேசீயக் கருத்தரங்கில் திருமதி இராமச்சந்திரன் அறிவிப்பு

ஆரம்பப்பள்ளி ஆசிரியர்கள் குடியிருப்புக்கான வீடுகளைக் கட்டித் தருவதற்கு மாநிலங்களுக்கு ரூ 10 கோடி கடன் தருவதென மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

புதுடில்லியில் ஆரம்பப்பள்ளி ஆசிரியர்கள் பயிற்சி பற்றிய இரண்டாவது தேசியக் கருத்தரங்கில் மத்திய கல்வி துணை அமைச்சர் திருமதி சௌந்திரம் இராமச்சந்திரன் கடைசி தினத்தன்று பேசுகையில் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

கிராமப் புறங்களில் ஒவ்வொரு வட்டாரத்துக்கும் அங்குள்ள ஆசிரியர்தான் தலைவர். கிராமவாசிகளை ஆசிரியர்கள் உற்சாகப் படுத்த முடியுமானால் கிராமப் புறமக்களின் நலத்துக்குச் செய்ய முடியாதது ஒன்றும் இல்லை. (நல்ல சுகாதாரத்தைப் பாதுகாப்பது உள்பட) எல்லா விவரங்களிலும் ஆசிரியர் ஒரு நல்ல உதாரணமாகத் திகழ வேண்டும் என்று திருமதி சௌந்திரம் இராமச்சந்திரன் கூறினார்.

கணவன்—மனைவி இருவருமே ஆசிரியர்களாகப் பணி புரிவதை எங்கும் காண முடிகிறது. ஆகவே அந்த ஆசிரியர்களுடைய குடும்ப நலத்தில் அரசாங்க அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும். எங்கோ மூலைக்காடுகளில் ஆசிரியர்களாகப் பணி புரிகிறவர்களுக்கு எல்லா வசதிகளையும் அரசாங்கம் அளிக்க வேண்டும். அப்படிச் செய்தால்தான் அவர்கள் அங்குப் பணி புரிகையில் மகிழ்ச்சியும் பாதுகாப்பு உணர்ச்சியும் அடைவார்கள். வசதிகளைச் செய்து கொடுத்தாலன்றி விருப்பமான கல்வித் திட்டத்தை அந்தப் பகுதிகளில் நிறைவேற்றுவதையும் குறிப்பிட்ட வளர்ச்சியை உருவாக்குவதையும் சாதிக்க முடியாது என்றும் அவர் கூறினார்.

கிராமப் புறங்களில் ஆசிரியர்களாகப் பணியாற்றுவதற்கு அந்தப் பகுதியைச் சேர்ந்த திறமையானவர்களுக்கே வாய்ப்பளிக்குமாறும் தொடர்புள்ள அதிகாரிகளைத் திருமதி இராமச்சந்திரன் கேட்டுக் கொண்டார்.

கேரளத்தைத் தவிர மற்ற எல்லா மாநிலங்களின் கல்வி இயக்குநர்கள், கல்வி உதவி இயக்குநர்கள் உள்பட, திட்டக் கமிஷன் கல்வி ஆராய்ச்சிகளுக்

கான தேசிய கவுன்சில், சமுதாய வளர்ச்சி அமைச்சுத் துறை ஆகியவற்றின் பிரதிநிதிகளும் கருத்தரங்கில் கலந்து கொண்டார்கள்.

குஜராத்தி மாநிலக் கல்வி இயக்குநர் திரு. பி.எல். ஷர்மா கருத்தரங்குக்குத் தலைமை தாங்கினார்.

ஒவ்வொரு மாநிலத்திலும் ஆசிரியர் கல்வி வளர்ச்சிக்கான திட்டங்களைத் தயாரித்துப் பிறகு அவற்றை ஒன்றாக இணைத்து அகில இந்தியத் திட்டம் ஒன்றை உருவாக்குவதென்று கருத்தரங்கில் முடிவு செய்யப்பட்டது.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஆசிரியர்கள் கல்வித் திட்டத்துக்கான பொது வரையறை ஒன்றைத் தயாரிப்பதெனவும் கருத்தரங்கில் முடிவு செய்யப்பட்டது.

## தரத்தை உயர்த்த வேண்டும்

ஒவ்வொரு மாநிலத்திலும் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளின் தரத்தை உயர்த்துவதற்கு நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமெனக் கருத்து தெரிவிக்கப்பட்டது. ஆசிரியர்களுக்கு ஐந்தாண்டுகளுக்கு ஒரு தடவை இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்கு வேலைக் காலப் பயிற்சி அளிக்க வேண்டுமென்றும், இதற்கென ஒவ்வொரு மாநிலத்திலும் தனிப்பள்ளிகளை ஏற்படுத்த வேண்டுமென்றும் கருத்தரங்கில் யோசனை தெரிவிக்கப்பட்டது.

சில வட்டாரங்களில் ஆசிரியைகளுக்குப் பயிற்சி அளிப்பதற்குப் போதுமான பள்ளிகள் இல்லை. ஆகவே ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆசிரியைகளுக்குக் குறைந்தது ஒரு பயிற்சிப் பள்ளியாவது இருக்க வேண்டும் என்று கருத்தரங்கில் முடிவு செய்யப்பட்டது. 6—லிருந்து 11—வரை வயதுள்ள மாணவர்களில் 45 பேருக்கு ஒரு ஆசிரியரும் 11—லிருந்து 14 வரை வயதுள்ள மாணவர்களில் 30 பேருக்கு ஒரு ஆசிரியரும் என்று இப்போதுள்ள மாணவர் ஆசிரியர் விகிதாசாரமே தொடர்ந்து நீடிக்க வேண்டுமென்றும் கருத்தரங்கில் முடிவு செய்யப்பட்டது.

---

(56-ம் பக்கத் தொடர்ச்சி)

நாங்கள் நடந்து வருகிறோம். அது வழியில் நாங்கள் மகிழ்ச்சியுறுகிறோம். இத்துணையளவு சிறப்புற்ற இப் பள்ளி மத வேறுபாடின்றி தெய்வ நம்பிக்கையைக் கற்பிப்பதில் மிகவும் கடன்பட்டது. ஆகவே பெரியோர்களே, எங்களுக்கு இன்றுபோல் என்றும் ஊக்கமளித்து இப் பள்ளி வளர்ச்சியில் உறுதுணை புரிய வேண்டுமெனக் கேட்டுக் கொண்டு இந்த அறிக்கையை முடிக்கிறோம்.

இன்னணம்,

பள்ளி நிர்வாகியும், ஆசிரிய, ஆசிரியைகளும்,

ஸ்ரீ மு. வி. பள்ளி, கம்பம்.

# ஸ்ரீ முக்தி விநாயகர் உயர் துவக்கப் பள்ளி

கம்பம் (மதுரை மாவட்டம்)

---

## பொன் விழாவின் போது வாசித்தளித்த பள்ளி அறிக்கை.

(8-9-63)

மாட்சிமை தங்கிய தலைவர் அவர்களே! கல்வித்துறை வளர்ச்சிக்குப் பல புதுமைகளைச் செய்த—செய்து வருகிற அன்புசால் இயக்குநர் அவர்களே! கல்வித் துறை அதிகாரிகளே! கம்பம் நகர இருபால் பெரியோர்களே! எனைய நண்பர்களே! மாணவ மாணவிகளே! உங்கள் அனைவருக்கும் இப் பள்ளி நிர்வாகத்தின் சார்பாக வணக்கம்.

கண்கொள்ளாக் காட்சியாக விளங்கும் இந்தத் திருவிழா நாளில், இப்பள்ளியின் வரலாற்றையும், இது ஆற்றி வருகின்ற பணிகளையும் விளக்குவது எங்கள் தலையாய கடமை.

1913-ம் ஆண்டு இப்பள்ளியானது ஸ்ரீ முக்தி விநாயகர் கோவில் மதிற்கூடத்தின் முன்பக்கத்தில், இதன் நிறுவனர் உயர்திரு. P. K. முத்தையா பிள்ளை அவர்களால் சிறு திண்ணைப் பள்ளியாகத் தோன்றி, இற்றை நாளில் ஐம்பது ஆண்டுகள் நிறைவு பெற்றுள்ளது. 1915-ம் ஆண்டு முதல் இப் பள்ளி பற்றிய எழுத்துச் சான்றுகள் செவ்வனே கிடைக்கப் பெற்றுள்ளன.

இப் பள்ளியானது 1917ம் ஆண்டில் ஒன்று முதல் ஐந்து வகுப்புகள் அடங்கிய ஆரம்பப் பள்ளியாகி, நிறைவு பெற்ற அனுமதியும் அரசினர் மான்யமும் பெற்றது. ஐம்பது ஆண்டுகட்கு முன்னர் இந்த நகரில் (அக்காலத்து இது கிராமம்) பிறர் உதவியின்றி ஒருவரே தனித்துப் பள்ளியை நடத்தத் துணிந்தது அவரது ஊக்கமுடைமையைக் காட்டும் சிறந்த செயலாகும். அத்துணிவிற்குக் காரணம் தெய்வ நம்பிக்கையேயாகும். அதுவே அவரையும் வளரச் செய்து இந்தப் பள்ளியையும் வளர்த்தது என்றால் மிகையாகாது.

இப் பள்ளியானது 2—7—54 ஆம் நாள் முதல் ஐந்து வகுப்புகளைக் கொண்ட ஆரம்பப் பள்ளியாகவே நடைபெற்று வந்தது. 3—7—54 ஆம் நாளில் அரசினரின் அனுமதியுடன் ஆறும் வகுப்பு தொடங்கப் பெற்று, இற்றை நாளில் 60 ஆசிரியர்களையும், 2200 சிறார்களையும் கொண்ட ஒரு முழு உயர் துவக்கப்பள்ளியாக இயங்கி வருகிறது. அரசினரால் நடத்தப் பெறும் எட்டாம் வகுப்புத் தேர்

விற்கு இப்பள்ளியிலிருந்து முதன் முதலாக 1957ம் ஆண்டில் 10 மாணவர்கள் அனுப்பப்பட்டனர். அதில் 90 சதவீதம் தேர்ச்சி பெற்றனர். அது முதல் ஆண்டு தோறும் பெருமளவிற்கு மாணவர்களைத் தேர்விற்கு அனுப்பி, 85 சத வீதத்திற்குக் குறைவின்றி தேர்ச்சியைக் காட்டி வருகின்றது.

உயர் துவக்கப் பள்ளியாக மாற்றப்பட்ட பின் இப்பள்ளியானது மிக விரைவில் வளர்ச்சி பெற்று வருகிறது. ஆசிரியர்களின் அயராத உழைப்பும் உறுதியுமே இதற்குக் காரணம் என்று கூறலாம். இப் பாடசாலை ஊரின் மையத்தில் அமைந்துள்ளபடியால் இடநெருக்கடி மிக அதிகம். தேடி வரும் பெற்றோர்கள் மனம் வருந்தாமல் பிள்ளைகளைச் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்பதே நிர்வாகத்தின் குறிக்கோள். இத்தறுவாயில் இப் பள்ளிக்கு இடவசதி செய்து கொடுத்த ஸ்ரீ கம்பராயப் பெருமாள் கோவில் பொறுப்பாளர்கட்கு இப்பள்ளி தன் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

இப் பள்ளி அவ்வப்போது இலாகாவினர் அறிவிக்கும் ஆய்வுரைகளை ஏற்றுக்கொண்டு கீழே கொடுக்கப்பட்டிருக்கும் புள்ளி விவரப்படி செயல்பட்டு வந்திருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

(1) உயர்திரு. கல்வி இலாகா இயக்குநர் அவர்களால் கொண்டு வரப்பட்ட பள்ளிச் சீரமைப்புத் திட்டத்தினால் 1959–ஆம் ஆண்டில் இப்பாடசாலை 5050 ரூபாய் 75 ந.பை. மதிப்புள்ள பொருட்களையும், கட்டிடங்களையும் நிதியாகவும் பொருளாகவும் பெற்றுப் பயனடைந்துள்ளது.

(2) உயர்திரு. கல்வி இலாகா இயக்குநர் அவர்களால் கொண்டு வரப்பட்ட சீருடைத் திட்டத்தினால் இப்பள்ளியானது 1960–ஆம் ஆண்டு பெற்றோரிடமிருந்தும் மற்றோரிடமிருந்தும் 12500 ரூபாய் மதிப்புள்ள சீருடைகளைப் பெற்றுப் பிள்ளைகளுக்கு வழங்கியுள்ளது.

(3) 1962ஆம் ஆண்டு மீண்டும் 14570 ரூபாய் மதிப்புள்ள சீருடைகளைப் பெற்று திட்டத்தை நிறைவேற்றியது.

(4) மதிப்பிற்குரிய முதலமைச்சர் உயர்திரு காமராசர் அவர்களின் விருப்பத்திற்கிணங்க கல்வி இலாகா இயக்குநர் அவர்களால் கொண்டுவரப்பட்ட மதிய உணவுத் திட்டத்தைப் பின்பற்றி இற்றை நாள் வரையிலும் சிறப்பாக 108 பிள்ளைகளுக்கு மதிய உணவு அளித்து வருகிறது.

இப் பள்ளியானது நமது பாரத நாட்டின் எல்லையைப் பாதுகாப்பதற்காக, மாணவ மாணவிகளின் சார்பாக ரூபாய் 808—80

ந. பைசேவும், ஆசிரியர் சார்பாக ரூபாய் 991-30 ந. பைசேவும், நிர்வாகியின் சார்பாக ரூ. 551ம் ஆக மொத்தம் ரூபாய் 2351—10 ந.பைசேவைப் பல தவணைகளில் அனுப்பி வைத்துத் தன் கடமையை நிறைவேற்றியுள்ளது.

மேலும் கல்வி இலாகா உயர்திரு. இயக்குநர் அவர்களுக்குப் பாரத ஜனாதிபதி அவர்களால் பத்மஸ்ரீ விருது வழங்கியதைப் பாராட்டும் வகையில் உயர்திரு இயக்குநர் அவர்களுக்குப் போடி மாநகர் விழாவின் போது பொன்னாடை போர்த்திப் பெருமைப் படுத்தியது.

இப் பள்ளியில் படிப்பில் பின் தங்கிய மாணவ மாணவிகளுக்கு ஒவ்வொரு நாளும் பாடசாலை நேரத்திற்குப் பிறகு ஒரு மணி நேரம் வகுப்பாசிரியர்கள் தனிக் கவனம் எடுத்து அவர்களின் கல்வி வளர்ச்சிக்குத்துணை செய்து வருவதும்,இராப் பள்ளிகள் வைத்துப் பிள்ளைகளுக்குப் படிக்க வசதி செய்து வருவதும்,இப்பள்ளியின் சிறந்தபணிகளாகும். இத்துணையளவிற்கு ஆசிரியர்களின் தொண்டு காரணமாக ஆண்டுதோறும் நடைபெறும் அரசினர் தேர்வில் நான்கைந்து முதற் பரிசுகளை இப்பள்ளி மாணவர்கள் பெற்று ஷை பரிசுகளை போடி, திண்டுக்கல் முதலிய நகரங்களில் நடைபெற்ற விழாக்களில் மதிப்பிற்குரிய கல்வி அமைச்சர், உயர்திரு கல்வி இலாகா இயக்குநர் அவர்களின் கையால் பெற்றுப் பெருமை யடைந்தனர் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

இப்பள்ளியின் நிறுவனர் மறைந்தபின் இப்பள்ளி வளர்ச்சிக்குத் தக்க ஆய்வுரையாளராக இவ்வூர் பிரமுகரும், நகர மன்ற உறுப்பினரும் ஆகிய உயர்திரு. N.K. திருமலைவரத ராஜு பிள்ளை அவர்கள் உதவி செய்து வருவது எங்களது ஊக்கத்தை மேலும் அதிகரிக்க உதவுகிறது. மேலும்சுமார் 35 ஆண்டுகளாக இப்பள்ளியில் ஆசிரியப் பணிபுரிந்து வருபவரும், பள்ளி வளர்ச்சிக்கு உறுதுணையாயிருந்து வருபவருமாகிய உயர்திரு. B. வீரபத்திர பிள்ளை அவர்களின் சேவைக்கு இப்பள்ளி தன் நன்றியைச் செலுத்தக் கடமைப் பட்டுள்ளது என்பதையும் இந்த வாய்ப்பில் நன்றியுடன் கூறிக்கொள்ள விரும்புகிறோம்.

பாடசாலையில் ஆசிரியர்கள் நடந்து கொள்ள வேண்டியமுறை, பிள்ளைகளைப் பழக்க வேண்டிய வழி, போதிக்க வேண்டிய வழி இவைகளையெல்லாம் இற்றை நாள் பணி புரிந்து வரும் எங்களுக்கு இப் பள்ளி நிறுவனர் எங்கள் வழிகாட்டி—உயர்திரு. பெரிய உபாத்தியாயர் என்ற P. K. முத்தையா பிள்ளை அவர்கள் கற்பித்து விட்டு 1962ஆம் ஆண்டு மறைந்துவிட்டார். அவர் காட்டியவழியிலேயே

(53—ம் பக்கம் பார்க்க)

# திரு. P. K. முத்தையா பிள்ளை

## அவர்களின் வாழ்க்கை வரலாறு

நீர்வளமும், நிலவளமும், மலைவளமும் ஒருங்கே அமையப் பெற்ற, மதுரை மாவட்டத்தில், பெரிய குளம் தாலுகாவில், கம்பம் நகரில், 1885-ம் ஆண்டில், புலியபிள்ளை என்ற வேளாளப் பெருங் குடி மகனாருக்கு, ஓரே மகவாக முத்தையா பிள்ளை அவர்கள் பிறந்தார். அவருடைய குலத்தொழில் வேளாண்மையாக இருந்தும், அவர் சிறு வயதிலேயே எட்டளவில் கற்று; தன் சுய முயற்சியால், ஊரார் மெச்சும் அறிவுத் திறன் பெற்றார். அவர் தன் வாலிபப் பருவத்தில் வேளாண்மைத் தொழிலோடு, ஆசிரியத் தொழில்புரியவும் விரும்பினார். அந்த நல்லெண்ணத்தின் பயனாக, தன் வீட்டிற்கரு



காமையிலிருந்த, ஸ்ரீ முக்தி விநாயகர் திருக்கோவிலின் முன்பாக, அப்பகுதிச் சிறுவர்களை அழைத்து, 1913-ஆம் ஆண்டு சிறு திண்ணைப்பள்ளியாகத் துவக்கி, தானே ஆசிரியராகப் பணிபுரிந்து, தன்னை நாடிவந்த குழந்தைகளைச் சிறப்படையச் செய்தார். அப்பள்ளியே தற்போது கம்பம் நகரில் ஸ்ரீ முக்தி விநாயகர் உயர் துவக்கப்பள்ளி யாக வழங்கப் படுவதாகும். அவருடைய ஊக்கமும், உழைப்பும்

குழந்தைகளின் வருகையை அதிகரிக்கச் செய்தது. நாளடைவில், 1917-ம் ஆண்டில், இதனை ஒரு முழு ஆரம்பப் பள்ளியாக, அரசினர் மான்யத்துடன் அமைத்து, சிறப்பாக வளர்த்து வந்தார். அன்று முதல் இன்றுவரை, அவர் ஆசிரியப் பெருமக்களுக்கு, பல வழிகளிலும், நல்ல ஊக்கமும் திறமையும் ஊட்டி, சிறந்ததோர் வழிகாட்டியாக விளங்கினார். மாணவ, மாணவியர்க்குச் சிறந்த ஆசானாகவும், திகழ்ந்தார். அதன் காரணமாக அவர் அந்நகர் மக்களால் "பெரிய உபாத்தியாயர்" என்ற சிறப்புப் பெயரால் பாராட்டப் பெற்றார். இவ்வூரில் பள்ளிகள் அநேக மிருந்துங்கூட இப்பள்ளியின்மீது பெற்றோர் நல்லெண்ணம் வளர்ந்து வந்ததற்குக் காரணம், அவர் பெற்றோரிடமும், மற்றோரிடமும் செலுத்திய அன்பும், மாணவ மாணவியர்க்குக் கற்பித்த கல்வித்தரம், ஒழுக்கம், கடமை ஆகியவைகளுமே யாகும். தன்னுடைய காலம் முழுமையும் கல்விப் பணிக்காகச் செலவிட்ட அப்பெரியார், 1961-ம் ஆண்டு ஓய்வெடுக்கும் பொருட்டு, நிர்வாகப் பொறுப்பு முழுமையும் தன்னுடைய ஒரே புதல்வன் சுருளிவேலுச்சாமி அவர்களிடம் ஒப்படைத்தார். கல்விப் பணி புரிந்து, "தோன்றிற் புகழொடு தோன்றுக" என்ற வள்ளுவன் வாக்கினை மெய்ப்பித்துவிட்ட பெரிய உபாத்தியாயர் அவர்கள் தன்னுடைய எழுபத்தெட்டாம் வயதில் 1962-ம் ஆண்டு விண்ணுலகடைந்தார். அன்னாரின் இழப்பு, கம்பம் நகரின் கல்வி முன்னேற்றத்திற்கு ஒரு குறையே என்றும் கூறலாம். எனினும் அக் குறையை நீக்கும் பொருட்டு, அவர் மைந்தர் மிக்க திறமையோடு அப்பள்ளியை நடாத்தி வருவது, மிகவும் பாராட்டற்குரியது.

இத்துணையளவு சீரிய முறையில் வளர்ந்தோங்கிய அக்கல்விக் கலைக்கூடம், 2200 இளஞ்சிறார்களையும், 60 ஆசிரியர்களையும் தன்னகத்தே கொண்டு தனிப்புகழெய்தி, இவ்வாண்டு(1963-ல்)செப்டம்பர்த் திங்கள் 8-ம் நாள், 50 ஆண்டு நிறைவு பெற்று, பொன் விழாவைக் கொண்டாடிற்று. அவ்வமயம் சென்னை மாநிலக் கல்வி இயக்குநர் அவர்களும், முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களும், மற்றும் பல அறிஞர்களும் விழாவில் கலந்து சிறப்புரையாற்றி, நல்வாழ்த்துக்கள் பல நவின்றனர்.

**வாழ்க மு. வி. பள்ளி! வளர்க அதன் தொண்டு!!**

# புதிதாக உருவாகியுள்ள 'மலாசியா' கூட்டமைப்பு

## இணைந்த நாடுகள்பற்றிய விவரம்

வளம்மிக்க பொருளாதாரம், மாண்புமிக்க ஆட்சித் தலைவர்கள், உலகில் எந்த நாட்டிலும் இல்லாத அளவுக்குக் குழப்பமூட்டும் இனப்பிரிவு அமைப்பு ஆகியவற்றைக் கொண்டதாகத் திகழ்கிறது 15–9–63 அன்று அமைந்த 'மலாசியா' கூட்டமைப்பு!

'மலாசியா' வின் மொத்த நிலப்பரப்பு 1,28,558 சதுர மைல்களாகும். இதில், மலாசியாவில் அடங்கியுள்ள மலாயாவின் நிலப்பரப்பு 50,700 சதுர மைல்கள்; சிங்கப்பூரின் நிலப்பரப்பு 200 சதுர மைல்கள்; வடக்கு போர்னியோவின் (சாபா) நிலப்பரப்பு 29,388 சதுர மைல்கள்; சாரவாக்கின் நிலப்பரப்பு 48,250 சதுர மைல்கள்.

மக்கள்தொகை விவரம் வருமாறு :—

மலாசியா: 72,32,000 பேர்; சிங்கப்பூர்: 17 இலட்சம்; சாரவாக்: 7 இலட்சத்து 80 ஆயிரம்; சாபா : 4 இலட்சத்து 75 ஆயிரம்.

இந்த மக்கட் தொகைக் கணக்கு 1961–ம் ஆண்டு புள்ளி விவரங்களின் அடிப்படையிலானவை.

இனவாரியாகப் பார்த்தால் 'மலாசியா'வில் எந்த இனத்தவருக்கும் முழுப்பெரும்பான்மை இல்லை. எனவே, இது எண்ணிறந்த சிறு பான்மையினரைக் கொண்டதாக உள்ளது.

பல்வேறு இனத்தவரில் சீனர்கள்தான் அதிக எண்ணிக்கையில் உள்ளனர்; அதாவது, இங்கு 43 இலட்சம் சீனர்கள் உள்ளனர். இவர்களது எண்ணிக்கை மொத்த மக்கள்தொகையில் 42 சதவிகிதமாகும்.

இந்தோனேசிய வம்சாவழியினர் உட்பட மலாய் இனத்தவர் 40 இலட்சம் பேர் உள்ளனர். இது, மொத்த மக்கள்தொகையில் 39·2 சதவிகிதமாகும்.

இப்போது இந்தியர், பாகிஸ்தானியர் என்று இருவகையாகப் பிரிக்கப்படும், இந்திய வம்சாவழியினர் மலாயாவில் 8 இலட்சத்து 13 ஆயிரம்பேர் (11·2 சதவிகிதம்) உள்ளனர்; 'மலாசியா' வில் இவர்களின் எண்ணிக்கை 9 இலட்சத்து 55 ஆயிரமாக உயரும்.

'மலாசியா'வின் மக்கட் தொகையில் இந்திய வம்சாவழியி

னர் 9·4 சதவிகிதமாக இருப்பர். சிங்கப்பூரிலுள்ள இந்தியர்கள் காரணமாகவே 'மலாசியா'வில் இந்தியர் தொகை உயருகிறது.

சாரவாக்கிலும், வடக்கு போர்னியோவிலும் இந்தியர் ஏதோ அங்குமிங்குமாக மிகக் குறைந்த எண்ணிக்கையில் உள்ளனர்.

மக்கள் நெருக்க விகிதமும் 'மலாசியா'வில் இடம்பெறும் பகுதிகளுக்கிடையே மாறுபட்டதாக உள்ளது. செல்வம் மிகுந்த தீவான சிங்கப்பூரில் சதுர மைலுக்கு 7,600 பேர்விதம் வசிக்கின்றனர்; மலாயாவில் சராசரியாக சதுர மைலுக்கு 143 பேர் விதமும், பெரிதும் காடுகள் நிறைந்த சாரவாக், வடக்குபோர்னியோ பகுதிகளில் சதுர மைலுக்கு 16 பேர் விதமும் வசிக்கிறார்கள்.

பயிரிடும் நிலத்தைக் கணக்கிட்டால் சாரவாக்கிலும், வடக்கு போர்னியோவிலும் 3 சதவிகித நிலத்தில்தான் நிரந்தர வேளாண்மை நடைபெறுகிறது.

மலாயாவின் மொத்த நிலப் பரப்பில் 17 சதவிகித நிலத்தில் சாகுபடி நடைபெறுகிறது. சிங்கப்பூரில் விவசாயம் மிகமிகக் குறைவு.

சிங்கப்பூர் வாசியின் சராசரி நபர்வாரி ஆண்டு வருமானம் ரூ. 1,900 ஆகும். 'மலாசியா'விலேயே இது அதிகபட்சமானதாகும்.

இதற்கு நேர்மாறாக, சாரவாக் வாசியின் சராசரி நபர்வாரி ஆண்டு வருமானம் ரூ. 850 ஆகும்; எனினும், இது, தென் கிழக்கு ஆசியாவிலுள்ள பல பகுதிகளைவிட அதிகமானதாகும்.

மலாயாவாசியின் சராசரி நபர்வாரி ஆண்டு வருமானம் ரூ. 1,240 ஆகும்.

'மலாசியா' முழுவதையும் கணக்கில் கொண்டால் உலக பாங்கி நிபுணர்கள் கணக்கின்படி சராசரி தனி நபர் ஆண்டு வருமானம் ரூ. 1,490 ஆகும்.

ஆனாலும், 'மலாசியா'ப் பகுதிகளில் வறுமை இல்லை என்று கூறிவிடமுடியாது. 'மலாசியா'விலுள்ள பழங்குடி மக்கள்தான் மோசமான நிலையில் உள்ளனர்; சீனர்களும், ஆசிய—ஐரோப்பியரும்வசதியான நிலையில்உள்ளனர்.

இந்திய வம்சாவழியினரில் ஆயிரக்கணக்கான பேர் தோட்டங்களில் தொழிலாளர்களாக வேலை பார்க்கின்றனர்; மற்றும் பலர் குமாஸ்தாக்களாகவும், சிறிய வியாபாரிகளாகவும் உள்ளனர்; ஒரு சிலரே செல்வம் மிக்க வியாபாரிகளாக உள்ளனர்.

மலாயாவில் வடக்கு, கிழக்குப் பகுதிகள் வறுமை மிகுந்தவையாக உள்ளன. சாரவாகிலும், வடக்கு போர்னியாவிலுமுள்ள மலை சாதியினர், பொருளாதாரரீதியில் மிகவும் பிற்பட்டவர்களாக உள்ளனர். இரப்பரின் விலை வீழ்ச்சி, செயற்கை இரப்பரினல் எழுந்துள்ள போட்டி

(51-ம் பக்கம் பார்க்க)

# புகழ் குவித்த புரவலர்

ந. ஜெகந்நாதன், எம். ஏ.

உலக அரங்கில் எத்தனையோ மாறுதல்கள் ஏற்பட்டு விட்டன, ஏற்பட்டு வருகின்றன. ஆனால் இங்கிலாந்தில் மட்டும் மன்னராட்சி முறை அசைக்க முடியாதபடி உறுதியாக அமைந்துள்ளது. மன்னராட்சியை ஒழிக்க அந்நாட்டு மக்கள் விரும்புவார்கள் என்பதற்கு ஒரு சிறு அறிகுறி கூடக் காணோம். சென்ற நூற்றாண்டில் ஐரோப்பாவில் மட்டும் இருபது மன்னர்கள் ஆட்சி புரிந்து வந்தனர்; இப்போது அங்கே ஐந்து மன்னர்களே உள்ளனர். மற்றப்பதினைந்து நாடுகளில் மன்னராட்சி முறை ஒழிக்கப்பட்டுவிட்டது. இங்கிலாந்தில் மட்டும் மன்னர்கள் ஏன் தனிச் சிறப்பு வாய்ந்தவர்களாய் உள்ளனர்? ஆங்கில மன்னர்கள் மக்களோடு மக்களாய் அவர்கள் இன்ப துன்பங்களில் பங்கு கொள்பவர்களாய், மக்களின் விருப்பப்படி இயங்கும் ஓர் அலங்காரப் பொம்மைக் குடும்பமாக, தங்கள் வாழ்க்கை வழிகளை அமைத்துக் கொண்டுள்ளனர். தங்கள் வாழ்வு மக்களிடம்தான் உள்ளது என்பதை அறிந்து கொண்டுவிட்டனர் மன்னர் பரம்பரையினர். ஆகவே அவர்கள் மமதை பிடித்தவர்களாகவோ மக்களை அடிமை விலங்குகளைப் போல் நடத்துபவர்களாகவோ இல்லை. ரொட்டி கிடைக்கவில்லை என்றால் கல்லைத் தின்னுங்கள், புல்லைச் சாப்பிடுங்கள் என்று கூறும் கொடுங் கோலர்களாக இல்லை.

அந்தக் கொடுங் கோலர்களின் தலைகள் கிள்ளி எறியப்பட்டுத் தரையை முத்தமிடச் செய்தவர்கள் சாதாரண மக்கள் தாம் என்ற வரலாற்றுப் பாடத்தை மறந்து விடவில்லை அவர்கள். மக்கள் நினைத்தால் எந்த நேரத்திலும் தங்கள் ஆட்சி முறையை ஒழித்துக் கட்டிவிடக் கூடும் என்பதை உணர்ந்தவர்களாய் உள்ளனர். இப்படிப்பட்ட மன்னராட்சி முறை இங்கிலாந்தில் நிலைபெற்று நிற்பதற்குப் பல நல்ல மன்னர்கள் காரணமாய் இருந்தனர். விக்டோரியா பேரரசி முதல் ஐந்தாம் ஜார்ஜ் வரை, இன்றைய அரசி எலிசபெத் இறுதியாகப் பல அரசர்கள் தங்கள் நல்லெண்ணத்தால் மக்கள் உள்ளத்தில் நம்பிக்கை ஒளி ஊட்டி மன்னராட்சி முறையை நிலைத்து நிற்கச் செய்துள்ளனர்.

ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் இங்கிலாந்தை ஆள வந்த சமயம்—நாட்டில் பல்வேறு குழப்பங்கள் தலைதூக்கி நின்றன; அரசியல் கட்சிகள் தங்களுக்குள் போட்டி போட்டுக் கொண்டிருந்தன; மதப் பிரிவுகளுக்குள் சண்டை சச்சரவு வேறு நடந்து

கொண்டிருந்தது; தொழிலாளர்கள் முதலாளிகளுக்குள் நடந்து கொண்டிருந்த "வர்க்கப் போராட்டம்" வேறு. லாயிட் ஜார்ஜ் போர்க்கொடி உயர்த்தி எல்லாரையும் கிளர்ச்சிக்குத் தூண்டிக் கொண்டிருந்தார். தெருவில் நடமாடிக் கொண்டிருக்கும் போதே திடீரெனக் கலகம் ஏற்படும்; அடிதடி; குத்து; வெட்டு நடக்கும். அந்த அளவிற்கு எங்கு நோக்கினும் கசப்பு வளர்ந்திருந்தது. போதாக் குறைக்கு மக்கள் சபைக்கும், பிரபுக்கள் சபைக்கும் இடையில் தகராறு நடந்த வண்ணமிருந்தது. தொழிற்சாலைகள் பலவற்றில் வேலை நிறுத்தம் நடந்ததால், ஏழைகள் வீடுகளில் அடுப் பெரியவில்லை. இந்தச் சமயத்தில்—

ஜெர்மனிக்கும் இங்கிலாந்திற்கும் போர் தொடங்கியது. ஜார்ஜ் மன்னர் சும்மா இருந்து விடவில்லை. தம் கடமைகளை முழுக்க முழுக்க உணர்ந்தார்; நாட்டு மக்கள் தம்மிடம் எதிர் பார்ப்பதைவிட அதிகமாகவே நாட்டுக்கு உழைக்க உறுதி பூண்டார். உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ?

நாள்தோறும் அதிகாலையில் எழுந்து கொள்வார்; நீண்ட நேரம் தம் அறையில் உட்கார்ந்து அரசியல், போர்ப் பிரச்சனைகளை ஆராய்வார். தமது முதல் அமைச்சருடன் ஆலோசனைகள் நிகழ்த்துவார். போர் முடியும் வரை தமது சில தேவைகளைக் குறைத்துக் கொள்ள முடிவு செய்து கொண்டார். தனக்கு நாள்தோறும் தரப்படும் மது பானவகைகளை நிறுத்தச் செய்தார். வேலை செய்த நேரம் போக மற்ற நேரங்களை வீணே கழிக்கவில்லை. தனது போர்ப் படைகள் தங்கி இருக்குமிடம் செல்வார். அவர்களிடம் பேசி உற்சாக மூட்டுவார். கடற்படையினரிடம் பேசி மகிழ்ச்சி தருவார். விமானப் படையினரிடம் உரையாடி ஊக்கம் தருவார். ஒரு படைக்கு இதைவிட வேறு உற்சாகம் வேண்டியதில்லை அல்லவா? ஒரு பேரரசின் மாமன்னர் அல்லவா வந்து தங்களிடம் பேசுகிறார்? அதிலும் நாட்டுப் பற்றும், அரசரிடம் பய பக்தியும் கொண்ட ஆங்கிலப் படைகள் இதனால் போர் உற்சாகம் கொள்ளத் தவறவில்லை.

அரசர் எவ்வழி, அரசியும் அவ்வழி அல்லவா? மேரி அரசியும் தன் கணவர் குணமறிந்து தன் கடமை ஆற்றத் தவறவில்லை. மருத்துவ நிலையங்களுக்கும், முதல் உதவி நிலையங்களுக்கும், அடிக்கடி சென்று ஆறுதல் கூறுவதைக் கடமையாகக் கொண்டிருந்தார். மேரி அரசி தன் தோட்டத்தில் தொழிலாளர்கள் ஆப்பிள் பொறுக்கும்போது, கூட இருந்து அவர்களுக்கு உதவி புரிவதுண்டு. அரசியின் மெய்காப்பாளரான ஒரு பெண் மணி அரை மணிநேரத்தில் தனக்குக் களைப்பு மேலிட்டதாகவும், ஆனால் அரசியோ விடாமல் ஆப்பிள்களைப்பொறுக்கிக்கொண்

டிருந்ததால் தானும் தொடர்ந்து வேலை செய்ய வேண்டி வந்தது என்றும் குறிப்பிட்டிருக்கிறார். மருத்துவ நிலையங்கள் பற்றிய புள்ளி விவரங்கள் இவருக்குத் தண்ணீர் பட்டபாடம்.

பிரான்சுக்குச் சென்று ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் தமது படைகளைப் பார்வையிட்டார். அங்கு ஆங்கிலத் துருப்புகளுடன் இந்தியத் துருப்புகளும் பிரெஞ்சுப் படைகளும் இருந்தன. பின்னால் அவர் சுமார் முந்நூறு முறை மருத்துவ மனைகளைப் பார்வையிட்டதாகவும் ஐம்பதாயிரம் பேர்களுக்குப் போர்ப் பதக்கங்களை வழங்கியதாகவும் கணக்கிடப் பட்டுள்ளது. கடமையிலிருந்து தவறாத இம்மன்னர், தபால் தலைகளைச் சேகரிப்பதைப் பொழுது போக்காகக் கொண்டிருந்தார். அமைதியும், பண்பும் கொண்ட இவர் நேரம் கிடைக்கும் போது உருளைக்கிழங்கு பயிரிடுவதுண்டு.

அடிக்கடி கடற்படையினரைப் பார்வையிடுவார்; கப்பல் கட்டும் தளங்களுக்குச் செல்லுவார்; தமது அரிய யோசனைகளை வழங்குவார்; ஆயிரக்கணக்கானவர்களும், அருமையான நண்பர்களும் போரில் இறந்து விட்டபோது அதை எண்ணி எண்ணிக் கண்ணீர் வடிப்பார். ஆனால் அவர் கோழை அல்லர். ஒரு சமயம் அவர் இந்தியப் படைகளைப் பார்வையிட மேலுக்கு அணியும் ஓவர் கோட் இல்லாமலே சென்றார். "இந்தியர்கள் ஓவர் கோட் இல்லாமல் இருக்கிறார்கள்; நான் மட்டும் ஏன் அணிய வேண்டும்" என்று அவர் கேட்டதாக ஒருவர் எழுதி வைத்துள்ளார்.

இப்படிப்பட்ட மன்னர் ஆண்டபோது ஆங்கிலேயர்கள் தங்களுக்குள் இருந்த எல்லா விதமான மனமாச்சரியங்களையும் ஒழித்துவிட்டு ஒன்று பட்டதில் என்ன வியப்புள்ளது? சீனர்கள் நம்நாட்டின் மீது படை எடுத்த பிறகு நாட்டில் பிரமிக்கத்தக்க ஓர் ஒற்றுமை உணர்ச்சி எழுந்தது அல்லவா? அதுபோன்ற ஒரு ஒற்றுமை நிலைமையை ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் தம் அரிய குணங்களால், அறிவாற்றலால், தாம் நடந்து கொண்ட விதத்தால், உண்டாக்கினார். ஒருமுகமாகக் கொதித்தெழுந்தனர் ஆங்கில மக்கள் எதிரியோடு போரிட.

அயர்லாந்தில் சுதந்திரப் போர் உச்ச நிலையில் இருந்த சமயம்; ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் அல்ஸ்டர் பாராளுமன்றத்தைத் தொடங்க ஒப்புக் கொண்டார். அனைவருக்கும் பயம் உண்டாகியது. இச்சமயத்தில் மன்னர் அயர்லாந்திற்குப் போகிறாரே என்று. ஆனால் மன்னர் மனம் கலங்கவில்லை. "அரசு முடிவு எடுத்தது; கவலை ஏன், அயர்லாந்து செல்வேன்; என்னைப்பற்றி நான் ஒன்றுமே கவலைப்பட்டதில்லை" என்று கூறி விடாப்பிடியாகப் புறப்பட்

டார் அயர்லாந்திற்கு. தெருவில் திடீர் திடீரெனச் சவங்கள் விழுந்த ஒரு நாட்டில், மன்னரும், அரசியும் சென்றனர். எதிர்பாராத பிரமாதமான வரவேற்பு கிடைத்தது என்று சொல்லத் தேவையில்லை; "அமைதி, அமைதி" என்று அரசர் பேசிய பேச்சு மக்கள் மனத்தைக் கவர்ந்தது என்பதிலும் ஐயமில்லை. அதில் என்ன ஆச்சரியமென்றால், ஐந்தாம் ஜார்ஜ் மன்னரைக் காத்து நின்ற துருப்புகள் ஏறிச் சென்ற ஓர் இரயில் பெட்டி வெடி குண்டுகளால் தகர்க்கப் பட்டது. ஆனால் ஐந்தாம் ஜார்ஜ் மன்னரும், அரசியும் அமைதியாகவே திரும்பினர் ஒரு அசம்பாவிதமான நிகழ்ச்சியுமில்லாமல். அவர்களுக்குக் கிடைத்த வரவேற்பு அப்படியிருந்தது!

நகைச்சுவை உணர்ச்சி கொண்ட ஜார்ஜ் மன்னருக்கு கொடூரம், கொள்ளை, கொலை முதலியன அறவே பிடிக்காது. இவரது உறவினளான ஓர் இளவரசி ஒருநாள் நடனமாடப் போனாள். அவளது கோச்சு வண்டியை ஓட்டிக்கொண்டிருந்தவன் வண்டியில் நீண்ட நேரம் காத்துக் கொண்டு இருந்தான். வெளியே பனி கொட்டிக் கொண்டிருந்தது; பனியில் விறைத்துப் போய் வண்டியிலேயே அவன் உறைந்துபோய் மாண்டு விட்டான். கடமை உணர்ச்சி தவறாத அந்த வண்டிக்காரன் இறந்துவிட்ட செய்தி அந்த இளவரசிக்குத் தெரிவிக்கப்பட்டது. அவள் கொஞ்சம்கூட இரக்க உணர்ச்சி இல்லாதவளாய், "ஐயோ! அப்படியானால் நான் எப்படி வீட்டிற்குச் செல்வேன்?" என்று கேட்டாளாம். இந்தக் கதையைக் கேள்விப்பட்ட ஜார்ஜ் மன்னர் வண்டிக்காரனுக்கு மனம் மிக இரங்கினார்; வேண்டிய உதவி செய்தார். ஏழைகளிடத்தில் இரக்க உணர்ச்சிகொண்ட ஜார்ஜ் மன்னர், தன்னொத்தவர்கள் செய்த தவறுகளைக் கண்டிக்கத் தவறியதில்லை.

அடிக்கடி நோய்வாய்ப்பட்ட ஜார்ஜ் மன்னர், தம் மக்கள் கவலைப்படும் அளவுக்கு அவர்கள் உள்ளம் கவர்ந்திருந்தார். அவர் நோய்வாய்ப்பட்டபோது அலுவலகங்களுக்குச் செல்பவர்கள், அரண்மனை வாயிலில் எட்டிப் பார்த்து, அங்கு வெளியிடப் படும் செய்திகளை—மன்னரது உடல்நிலை எப்படி இருக்கிறது என்பது பற்றிய உண்மைகளை—தெரிந்துகொண்டு போவார்கள். ஞாயிற்றுக்கிழமை காலை வேளைகளில் எல்லா மாதா கோயில்களிலும் அரசரது உடல் தேறவேண்டும் என்பதற்காக ஏராளமான மக்கள் கூடி வழிபாடு செய்வார்கள்!

இவருடைய ஆட்சிக் காலத்தில் இங்கிலாந்தில் பெரும்பாலும் வேலை நிறுத்தங்கள், குழப்பம், வேலையில்லாத் திண்டாட்டம்

(11-ம் பக்கம் பார்க்க)

Edited Printed and Published by P. VEERARAGHAVAN
at Venkatesan Press, 2/65, Broadway, Madras-1.

# For Elementary and High Schools

## SOCIAL RECORD BOOKS

## சமூக பாடப் பயிற்சி நூல்

ஆசிரியர் : ஆர். சேஷாத்திரி, B.A.,B.T.
(இராமகிருஷ்ண மிஷன் உயர்நிலைப்பள்ளி, தியாகராய நகர்.)

### நான்காம் வகுப்பு

| | |
|---|---|
| **மாவட்டங்கள்** | |
| சென்னை | 0·75 ந. பை. |
| செங்கற்பட்டு | 0·75 ந. பை. |
| வட ஆற்காடு | 0·75 ந. பை. |
| தென் ஆற்காடு | 0·75 ந. பை. |
| சேலம் | 0·75 ந. பை. |
| கோயம்புத்தூர் | 0·75 ந. பை. |
| நீலகிரி | 0·75 ந. பை. |
| திருச்சிராப்பள்ளி | 0·75 ந. பை. |
| தஞ்சாவூர் | 0·75 ந. பை. |
| மதுரை | 0·75 ந. பை. |
| இராமநாதபுரம் | 0·75 ந. பை. |
| திருநெல்வேலி | 0·75 ந. பை. |
| கன்னியாகுமரி | 0·75 ந. பை. |
| ஐந்தாம் வகுப்பு | 0·94 ந. பை. |
| ஆறும் வகுப்பு | 0·87 ந. பை. |
| ஏழாம் வகுப்பு | 0·75 ந. பை. |
| எட்டாம் வகுப்பு | ரூ. 1·00 ந. பை. |
| ஒன்பதாம் வகுப்பு | ரூ. 1·25 ந. பை. |
| பத்தாம் வகுப்பு | ரூ. 1·25 ந. பை. |
| பதினோராம் வகுப்பு (S. S. L C.) | ரூ. 1·50 ந. பை. |

# பாடப் பயிற்சி திறவு கோல்

## (Key to Social Record)

4வது வகுப்பு முதல் 11வது வகுப்பு வரை சமூகப் பாடப் பயிற்சிகளுக்குத் திறவுகோல்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன. பாடசாலைகளில் பலவிதமான கம்பெனிகளின் சமூக பாடப்புத்தகங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. சில புத்தகங்களில் பயிற்சிப் புத்தகங்களில் கேட்கும் வினாக்களுக்கு விடை கிடைக்காமல் போகலாம். சில ஆசிரியர்களுக்கு உடனே விடை கொடுக்கச் சிரமம் ஏற்படலாம். வினா விடைகள், விளக்கங்கள் கொண்ட திறவுகோல் எல்லா வகுப்புகளுக்கும் வெளியிட்டிருக்கின்றோம். இது முக்கியமாக ஆசிரியர்கள் கையில் இருக்கவேண்டிய புத்தகமாகும். ஆதலால் திறவுகோல் இனாமாக எமது பயிற்சி நூல் வைத்துள்ள பாடசாலைகளுக்கு அனுப்பிவருகிறோம். சிலர் பிள்ளைகளுக்கும் விடையை வாங்கிக்கொடுத்து வருகிறார்கள். அது சிறந்த முறையல்ல. எனினும் ஒன்றுக்கு மேற்பட்ட திறவுகோல் வேண்டுபவர்களுக்கு பிரதி எட்டணா (50 ந. பை.) விலையில் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். பாடப்பயிற்சிகள் ஆர்டர் கொடுப்பவர்களுக்கு வகுப்பு வாரி ஒரு திறவுகோல் பயிற்சிகளோடு இனாமாக அனுப்பி வைக்கப்படும்.


திருவாளர் **தாமரைக் கண்ணன்** அவர்கள்

*தீட்டிய*

அழகிய நாடக நூல்கள்! பள்ளி நூல்நிலையங்களில் வைப்பதற்கேற்ற அருந்தமிழ்க் கருவூலங்கள்!

| | | ரூ. | காசு |
|---|---|---|---|
| 1. | வெண்ணிலா | 1 | 50 |
| 2. | மருதுபாண்டியர் | 2 | 00 |
| 3. | அலெக்ஸாண்டர் | 1 | 50 |
| 4. | கிள்ளிவளவன் | 1 | 25 |

கழிவு உண்டு. அருள் கூர்ந்து அணுகுங்கள்.

★

அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்

("ஆரம்பக்கல்வி" ஆபீஸ்)

94–95, புதுத்தெரு, மண்ணடி, சென்னை-1.


Venkatesan Press, Madras-1.